பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 6 வியாழக்கிழமை (20.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 175

# போர்க் குற்றங்கள்: புதிய வீடியோ மீண்டும் லண்டன் சனல்-4இல்

## ஆதாரங்கள் உண்டு என்கிறது தொலைக்காட்சி

லண்டன்,மே20

இலங்கையில், இராணுவத்தினரிடம் சரண் அடைந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் என்று கருதக்கூடிய தமிழ் இளைஞர்கள் பலர் -

ஆடைகள் களையப்பட்ட நிலையில், கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு, பதுங்குகுழி ஒன்றுக்குள் அமர்ந்திருப்பதையும் -

இராணுவத்தினர் அவர்களைச் சூழ்ந்து ஆயுதங்களுடன் நிற்பதையும் - காட்டும் வீடியோக் காட்சி ஒன்றைப் பிரிட்டனின் சனல் -4 தொலைக்காட்சி காண்பித்துள்ளது.

இதே தொலைக்காட்சி, கடந்த வருடத்தில் தமிழ் இளைஞர்கள் நிர்வாணமாக்கப்பட்டு, கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில், இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்படும் வீடியோக்காட்சியை வெளியிட்டிருந்தது.

இந்த வீடியோ புகைப்படக் காட்சிகள் உண்மையானவை என்பதை ஆதாரபூர்வமாக, விஞ்ஞான ரீதியாக, நிரூபிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் 'சனல் - 4' அறிவித்திருக்கின்றது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணைகளின்போது இந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இராணுவத்தினர் அளித்த வாக்குமூலங்கள் யுத்தக் குற்றச் சாட்டுகளை நிரூபிப்பனவாக அமைந்துள்ளன என்றும் 'சனல் - 4' தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சனல்-4 இந்த வீடியோக் காட்சிகளை விசேட ஒளிபரப்பாக வெளியிட்டது.

சனல் 4 தொலைக்காட்சி நிகழ்சியில், மேற்கோள் காட்டப்பட்ட இந்த இராணுவ அதிகாரியின் உண்மையான குரல் ஒலி பரப்பப்படவில்லை. அவரது உருவம் தெளிவாகக் காட்டப்படவில்லை.

இந்த நிகழ்ச்சியில் அவரது குரலுக்குப் பதிலாக வேறொரு குரல் ஒலிக்கவைக் கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய (24ஆம் பக்கம் பார்க்க)

## 'லைலா' புயல் எச்சரிக்கை!

கொழும்பு,மே20

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள 'லைலா' புயல் இலங்கையின் சப்பிரகமுவா, மேல், தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களைத் தாக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சுமார் 600 கிலோ மீற்றர் தொலைவிலும் இந்தியாவின் சென்னை நகருக்குக் கிழக்கே 185 கிலோ மீற்றர் தொலைவிலும், விசாகப்பட்டினத்துக்கு தென்மேற்கே 540 கிலோமீற்றர் தொலைவிலும் இந்தப் புயல் நிலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (24ஆம் பக்கம் பார்க்க)

## வீடியோவை முற்றாக நிராகரிக்கிறது இலங்கை

கொழும்பு,மே20

சனல் - 4 தொலைக்காட்சி புதிதாக வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுகளை பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம் முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பாகத் தூதரகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை அரசு மற்றும் அதன் படையினருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம் முழுமையாக நிராகரிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் பிடியில் சிக்கியிருந்த பொதுமக்களை விடுவிப்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையிலேயே படையினர் ஈடுபட்டனர் என்பதை சான்றுகளுடன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம்.

இவ்வாறன மனிதாபிமான நடவடிக்கையை முன்னெடுக்கும்போது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகள் பின்பற்றப்பட்டன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## போரின் முடிவே பிரச்சினைகளுக்கான தீர்வென நினையாதீர்கள்; தமிழரின் இறைமையும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே தீர்வு

### நாடாளுமன்றில் தமது கன்னிப் பேச்சில் கூட்டமைப்பின் ஈ.சரவணபவன் இடித்துரைப்பு

கொழும்பு,மே20

போரில் ஏற்பட்ட தோல்வி சில இனவாத சக்திகள் மத்தியில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஓர் அலட்சியப் போக்கை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் போரின் தோல்வி எமது போராட்டத்தின் தோல்வியல்ல. போரின் முடிவென்பது பிரச்சினைகளின் தீர்வாகிவிட முடியாது.



தமிழர்களின் இறைமையும் சுதந்திரமும் பாதுகாக்கப் படும்போது மட்டுமே இனப்பிரச்சி னைக்கான தீர்வினை எட்ட முடியும்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் தனது கன்னியுரையில் இடித்துரைத்துப் பேசினார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். நாடாளுமன்றில் அவர் ஆற்றிய உரையின் முழுவடிவமும் வருமாறு:-

எதிர்பாராத விதமாக இந்நாட்டின் ஏழு மாவட்டங்களிலும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழப்புகள், சொத்திழப்புகள், இடம்பெயர்வுகள் உட்பட பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கும் ஏறக்குறைய இரண்டு லட்சம் மக்களுக்கு எனது மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களுக்கு இயல்புவாழ்வு வெகு விரைவில் திரும்ப வேண்டும் என பிரார்த்தித்துக்கொண்டு எனது கன்னி உரையை ஆரம்பிக்கின்றேன்.

தென்னிலங்கை மக்கள் முகங்கொடுக்கும் அவலங்களுக்காக மனம் நெகிழும் நான் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு எமது மக்கள் அனுபவித்த அவலங்களையும் இன்றுவரை அவர்கள் அனுபவிக்கும் (02ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற காலநிலை தொடரும் அறிகுறி 15 பேர் பலி; 4 லட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு,மே20

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து நான்கு நாள்களுக்கு மேலாகப் பெய்து வரும் பலத்த மழை காரணமாக 15பேர் உயிரிழந்துள்ளனர். 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய மோசமான காலநிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வங்காள விரிகுடாவை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள சுழல் காற்று காரணமாக தொடர்ந்தும் நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனுடன் கடும் காற்று வீசும் எனவும் எச்சரித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள சுழல் காற்று இலங்கையை நோக்கி வரமாட்டாது எனவும், இலங்கைக்கு வெளியிலேயே செல்லும் சாத்தியக்கூறுகள் உள்ளன எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டதால் ஐ.நா.சபையின் நிபுணர்கள் குழு நியமனத்தைத் தடுக்காது

### தலைமை அதிகாரி சொயிஸ் சொங் சொல்கிறார்

கொழும்பு,மே 20

இலங்கை தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூனுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழு உருவாக்கும் திட்டத்தில் எந்தவித மாற்றமில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் உண்மையை கண்டறியும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக் குழுவின் நடவடிக்கைகள், குறித்த நிபுணர்கள் குழுவின் நோக்கங்களை நிறைவேற்றாது எனவும் ஐ.நா. அறிவித்துள்ளது.

எனவே, ஐ.நா. நிபுணர்கள் குழுவின் உருவாக்கம் திட்டமிட்டபடி முன்னெடுக் கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிபுணர்கள் குழு உருவாக்கும் திட்டத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கைவிடவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் அதிகாரி சொயிஸ் சொங் தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தவணைப் பரீட்சைகள் பாடசாலை மட்டங்களில்

கொழும்பு,மே 20

நாட்டின் அரசப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான வருடாந்த தவணைப் பரீட்சைகளை பாடசாலை மட்டத்தில் நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த காலங்களில் பாடசாலை தவணைப் பரீட்சைகளை ஒழுங்கு செய்யும் போது எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் மேற் (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் முடிவே பிரச்சினைகளுக்கான தீர்வென....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துன்பங்களையும் இங்கு நினைவு கூரா மல் இருக்கமுடியாது. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் நாற்பதினாயிரத்துக் கும் மேற்பட்ட எமது மக்கள் கொல்லப்பட் டனர்; ஆயிரக்கணக் கானோர் ஊனமுற்ற வர்களாக்கப்பட்டனர்; ஏராளமானோர் காணா மற்போயினர்; பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இறுதியில் சுமார் 4 லட்சம் மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டனர்.

அதேவேளையில் பல ஆயிரம் இரா ணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இப்போ ரில் தங்கள் உயிர்களை அர்ப்பணித்த படை வீரர்களுக்காக வெற்றிவாரம் கொண்டாடி அவர்களை நினைவு கொள்கின் றீர்கள்; 18ஆம் திகதியன்று விளக்கேற்றி அவர்க ளுக்கு அஞ்சலி செலுத்துகிறீர்கள். நாட்டுக் காக உயிரிழந்தவர்களைப் போற்றுவது ஒரு முக்கியமான தேசிய கடமையாகும். அதே அஞ்சலியில் நாமும் எம்மை மனப்பூர்வ மாக இணைத்துக்கொள்கிறோம்.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் நாம் எமது மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமையை இழந்துள்ளோம். எமது மக்கள் உயிரிழந்த புதைக்கப்பட்டும் புதைக்கப்படா மலும் சடலங்களாகக் கைவிடப்பட்ட முள்ளி வாய்க்கால் இன்று தடை செய்யப்பட்ட பிர தேசம். நாம் அங்கு சென்று அஞ்சலி செலுத்த முடியாது. அது மட்டுமன்றி எமது மக்க ளின் உரிமைகளுக்காகப் போராடி உயிர்த்தி யாகம் செய்த எமது இளைஞர்களின் கல் லறைகள் இடித்துநொறுக்கப்பட்டு விட்டன. அவை இருந்த பிரதேசங்கள் முள்வேலி யிடப்பட்டு தடுக்கப்பட்டுவிட்டன. அதா வது எமது மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மலர் தூவி விளக்கேற்றி அஞ்சலிக்கும் உரிமை மறுக்கப்பட்டுவிட்டது.

இத்தகைய எமது உணர்வுகளை மதிக்காத கொடூரமான பாரபட்ச நடவடிக்கைகள் இந்நாட் டில் நிரந்தர சமாதனத்தை கொண்டுவர உத வுமா? தமிழ் மக்கள் தாங்கள் அடக்கி ஒடுக் கப்படவில்லை என்ற உணர்வை ஏற்படுத்த உதவுமா? இந்நாட் டின் சுபீட்சத்தை நோக் கிய பயணத்தில் எம் இரு தேசிய இணங்களும் கரம் கோர்த்து நடைபயிலத் துணைநிற்குமா?

கௌரவ உறுப்பினர்களே!

இக்கேள்விகளைத் தங்களின் மேலான சிந்தனைக்கு விட்டு விடுகிறேன். நாங் களும் உங்களைப் போன்று சகல உரிமை களும் பெற்ற மக்களாக, இந்தத் தேசத் தைக் கட்டி எழுப்பும் பணியில் இணைந்து கொள்ளும் எங்கள் அபிலாசையை நியாய பூர்வமாகவும் திறந்த மனதுடனும் பரி சீலிப்பீர்கள் என நம்புகிறேன்.

### நியாயபூர்வமான நிரந்தரத்தீர்வு கிடைக்க வேண்டும் என்று விரும்பினார் பண்டாரநாயக்கா

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இலங் கைச் சட்டசபையில் சிங்களம் மட்டுமே அரச கருமமொழியாக இருக்கவேண்டும் எனப் பிரேரணை கொண்டுவரப்பட்ட போது தமிழும் சிங்களமும் ஆட்சிமொழி களாக இருக்கவேண்டும் எனத் திருத்தம் கொண்டுவந்தவர் மறைந்த முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண் டாரநாயக்கா அவர்கள். அதுமட்டுமன்றி இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி வேண்டும் என அங்கு வாதிட்டவரும் அவரே. சந் தர்ப்ப வசத்தால் அவர் 1956இல் தனிச் சிங்களச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியபோதும் தமிழ் மக்களின் எதிர்ப்புக் குரலுக்கு மதிப் பளித்து பண்டா - செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கினார். துரதிர்ஷ்டவசமாக இன வாதிகள் கொடுத்த நெருக்கடிகள் காரண மாக அவரே அதைக் கிழித்தெறிய நிர்ப்பந் திக்கப்பட்டார். பண்டா - செல்வா ஒப்பந் தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த நாடு சந்தித்து விட்ட பேரவலங்கள் ஏற்படுவ தற்கான சந்தர்ப்பங்கள் நிகழாமல் போயி ருக்கும். இந்தச் சின்னஞ்சிறு தீவு இப்படி யான ஒரு கொடிய பெரும் போரை சந்திக்க வேண்டிய தேவை எழுந்திருக்காது என் பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அவரால் நிறைவேற்றமுடியாமல் போனா லும், தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயபூர் வமான, நிரந்தரமான ஒரு தீர்வு காணப் படவேண்டும் என்பதை அவர் மனப்பூர் வமாக விரும்பினார் என்பது வரலாற்றில் மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும்.

### நியாயமான தீர்வு இன்றைய தேவை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம் பித்தது உட்பட அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா வின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தோளோடு தோள் நின்று செயற்பட்டவர் ஜனாதிபதியின் தந்தையார் அமரர் டி.ஏ.ராஜபக்ஷ என் பதை இங்கு தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அமரர்களான எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண் டாரநாயக்கா, ராஜபக்ஷ ஆகியோரின் அரசி யல் பாரம்பரியத்தின் வழிவந்த நீங்களும் உங்கள் சகோதரர்களும் ஜனாதிபதியாக வும், பொருளாதார அமைச்சராகவும், பாது காப்புச் செயலராகவும், சபாநாயகராகவும் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய அதிகார பீடங்களில் வீற்றிருக்கிறீர்கள்.

தமிழ்மக்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களின் பாரம் பரிய நிலப்பிரதேசம் அங்கீகரிக்கப்பட்டு, நியாயமான உரிமைகள் வழங்கப்பட்டு ஒரு நிரந்தரமான ஐக்கியப்பட்ட ஒரு சமாதானத்தை உருவாக்கி தேசத்தை வளங் கொழிக்கும் பூமியாக மாற்றும் உரிமை யும், கடமையும் வேறு எவரையும் விட தங்களுக்கு அதிகமாகவே உள்ளது. அத் தகைய ஓர் அரிய வாய்ப்பைச் சரியானமுறை யில் தாங்கள் பயன் படுத்தவேண்டும் என்பதே எமது பெரு விருப்பமாகும்.

இதுவே கௌரவ ஜனாதிபதி அவர்களும் இச்சபையின் உறுப்பினர்களும் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டார நாயக்கா அவர்களுக்கும் தங் கள் தந்தையாருக்கும் ஆற்றும் மிகப்பெரும் கடமையாகும். மீண்டும் மீண்டும் பல் வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப் படும் இனவாத ஒடுக்குமுறைகளும், பார பட்ச நடவடிக்கைகளும் தமிழ் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளாகக் கருதும் மனப்பாங்கும் இந்தப் புனிதமான கடமை யைப் பாழடித்துவிடும் என்பதை தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

### தமிழர்களின் ஒப்புதல் இன்றி நிறைவேற்றப்பட்ட அரசமைப்புகள்

இன்றைய அரசியலமைப்பு எமது நாட் டுக்குப் பொருத்தமான முறையில் மாற்றப் படவேண்டும் என்ற கருத்து இன்று மேலோங் கியுள்ளது. நாமும் இக்கருத்துடன் உடன் படுகிறோம். 1972ஆம் ஆண்டிலும் 1978ஆம் ஆண்டிலும் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்புகள் தமிழ்மக்களின் ஒப்புதல் இன்றியே நிறைவேற்றப்பட்டவையாகும்.

உலகமயமாக்கல் என்ற வலைப்பின்ன லுக்கு வல்லரசுகளுக்கு நிலவும் ஆதிக்கப் போட்டியின் மத்தியிலும் பிராந்திய வல்லர சின் மேலாதிக்க நோக்கங்களுக்கு இடை யிலும் நாம் எமது இறைமையையும் தனித்து வத்தையும் பேணி நிமிர்ந்து நிற்கும் வகை யில் எமது அரசியலமைப்பு இருக்கவேண்டி யது அவசியமாகும். சிங்கள மக்கள் தமது தனித்துவத்தையும் இறைமையையும் பேணும் வகையிலும் தமிழ்மக்களும் இறை மையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் வகையிலும் அமையும் போதே நாம் ஐக் கியப்பட்ட மக்களாக எமது தேசத்தின் தனித் துவத்தையும் இறைமையையும் நிலை நிறுத்துவது சாத்தியமாகும். மீண்டும் மீண் டும் தேசிய இனப்பிரச்சினையை காரணம் காட்டி அந்நிய தேசங்கள் எமது நாட்டிற் குள் தலையிடுவதைத் தவிர்க்கமுடியும்.

எனவே புதிய அரசியல் அமைப்பு இவ் விளங்கங்களைக் கருத்தில் எடுத்து வரை யப்படும்போது தமிழ் மக்களின் சார்பில் எமது ஒத்துழைப்பு நிச்சயம் வழங்கப்படும் என்பதை இங்கு உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

இப்போரில் ஏற்பட்ட தோல்வி சில இனவாத சக்திகள் மத்தியில் இனப்பிரச் சினைத் தீர்வு தொடர்பான ஓர் அலட்சியப் போக்கை ஏற்படுத்தலாம். இப்போரின் தோல்வியானது எமது போராட்டத்தின் தோல்வியல்ல. இது போராட்ட வழிமுறை ஒன்றுக்குக் கிடைத்த தோல்வி மட்டுமே என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்.

அமைச்சர் டி.யூ குணசேகரா அவர்கள் ஒரு பத்திரிகைப் பேட்டியின் போது கூறிய வற்றை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'பிரபாகரன் தான் பிரச்சினை என்றால் பிரபாகரனின் இறப்புடன் பிரச்சினை முடிந்திருக்கவேண்டும். ஆனால் முடிய வில்லை. பிரபாகரனுக்கு முன்பும், பிரச் சினை இருந்தது; பின்பும் இருக்கிறது. பிர பாகரன்கள் பிரச்சினையை உருவாக்குவ தில்லை. பிரச்சினைகள்தான் பிரபாகரன் களை உருவாக்கு கின்றன''

எவ்வாறு அவர் பிரபாகரனின் முடிவு பிரச்சினையின் தீர்வாகிவிடாது என தெளிவுபடுத்துகிறாரோ அவ்வாறே நானும் போரின் முடிவு என்பதும் பிரச்சினைக ளின் தீர்வாகிவிட முடியாது என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

### சட்டவிரோத ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட வேண்டும்.

இனியும் போரின் முடிவு ஏற்கனவே இங்கு நிலவிய இறுக்கமான ஒரு சூழ் நிலையை தளர்த்திய தென்பதையும் சில கெடுபிடிகளை நீக்கின என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். அண்மைக்கால மாக இங்கு நடைபெறும் சம்பவங்கள் ஒரு பயங்கரசூழலையும் நிம்மதியின்மையை யும் ஏற்படுத்தி யுள்ளமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளேன். இன்று வடக்கில் கடத் தல், கொலை, கப்பம் என்பன ஒரு தொடரும் அபாயங்களாக உருவாகியுள்ளன. இவை மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை யீனத்தை யும் சில அரசியல் சக்திகள் பின்னணியில் இருக்கக்கூடும் என்ற ஐயத்தையும் ஏற்படுத் தியுள்ளது.

எப்படியிருப்பினும் சில தீயசக்திகள் கையில் இன்னமும் ஆயுதங்கள் இருப் பதே இதற்கான வாய்ப்புக் களை உருவாக்கு கின்றன என்பதை மறுக்கமுடியாது.

எனவே சட்டவிரோதமான ஆயுதங்கள் அனைத்தும் களையப்படவேண்டும் என் பதை இந்நேரத்தில் எமது மக்களின் சார் பில் வலியுறுத்தவிரும்புகிறேன்.

நாம் இறைமையும் சுதந்திரமும் உள்ள மக்களாக எங்கள் நியாயமான உரிமைகள் அங்கீகரிக்கப்படும் நிலையில் எமது தேசத்தின் இறைமையையும், சுதந்திரத்தை யும் பாதுகாத்து சுபீட்சம் நோக்கிய பாதை யில் பயணிக்க உங்களுடன் ஒன்றிணை வோம் எனக் கூறி நிறைவு செய்கிறேன் - என்றார்.

---

## சீரற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் நாட்டின் மேல் மாகா ணம், சப்ரகமுவ மாகாணம், தென்மாகா ணம், மத்தியமாகாணம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழை தொடர்ந்து பெய்யும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கரை யோரப் பகுதிகளில் கடும் மழை தொடர்ந்து பெய்யுமென வளிமண்டலவியல் திணைக் களம் அறிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் கம்பஹா மாவட் டம் தொடர்ந்தும் பாதிப்படைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் சீதுவ பகுதியில் உள்ள தடுகம ஓயா பெருக்கெடுத்துள்ளமையால் அம்பல முல்லப் பகுதியில் வாகனப் போக்குவரத் துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

### நீரில் மூழ்கும் கிராமங்கள்

கடும் மழை காரணமாக கம்பஹா மாவட்டத்தின் சில பிரதேசங்களில் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள் ளன.

சீதுவை, வத்தளை, பியகம உள்ளிட்ட சில பிரதேசங்களிலுள்ள வீடுகள் வெள்ளத் தில் மூழ்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

கட்டுநாயக்கா - ஆடியம்பல ஊடாக மினுவங்கொட பிரதான வீதியிலிருக்கும் நயக்கந்த பிரதேசமும் நீரில் மூழ்கியுள் ளது. பேலியகொட பிரதேசத்தில் களனி கங்கைக்கு அண்மையிலுள்ள சுமார் 100 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளநீர் மட்டம் 3 தொடக்கம் 4 அடி உயர்ந்துள்ளமையால் உணவுப் பொருள் களை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாத்தாண்டியா ஊடாகச் செல்லும் குளியாப்பிட்டிய - கொழும்பு வீதியின் சில இடங்கள் நீரில் மூழ்கியுள்ளமையால் போக்கு வரத்துப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### 10 இடர் முகாம்கள் அமைப்பு

பல நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் இடி, மின்னலுடன் கூடிய கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரண மாக கொழும்பு மாவட்டத்தில் நிர்க்கதி நிலைக்கு ஆளானவர்களுக்காக 10 இடர் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என கொழும்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரி எச்.பத்திரன தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று கடும் காற்றுடன் தொடர்ந்து பெய்த மழையால் பல வீடு களின் கூரைகள் வீசி எறியப்பட்டுள்ளன. மரங்கள் சரிந்து வீழ்ந்தமையால் அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. உப்புக் குளம், பெரியகமம், எழுத்தூர், சாந்திபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இளையதம்பி இந்து வித்தியாலய மாணவன்

**செல்வன் மு.வாகீசன்**

அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டி - 2010இல் கவிதை ஆக்கம், பிரிவு - 4இல், யாழ். வலயத்தில் முதலாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றமைக்காக அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர்கள், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்.

(98548)



## உதவிக் கணக்காளர் தேவை



எமது நிறுவனத்திற்குப் பொருத்தமான தகுதியுடைய உதவிக் கணக்காளர் ஒருவர்தேவை. பின்வரும் தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமை:
★G.C.E. (A/L)
★CIMA (Stage II)/AAT/HNDA
★Computer Knowledge

தொழில் முன்அநுபவம்:
குறைந்தது 2 வருடங்கள் கடமையாற்றிய அநுபவம். அரச திணைக்களங்களில்கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்**

விண்ணப்பங்களை 23.05.2010 இற்கு முன் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கவும். தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

முகாமையாளர்,
'உதயன்'
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### இராஜரட்ணம் கமலசூரியன்



திருநெல்வேலி கிழக்கு, கெனடிலேனைச் சேர்ந்த இராஜரட்ணம் கமலசூரியன் நேற்று (19.05.2010) புதன் கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார்காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் சின்னம்மா (மணி) தம் பதியினரின் அன்பு மக னும், உதயசூரியன் (சுவிஸ்), பத்மசூரியன் (சுவிஸ்), லோகசூரியன் (சுவிஸ்), சுகர்ணா (தாய் லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வ ராணி, சோபனா, தீபனா, ரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விதுஷா, ரதுஷன், ரதுஷா, சுரித்தா, சுனேந்திரன், சுஜித்தா, சுகிர்தா, சுமித்தா, அஜ்ஷா, சானுஷா ஆகியோரின் சித்தப்பாவும், வேணுகோபன், கஜகோபன், நிக்சுஜா, ரானுஜன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியள வில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். T.P. 0213216206

(98405)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எதிர்பார்க்க எதுவும் இருக்குமா...?

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வுகாணுமாறு, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் நேரடியாக வற்புறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற ஜி - 15 நாடுகளின் உச்சி மாநாட்டின்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, அமைச்சர் பீரிஸிடம் இது விடயமாகப் பேசினார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

சகல சமூகத்தினரும் சம பங்களிப்புச் செய்யக் கூடிய அரசியல் தீர்வு ஒன்று தேவை என்பது குறித்தே இந்திய அமைச்சர் பிரஸ்தாபித்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் சிறுபான்மை இனத்தவரான தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு அவசரமாகத் தீர்வு காணவேண்டும் என்ற எமது விருப்பத்தை இலங்கையிடம் வற்புறுத்தியுள்ளோம் என்று அமைச்சர் கிருஷ்ணாவே தெரிவித்திருக்கிறார்.

மேற்கண்ட தகவல்களில் இரண்டு அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவையாகக் கருதக் கூடியவை. இனப்பிரச்சினைக்கு அவசரமாகத் தீர்வு காணப்படவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி இருப்பது ஒன்று. சகல சமூகத்தினரும் சமமாகப் பங்களிப்புச் செய்யக்கூடிய அரசியல் தீர்வு குறித்து இந்தியா ஆராய்ந்துள்ளதான தகவல் இரண்டாவது.

இவற்றின் மத்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் இந்தியாவுக்குச் செல்வார் என்ற செய்தியும் கிடைத்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியா காட்டும் கரிசனை வரவேற்கத்தக்கது. ஆனால் இலங்கை விரைவான தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதில் ஆர்வம் கொண்டுள்ளது என்பதற்கான சமிக்ஞை எதுவும் இல்லை.

நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் குழுக்களை நியமித்து அவற்றில் காலத்தை இழுத்தடித்து இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து சர்வதேச சமூகம் மற்றும் அரசாங்கங்களின் எதிர்பார்ப்பின் வேகத்தைத் தணித்து விடுவதும் -

அதன் பின்னர், தனக்குச் சாதகமான நிலையை உருவாக்குவதற்கு வழமை போன்று பல ''கயிறு திரிப்புகளை'' அவிழ்த்து விடுவதும் -

வேகம் தணிந்த பின்னர் வெறும் பெயருக்குத் தான் நினைத்த உப்புச் சப்பற்ற தீர்வு ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தனக்குள்ள ''அசுர'' வாக்குப் பலத்தைப் பயன்படுத்தி அதனை நிறைவேற்றி விட்டு -

எமது நாட்டு மக்களின் - அவர்களின் பிரதிநிதிகளின் - பெருவிருப்பத்துடன் இனப் பிரச்சினைக்கு 'இந்தத் தீர்வு' சட்டமாக்கப்பட்டுள்ளது. இதுவே நாட்டுக்கு உகந்தது என்று கூறி தமிழர்களுக்குச் சம அந்தஸ்தோ, சுயாட்சி அதிகாரமோ இல்லாத வெறும் அரசியல் சக்கை ஒன்றை இலங்கை அரசு ஒப்புக்குக் காட்டிக் கொள்ளும்.

இந்தியாவைத் திருப்திப்படுத்தும் பொருட்டு அங்கு நடைமுறையில் உள்ள ஆகக் குறைந்த அரசியல் அதிகாரம் கொண்ட அமைப்புக்குப் புதிய பெயர் சூட்டி முலாம் பூசிக்காட்டவே இலங்கை அரசு முயலுமென நிறையவே எதிர்பார்க்கலாம்.

இதனைவிட வேறு எந்த விதத்திலும் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்தில் அவர்களும் இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்று என்பதனை ஏற்றுக் கொண்டு திருப்தி தரக்கூடிய போக்கு எதுவும் மஹிந்த அரசிடம் இருந்து தென்படவில்லை.

இத்தகையதொரு பின்னணியில் இந்தியா விரும்பும் சிறிதளவு நியாயமுள்ள தீர்வைத்தானும் இலங்கை உருவாக்குமா என்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சந்தேகமாகவே உள்ளது.

இந்தியா தானும் தனது நாட்டில் உள்ளது போன்று அரைச் சமஷ்டி அரசியல் முறைமையையே ஆகக் கூடியதாக வலியுறுத்தும் என எதிர்பார்க்கலாம். அதற்கு மேல் அரை சென்ரி மீற்றர் கூட அதிகமாகச் சிபார்சு செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கையில் பூரண சமஷ்டி அமைப்பு ஒன்றை, உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்குமாறு இலங்கையை வலியுறுத்துமானால் ஏற்கனவே அங்குள்ள மாநிலங்கள் ''தொந்தரவு கொடுக்கும்'' என்ற அச்சம் இந்திய மத்திய அரசிடம் உண்டு.

ஆகவே இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவது குறித்த இலங்கை - இந்தியப் பேச்சுக்கள் தமிழர்களின் உண்மையான, முழுமையான அரசியல் உரிமைகளை வழங்க வகை செய்யும் என்று எதிர்பார்க்கலாம் என்று கூறுவதற்குரிய சாதகமான ஏதுக்கள் எதுவுமில்லை!

# யாழ்ப்பாணத்தில் இன்று அதிகாலை வரை 'லைலா' புயல்காற்றின் தாக்கம் நீடிக்கும்

## அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 20

வங்கக் கடலில் உருவான 'லைலா' புயலின் தாக்கம் இன்று வியாழக் கிழமை அதிகாலை வரை யாழ்.குடா நாட்டில் இருக்கும் என எதிர்பார்க்கப் படுவதாகவும், எனவே பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களத்தின் யாழ்.அலுவலகப் பொறுப்பதிகாரி வே.புஸ்பநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் வலுப் பெற்றுப் புயலாக மாறியது. இதற்கு 'லைலா' புயல் எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் பின்னிரவு ஒரு மணிவரை இந்தப் புயலின் அதிக தாக்கத்தை யாழ். குடாநாட்டில் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

இலங்கையைச் சூழவுள்ள கடற்பகுதியில் அதிக கொந்தளிப்பை ஏற்படுத்தும் இந்தப்புயல் மணிக்கு 30-50 கிலோ மீற்றர் வேகத்தில் வீசியது. இது 60-70 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதற்கும் சந்தர்ப்பம் உள்ளது.

நேற்று முன்தினம் இரவு புயலுடன் பெய்த மழையின் அளவு 46.1 மில்லி மீற்றர் எனப் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் வடக்கு, கிழக்கு திசையில் 600 கிலோ மீற்றர் தூரத்தில் நேற்றுப் புதன்கிழமை அதி காலை இந்தப் புயல் மையம் கொண்டிருந்தது.

இன்று வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணி வரை 'லைலா' புயலின் தாக்கம் இருக்கும். மழை பெய்யக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் - என்றார்.

இதேவேளை நேற்று முன்தினம் வீசிய 'லைலா' புயலினால் யாழ். மாவட்டத்தில் பரவலாக தாக்கத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

வீட்டின் கூரைகள், பயன்தருமரங்கள், வீதியோரமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த விளம்பர பதாகைகள் என்பன காற்றினால் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்தன. (50-14)

## அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவையொட்டி சிறப்பு மலர்

யாழ்ப்பாணம், மே 20

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த மலரில் சைவப் புலவர்களின் விவரங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கவுள்ளதால் தமது படங்களையும் விவரங்களையும் உடனடியாக அனுப்பிவைக்குமாறு சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொன்விழாவைக் கொண்டாடும் இவ்வாண்டில் சைவப்பண்பாட்டினைப் பேணும் முகமாகவும், சங்க உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும் சைவப்புலவர்களிடையே போட்டிகளை நடத்திப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொன்விழா மலரில் இதுவரை சைவப்புலவர் சங்கத்தில் பட்டம் பெற்ற சைவப்புலவர்களின் விவரங்கள் அவர்களின் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படவுள்ளன.

எனவே இதுவரை புகைப்படங்களை அனுப்பாத சைவப்புலவர்கள் தேர்வுச்செயலாளர், சைவப்புலவர் சு.செல்லத்துரை இல,16, இரத்னகார பிளேஸ், தெஹிவளை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் - என்றார். (50-9)

## வலி.கிழக்கில் 'லைலா' புயலினால் வாழை மரங்கள் முறிந்து நாசம்

யாழ்ப்பாணம்,மே 20

குடாநாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீசிய 'லைலா' புயலினால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வாழைத் தோட்டங்களில் நின்ற பெரும் எண்ணிக்கையான வாழைமரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

நேற்றுக் காலை தோட்டங்களுக்குச் சென்ற விவசாயிகள் முறிந்து வீழ்ந்த வாழை மரங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

வாழைக் குலைகளுடன் நின்ற வாழை மரங்களே புயலினால் அதிகளவில் முறிந்து வீழ்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் நன்கு முற்றாத நிலையில் இருந்த வாழைக்குலைகள் நாசமானதாக அவர்கள் மேலும் கூறினார்கள்.

இதேவேளை - இந்தப் புயலினால் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பயன்தரும் மரங்கள் பல முறிந்து வீழ்ந்துள்ளன. பல இடங்களில் நிறுவப்பட்டிருந்த பாரிய விளம்பரத் தட்டிகளையும் இந்தப் புயல் விட்டுவைக்கவில்லை. (50-224-111)

## இந்திய மீனவர்கள் எவரையும் இலங்கைக் கடற்படை தாக்கவில்லை

### வடபிராந்தியத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதாக உண்மைக்கு மாறான செய்திகளை இந்திய மீனவர்கள் பரப்பி வருவதாக வடபிராந்தியக் கடற்படைத் தளபதியர் அட்மிரல் வீரசேகர தெரிவித்துள்ளார்.

உதயனில் வெளியான 'இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்' என்ற செய்திக்கு மறுப்புத் தெரிவித்து அவர் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள செய்தியிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இந்திய மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசித்து, வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் கடல் வளங்களை அள்ளிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அது மட்டுமல்ல இலங்கை மீனவர்களின் வலைகளையும் நாசப்படுத்துவது, இலங்கை மீனவர்களைத் தாக்குவது போன்ற சம்பவங்களிலும் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக இலங்கை மீனவர்கள் எமக்குப் புகார் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள இலங்கை மீனவர்களுக்கு உள்ள உரிமையைப் பாதுகாப்பதும், அவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதும் இலங்கைக் கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பென்பதுடன், இந்தப் பணியை இரவு பகலாக அவர்கள் நிறைவேற்றி வருகின்றனர்.

இதனால் இந்திய மீனவர்களால் முன்னரைப் போன்று இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளமுடியாமையால் இத்தகைய உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர் - என்றுள்ளது. (50)

## தீவகப் பகுதியில் 'ரெலிக்கொம்'மின் தொலைத்தொடர்புக் கோபுரம்

யாழ்ப்பாணம், மே 20

தீவகப் பகுதியில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான ஆரம்பப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

தீவகப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளையே பயன்படுத்தி வருகின்றனர். அவற்றுக்குரிய அன்ரனாக்களும் ரெலிக்கொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இப் பகுதியில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கப்படவுள்ளதால் மக்கள் தமது சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளை எவ்வித தடங் கலும் இல்லாமல் இனிவரும் காலங்களில் பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 7 | 21.05.2010 வெள்ளிக்கிழமை |
| திதி | : அட்டமி பி.இ. 04.41 வரை |
| நட்சத்திரம் | : மகம் |
| சுபநேரம் | : 05.52 - 07.22 |
| ராகுகாலம் | : 10.22 - 11.52 |

## வன்னியில் சேதமடைந்த தபாலகங்களை புனரமைப்புச் செய்ய 135 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், மே 20

வன்னிப் பகுதியில் யுத்தத்தினால் சேதமடைந்த தபாலகங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு 135 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சினால் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த நிதியின் மூலம் சேதமடைந்த, அழிவடைந்த தபாலகக் கட்டடங்கள் மீளமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி, மாங்குளம், நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், பரந்தன், பூநகரி, பளை ஆகிய இடங்களில் உள்ள தபாலகக் கட்டடங்களே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவற்றைவிட மேலும் நான்கு உப தபாலகங்களும் புதிதாக அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி அமிர்தநாதன் (செல்வம்)
## ஜெனற்மேரி (ஜெனிற்றா)



இல.14, சுபாஸ் லேன், சுண்டுக்குளியைச் சேர்ந்த அமிர்தநாதன் ஜெனற்மேரி நேற்றுமுன் தினம் (18.05.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மைக்கல் - பிரான்சிஸ் றீற்றா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அலஸ் ஞானப்பு தம்பதியினரின் அன்பு மருமகளும், அமர்தநாதனின் (செல்வம்) அன்பு மனைவியும், யூட் வலன்ரைன், மரிய சிசிலியா, யூட் அஞ்சலோ ஆகியோரின் பாசமிகு தாயும், திரேசா, எரிசா, ஜோன்சன், றூபன், பெஞ்சமின், யசிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இருதயராஜன் (வோல்டர்) மற்றும் சந்தியோகு, சயினம்மா, சந்திரன், துரை, அமிர்தம், சிந்து ஆகியோரின் அன்பு மைத்துனியும், திரேசம்மா, அந்தோனிமுத்து, அக்கினேஸ், டெனிஜியா, ஜெயந்தினி, ராணி ஆகியோரின் அன்பு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.05.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து இரங்கற்திருப் பலிக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 14, சுபாஸ் லேன்,*
*சுண்டுக்குளி. 077-0712427* (98409)

தகவல்:
குடும்பத்தினர்.

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நவாலி,மே20

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் இன்று வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன. விவசாயக் குழுக்கூட்டம் முற்பகல் 11மணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நண்பகல் 12மணிக்கும் இடம்பெறும். (50-201-100)

# தென்னிந்தியப் பஜனைக்குழு யாழ்.வந்துள்ளது

பருத்தித்துறை,மே20

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சாயிவரதன் பஜனை இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை சத்தியசாயி சேவா நிலையத்தில் இவ் இசை நிழ்ச்சி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறவுள்ளது. தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சாயிவரதன் பஜனை இசைக்குழுவினர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்கள் மத்தியில் இசை நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றார்கள். (1-190)

# இன்றைய ஆட்டம்

வலிவடக்கு,மே20

வடமாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ். செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெறும் ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி பெண்கள் உத்ர்தரப் பாடசாலை கூடைப் பந்தாட்ட மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி.
* உடுவில் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி. (50-86)

# வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

# பதவி வெற்றிடம்

**பதவி:** பொதுமுகாமையாளர் 101/07

**சம்பள அளவுத் திட்டம்:** (கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் 66/206 சுற்று நிருபத்திற்கு அமைய 101/07ஆவது சம்பளக் குறியீடு)
11450-14500
145 X10-160X10

**வயது:** 18-45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது).

**பிணை:** தெரிவு செய்யப்படுமிடத்து ஆதனப் பிணை, ரொக்கப் பிணை என்பனவற்றை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**தகைமைகள்:** கணனியறிவு முக்கியமானதாகக் கருத்தப்படும்.

அ) கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத்திட்டப் பதவியொன்றின் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத் அனுபவம் அல்லது 09 ஆவது சம்பளத்திட்டத்தின் முகாமை அல்லது மேற்பார்வைப் பதவியொன்றில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டப் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் எட்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 02.06.2010 புதன்கிழமை.

விண்ணப்பப் படிவத்தினை வடமராட்சி பனை, தென்னை வள அபிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, இராசகிராம வீதி, நெல்லியடி, கரவெட்டி எனும் முகவரியிலுள்ள கொத்தணி தலைமை அலுவ லகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**தலைவர், வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.**

# பத்தாம் ஆண்டில் பாசமுடன்...



அமரர்
## அரியகுட்டி சித்திரவடிவேலு (குகன்)

உரிமையாளர்:-
குகன் ஸ்ரூடியோ
சாவகச்சேரி

ஆண்டவன் படைப்பில்
23.10.1927

திதி: துதியை

யுத்தத்தின் பிடியில்
20.05.2000

**பத்து வருடங்கள் காலத்தில் கரைந்து விட்டது**
**அப்பாவே, உங்கள் நினைவுகள் மட்டும் கரையவில்லை**

புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை துரைச்சாமி



புத்தூர், வாதரவத்தையைச் சேர்ந்த பொன்னுத்துரை துரைச்சாமி 18.05.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் சத்தியதேவன் (சென். தோமஸ் கல்லூரி, தூல்கிசை), யோகேஸ்வரன் (வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு, யாழ்.பல்கலைக் கழகம்), பாலேஸ்வரன் (லண்டன்), சசிகலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சறோஜாதேவி (விவேகானந்தாக் கல்லூரி, கொட்டாஞ்சேனை), கௌரி (இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, திருநெல்வேலி), சுபாஜினி (கொடிகாமம்), ராகவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துளசிகா, துவஸ்திகன், கேசினி, வைஷ்ணவி, சாரங்கா, லக்ஸ்மி, ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று வாதரவத்தை இந்து மயானத்தில் இன்று (20.05.2010) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாதரவத்தை,*
*புத்தூர்.* (98406)

தகவல்:
து. யோகேஸ்வரன் (மகன்).

# அரசாங்க அறிவித்தல்

## நிவாரண விநியோகத்திற்குரிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காகப் பின்வரும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

1. சிவப்பு நாட்டரிசி
2. கோதுமை மா
3. சீனி
4. பருப்பு

இப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன. இப் பொருள்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 5,000.00 உம் மீளளிக்க கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் புனர்வாழ்வுக் கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் "நிவாரண விநியோகத்திற்குரிய பொருள்களுக்கான கூறுவிலை" எனக்குறிப்பிட்டு 26.05.2010 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும்போது பொருள்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருள்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் பொருள்களின் தரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு 20.05.2010 முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 26.05.2010 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருள்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரத்தினுள் நாவற்குழி களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைத்தல்வேண்டும். கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

க. கணே[illegible]
அரசாங்க அதிபரும்/மா[illegible]
யாழ்.மாவட்டம்.

(சி/567754)

# முடிவில்லாத் துயரலையில் முதலாம் ஆண்டு நினைவுகள் சுமந்து



## செல்வி. சுருதிகா சுபாஸ்கரன்

(பற்றிமா வீதி, புதுக்குடியிருப்பு)

அன்னை மடிதனில்
22★08★2004

எமகாதன் பிடியதில்
20★05★2009

ஆண்டொன்றும் ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்
இறுதிவரை எம்முடனே இன்பமாய்
வாழ்வாய் என்றிருக்க இடைநடுவே
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கிருந்தோ சீறிவந்த குண்டுக்கு
இரையானாயோ செல்லம்
காலனவன் கண்ணுக்கும் மழலையுன்
உயிர் தான் கேட்டதுவோ
அன்பாயிருந்த ஐயாவுடனும் ஆசைப்
பாட்டியுடனும் அகமகிழ்ந்து மாமாவுடனும்
ஒன்று சேர்ந்து விட்டாயோ.
எங்கு நீ சென்றாலும் ஆறாது எம் துயரம்
மாறாது உன் புன்னகை முகம்.



*பொலிகண்டி,*
*வல்வெட்டித்துறை.*

என்றும் ஈரவிழிகளுடன்:
**குடும்பத்தினர்.**

(சி/567753)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் போராளிகள் மற்றும் மாணவர்களை அவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் விடுவிக்கப்பட்டவர்களை அவர்களின் பெற்றோர்கள், உறவினர்களிடம் கையளிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன், கரன்)

# சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களில் இதுவரை 2 ஆயிரத்து 421 பேருக்குப் புனர்வாழ்வு

## ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க

யாழ்ப்பாணம்,மே 20

படையினரால் கைது செய்யப்பட்ட, படையினரிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து இதுவரை 2 ஆயிரத்து 421 பேருக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க இதனைத் தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் மற்றும் மாணவர்கள் உட்பட495 பேரை அவர்களின் பெற்றோர்கள், உறவினர்களிடம் கையளிக்கும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடு முழுவதும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் வன்னி வெற்றி விழாக் கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டுவரும் இவ்வேளையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 495 பேர் இன்று அவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் முன்னாள் போராளிகள் தமது வாழ்க்கையை புதிதாக ஆரம்பிப்பதற்கு இத்தகைய சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

இவர்களின் எதிர்காலத்தை வளமாக மாற்றியமைப்பதே எமது அரசாங்கத்தின் முக்கிய இலக்காக உள்ளது.

அந்த இலக்கினை வெற்றி கொள்ள அரச உத்தியோகத்தர்களும் எமக்குப் பூரணமான ஆதரவினை நல்க வேண்டும் - என்றார்.(50-9)

# திருவுடையாள் மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,மே20

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்த வெளியீடான' திருவுடையாள் - 03 மலருக்கு ஆக்க இலக்கியங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டி விதிமுறைகள் வருமாறு:

ஆக்கங்கள் சொந்த ஆக்கங்களாகவும், அரசியல் கலப்பற்றதாகவும் இருத்தல் வேண்டும், ஏற்கனவே பிரசுரமானதாகவும் வேறு ஒருவரின் ஆக்கத்தை பிரதி பண்ணியதாகவும் இருத்தல் கூடாது. தகுதி வாய்ந்த மலர்க் குழுவால் கணிக்கப்படும் ஆக்கம் மட்டும் பிரசுரமாகும்.

பிரதேசம் சார்ந்த கருத்துக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், விமர்சனம், சிறுகதை நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதை இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் ஏ-4 தாளில் 12 எழுத்து அளவு பாமினி எழுத்தில் கணனியில் பதிவு செய்து ஆக்கங்களை ஒப்படைக்க வேண்டும்.

தகைமையுடையோர் மேற்குறிப்பிட்ட விதிமுறைக்கமைய ஆக்கங்களை எழுதி இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தரிடம் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும்.

(50-201-236)

# மிருசுவில் மகளிர் குடியேற்றத் திட்டத்துக்கு மீண்டும் மின்சார விநியோகம் வழங்குக

## அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 20

மக்கள் அண்மையில் மீளக்குடியமர்ந்துள்ள மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்துக்கு மீண்டும் மின்சார விநியோகம் வழங்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே அப்பகுதிக்கு மின்சார விநியோகம் இருந்தது என்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மின்மாற்றி எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் மின்விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் அப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியிள்ள கிணறுகள் ஆழமானவை என்பதனால் தமது தேவைக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் மோட்டர் மூலமே நீரைப்பெற வசதியாக இருக்கும் என்றும் மின்சாரம் இன்மையால் அழிவடைந்த பயன்தரு மரங்களுக்கு மாற்றீடாக நாட்டப்பட்ட மரக்கன்றுகள் நீரின்றி வாடுகின்றன என்றும் அப்பகுதி மக்கள் முறையிடுகின்றனர்.

இதேவேளை-

வரணி குடமியன் பகுதிக்கு புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டு மின்விநியோகம் கடந்தவாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நாவற்காடு மின்மாற்றி மூலமே மின்சாரம் விநியோகிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)




# கணனி வன்பொருள் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மே19

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் பயிற்சி நெறியின் யாழ்.பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரை கல்வி கற்றிருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதி உடைய விண்ணப்பதாரிகள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பதாக மாவட்டமுகாமையாளர், NAITA, இல:7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

(50-201)

# நாகர்கோயில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் 10 வருடங்களின் பின்னர் பொங்கல் உற்சவம்

## பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்

வடமராட்சி,மே20

சுமார் பத்து வருடகால இடைவெளிக்குப் பின்னர் நாகர் கோயில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கண்ணகை அம்மன் கோயிலில் கடந்த திங்கட்கிழமை பொங்கல் உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் நாகர் கோயில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பூர்வீக நாகதம்பிரான் கோயில், கண்ணகை அம்மன் கோயில் ஆகியவற்றுக்கு பக்தர்கள் சென்று வழிபடவும் அவற்றில் நித்திய பூசைகளை மேற்கொள்ளவும் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

நாகர்கோயில் கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் 500இற்கும் மேற்பட்ட ஆண், பெண், சிறுவர், சிறுமியர் உள்ளிட்ட பக்தர்கள் கலந்துகொண்டு பொங்கலிட்டு பூசை வழிபாடுகளை மேற்கொண்டதுடன் பறவைக் காவடியை ஒரு பக்தரும், கரக, பாற்காவடிகளை 20இற்கு மேற்பட்ட பக்தர்களும் எடுத்து அம்மன் மீது வைத்திருந்த நேர்த்தியை நிறைவேற்றிக் கொண்டனர்.

பறவைக் காவடி பருத்தித்துறை சிவன் கோயிலில் இருந்து புறப்பட்டு நண்பகல் அளவில் நாகர்கோயில் கண்ணகை அம்மன் கோயிலைச் சென்றடைந்தது.

நாகர் கோயில் கரையூர் முருகன் கோயிலில் இருந்தே கண்ணகை அம்மன் கோயிலுக்கு கரக, பாற்காவடிகளை பக்தர்கள் எடுத்துச் செல்வது வழக்கமாகும்.

ஆனால் அக்கோயிலுக்குச் செல்ல படையினர் அனுமதி வழங்கவில்லை. இருந்த போதும் அங்கு [illegible] இருந்த படையினருடன் பக்தர்கள் கலந்துரையாடியதன் பயனாக நாகர் கோயில் தரவையிலிருந்து கரையூருக்குச் செல்லும் பிரதான பாதையைப் பக்தர்கள் பயன்படுத்தலாம், பாதையை விட்டு விலகி ஏனைய இடங்களுக்குச் சென்றால் கண்ணிவெடி ஆபத்து உண்டு என படையினர் எச்சரிக்கை செய்திருந்தனர்.

இதனையடுத்து கரையூருக்குச் செல்லும் பாதை வழியே சென்ற பக்தர்கள் கரையூர் பாதையில் முருகன் கோயிலுக்கு நேராக உள்ள அரச மரத்தடியிலிருந்து முருகனை நினைந்துருகி கரக, பாற்காவடிகளை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூட வைரவர் கோயிலையும் தூரத்தே நின்று வழிபட்டு பூர்வீக நாகதம்பிரான் கோயில் ஊடாக கண்ணகை அம்மன் கோயிலைச் சென்றடைந்தனர். அங்கு பிற்பகல் 4 மணியளவில் பொங்கல் உற்சவப்பூசை வெகு சிறப்பாக நடந்தேறியது.

பத்து வருட காலத்தின் பின்னர் கண்ணகை அம்மனின் அருட்கடாட்சம் கிடைத்த ஆத்மதிருப்தியில் நாகர்கோயில் மக்கள் தாம் இடம்பெயர்ந்து வாழும் ஊர்களுக்குத் திரும்பினார்.


பொங்கல் உற்சவத்துக்குச் சென்ற பக்தர்கள் மணற்காடு படைமுகாமில் தத்தமது அடையாள அட்டைகளை ஒப்படைத்துவிட்டுச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-236)


# சுவரொட்டிப் போட்டியில் யாழ். மாணவர்கள் தேசிய, மாகாண மட்டங்களில் சாதனை

யாழ்ப்பாணம்,மே 20

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் கல்வித் திணைக்களம் நடத்திய 'வாய்ச் சுத்தம் பேணல்' எனும் தலைப்பில் அமைந்த சுவரொட்டிச் சித்திரப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய தரம் 10 மாணவனான ஸ்ரீகரன் செந்தூரகன் மாகாண மட்டத்தில் அதி சிறந்த பெறுபேற்றுக்கான விருதையும், தேசிய மட்டத்தில் சிறந்த பெறுபேற்றுக்கான விருதையும் பெற்றுள்ளார்.



நீ.செந்தூரன்



வி.மதுஷா

மேற்படி மாணவனுக்கு விருது வழங்கும் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது.

இதேவேளை - இதே போட்டியில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவிகளான வி.மதுஷா மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் திறமைச் சித்தியையும் பெற்றுள்ளதுடன் மா.சேனுஜா மாகாணமட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

(50-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசனைக்குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மே 20

இன்று நடைபெறவிருந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆலோசனைக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.அருணகிரி அறிவித்துள்ளார். (க-16)

## மீளக்குடியமர்ந்தோருக்கு சிமெந்து விநியோகம்

சித்தன்கேணி, மே 20

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து வந்து சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள ஒரு தொகுதி குடும்பங்களுக்கு நேற்றுமுன் தினம் காலை தலா 8 பைக்கற் வீதம் சிமெந்து விநியோகிக்கப்பட்டது.

சித்தன்கேணி சந்தி மகா கணபதிப் பிள்ளையார் கோயில் முன்றலில் வைத்து சிமெந்து பைக்கற்றுக்களை சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் விநியோகித்தனர்.

இந்தச் சிமெந்து பைக்கற்றுக்களில் 'இந்திய மக்களிடம் இருந்து பெறப் பட்டது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. (ஒ)

## இந்தியக் கலைஞர்களின் மேளக் கச்சேரி இன்று

யாழ்ப்பாணம், மே 20

அளவெட்டி, கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழாவில் நான்காம் திருவிழாவான இன்று விசேட மேளக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் அமெரிக்க டாக்டர் விருது பெற்ற கலாபூசணம் நாக பட்டினம் பி.எல். ஜி.எம் பழனி நாதஸ்வரமும், கலைமாமணி திருச்சி ரி.எஸ். சிறிநிவாசன் தவிலும் இசைக்கவுள்ளனர். (50-16)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம்பிள்ளை இராசதுரை

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



பெரியவிளானைப் பிறப்பிடமாக வும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம்பிள்ளை இராசதுரை 18.05.2010 செவ்வாய்க்கிழமை இந்தி யாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்பிள்ளை- செல்லம்மா தம்ப தியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ் சென்றவர்களான சரவணமுத்து- சின்னப்பிள்ளை தம்பதி யரின் மருமகனும் தனபாக்கியத்தின் அன்புக் கணவரும் மனோன்மணி, உருக்குமணி, காலஞ்சென்ற துரைராஜா மற்றும் குணரத்தினம், பூமணி, இரத்தினசபாபதி ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் விமலராணி, சூரியமலர், சிவ லோகராஜா, சிறீவர்ணராஜா, குணாளன், சுரேஷ் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் இரத்தினசிங்கம், கந்தராஜா, நந் தினி, நகுலமதி, அருட்செல்வி, ரூபராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அநுரதன், அனுஷா, அஜந், சிவா ஜினி, வரகுலன், கஜந்தினி, ஜீவிதன், ஜீவிகா, தனுஜா, சுஜன், சயந்தினி, சஜன் காலஞ்சென்ற சரண் மற்றும் சரண்யா, நிவேதன், தர்ஷிகா ஆகியோரின் பேரனும் ஷாம், அக்ஷயா அஜுலன், அர்ச்சுலன், அஞ்சனா, அஷ்விகா, பிரசன்போல், மேசி, சர்விந், தருண், நிவேத் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி விமலராணி
இரத்தினசிங்கம் (மகள்)

உடுவில் வீதி,
மானிப்பாய்.
தொ.பே: 0777 169819 (98545)

## சீனியன் ஆசைப்பிள்ளை



அச்செழு வடக்கு, நீர்வேலி யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சீனியன் ஆசைப்பிள்ளை (17.05.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிய னின் அன்பு மனைவியும் செல்வ ராசா (அச்செழு), ராசுரட்ணம் (கனடா), ஞானம்மா (சுவிஸ்), இராமநாதன் (சுவிஸ்), கனகமணி (இந்தியா), சுபத் திராதேவி (அச்செழு), கனகலிங்கம் (லண்டன்), இராசலிங்கம் (அவுஸ்திரேலியா), கனகராசா (லண் டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05. 2010) வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.
தொ.பே. 0778651171 (பபி).


வீடு / காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 33, அராலி வீதியிலுள்ள 3 பரப்பு 0.4 குழி காணியில் அமைந்துள்ள வீடு தற்போதைய நிலையில் உடன் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் சென்று பார்வையிட்டு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
இல : 011 2733614

வாடகைக்கு

யாழ். மானிப்பாய் வீதியில் வெல்டிங் கராஜ், டயர் கடை போடக்கூடிய இடம் கடையுடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு 072-9580400

முகாமைத்துவ வேலைவாய்ப்பு

யாழ்.மண்ணில் 8 மாத காலமாக வெற்றி கரமாக இயங்கிக்கொண்டிருக்கும் கனேடிய கிளை நிறுவனமொன்றின் புதிய இரு கிளை களுக்கான முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.
★தகைமை: G.C.E.O/L, A/L
★தொடர்புகளுக்கு: யாழ்-021 490 0001, நல்லூர்-021 490 0350, நெல்லியடி-021 490 5001


## ஆங்கில தினப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

நாளை மறு தினம் சனிக்கிழ மையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யும் கொழும்பில் நடைபெறவிருந்த கடந்த 2008ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட ஆங் கிலதினப் போட்டி கள் சீரற்ற கால நிலை காணரமாக பிற்போடப்பட்டுள் ளதாக வடமாகா ணக்கல்விப் பணிப் பாளர் அறிவித்துள் ளார். (50-201)

உ
ஓம் சக்தி

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு:
12.06.1935

உதிர்வு:
20.04.2010

அமரர் தில்லையம்பலம் செல்வராசா

(இளைப்பாறிய அதிபர், கனிஷ்ட பிரிவு, யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர், முன்னாள் ஆசிரியர் யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)

கவலையில்லா சிரிப்பும் கபடமில்லா மனமும் கொண்டு..
அன்புடன் அனைவரையும் அரவணைத்து...
வார்த்தைகளுக்குள் அடக்க முடியாத எம் அனைவர்களதும்
வழிகாட்டியாக
ஆயிரமாயிரம் உத்தமர்களுக்கு ஆசானாகத் திகழ்ந்த
எம் அன்புத் தெய்வமே....!
நீங்கள் மறைந்தாலும்
விலை மதிப்பில்லா உங்கள் நினைவுகள் என்றும் எம்
இதயங்களை நிறைத்துக்கொண்டே இருக்கும்

மருவூர் அன்னையின் பாதக் கமலங்களில் அமைதியாக
உங்கள் ஆத்மா இனிமையாக சாந்திபெற வேண்டுகின்றோம்

உங்கள் நல்லாசிகளுடன் என்றும் வாழத்துடிக்கும் :
உற்றார், உற்வினர்கள், குடும்பத்தினர்கள்.
214/23, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(98539)

# மரண அறிவித்தல்

## திருமதி கிருஷ்ணலீலாதேவி பரமானந்தம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் இல.177, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி கிருஷ்ணலீலா தேவி பரமானந்தம் 16.05.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்து பரமா னந்தம் சுவாமியார் (ஆஞ்சநேயர் கோயில், பாண்டியன்தாழ்வு) அவர் களின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப் பிள்ளை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர் களான நாகரத்தினம், நந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தாவின் (ஜேர்மனி) அருமைத் தாயாரும் ஜெகசிற்பியனின் (அப்பன்) அருமை மாமியும் திருமதி லீலாவதி நடராஜா (கனடா) அவர்களின் அன்பு மைத்துனியும் திருமதி சறோஜினி (லண்டன்), சுகேந்தினி (கனடா) ஆகியோரின் மாமியும் சோ.புவனேந்திர னின் (லண்டன்) பெறாமகனும் செல்லா (பரிஸ்), பாலா (ஹொலண்ட்), பவா (ஜேர்மன்), பாபு (பிரான்ஸ்), பேபி (கனடா), பபி (லண்டன்), கண்ணன் (கனடா), நமணன் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயும் கிருஷ்ணபிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அருமைச் சம்பந்தியும் சறோ (பிரான்ஸ்), காலஞ் சென்ற கௌரி (ஹொலண்ட்), வசந்தி (ஜேர்மனி), மாலா (பிரான்ஸ்), குணம் (கனடா), விஜயந்தி (லண்டன்), விஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சரண்யா (ஜேர்மனி), குணால் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப.3 மணிக்கு தகனக் கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.பரமானந்தம் சுவாமியார்
(ஆஞ்சநேயர் கோயில்).

இல.177,
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை. (98516)

# மரண அறிவித்தல்

## இராமு ரகுநாதன் (ஆசாரி)



இந்தியாவைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு ரகுநாதன் 16.05.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), இந்திரா, சந்திரா, சசிதரன் (கனடா), சுபத்திரா (கனடா), சசாங்கன் (அமெரிக்கா), சுகந்தி (இங்கிலாந்து), சந்திரகுமாரன், சுமதி (மலேசியா), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநாதன், சங்கர், ராசாநாதன் (கனடா), உதயகுமார் (இங்கிலாந்து), காந்தன் (மலேசியா), வேதீஸ்வரன் (பிரான்ஸ்), வனிதா, ரேவதி, தையல்நாயகி, சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
0213219058 (98544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் யுத்தத்தினால் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.சிறிரங்கன் உரையாற்றுவதை முதல் படத்திலும்-
நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும், பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் மாணவர்கள் மௌனப்பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன், ரட்ணம்)

# பல்கலைக்கழக மாணவர்களின் உணர்வுகளை அவர்களைச் சூழ்ந்துள்ள சமூகம் மதிக்கவேண்டும்

## யுத்தத்தில் உயிர்நீத்தவர்களின் அஞ்சலி நிகழ்வில் மாணவர் ஒன்றியச் செயலாளர்

யாழ்ப்பாணம், மே 20

பல்கலைக்கழக மாணவர்களாகிய எமது உணர்வுகளை எம்மைச் சூழ்ந்துள்ள சமூகம் மதிக்கவேண்டும். அந்த உணர்வுகள்தான் எமது அடுத்த தலைமுறைக்கான சொத்தாகும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சி.சிறிரங்கன் தெரிவித்தார்.

வன்னியுத்தத்தில் உயிரிழந்த உறவுகளின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றன. யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாங்கள் மரணத்திலும் வாழ்ந்தவர்கள். வேதனையிலும் சாதனை படைத்தவர்கள். இதைவிட வேறு துயரங்கள் கிடையாது. இனி எமது பயணம் உயர்வானதாக இருத்தல் வேண்டும்.

நாம் இடுகாட்டிலும் சுடுகாட்டிலும் வாழ்ந்தோம். குருதியில் நீராடினோம். பெற்றோரை, உற்றார், உறவினரை, அயலவர்களை இழந்தோம். இருந்தும் நாம் வாழ்கின்றோம். ஏனெனில் நாங்கள் எமது நம்பிக்கையை இழக்கவில்லை. இழக்கப்போவதுமில்லை. எமது வார்த்தைகளை அளந்து பேசவேண்டியுள்ளது. உணர்ச்சிகளை முதிர்ச்சியுடன் கையாள வேண்டியுள்ளது. இது ஒரு பெரிய சக்தி நிலையாகும்.

இந்த நாளில் எம்மோடு வாழ்ந்து மறைந்தவர்களை நினைவு கூரவேண்டியுள்ளது அனைவரது பொறுப்புமாகும். இந்த நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (50-111)

### வறிய மாணவர்களுக்கு காலணிகள்

யாழ்ப்பாணம், மே 20

சுகவாழ்வு நிறுவனம் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியேறிய வறிய மாவணர்களில் 166 பேருக்கு காலணிகளை மிகவிரைவில் வழங்க உள்ளது.

15 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இம்மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அமலமரித் தியாகிகள் சபை இதற்குரிய நிதியை சுகவாழ்வு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. (50-121)

### வீதி நாடகம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் சீர்திருத்த விழிப்புணர்வு சம்பந்தமான வீதி நாடகம் இளவாலை மாரீசன் கூடல் வீதியில் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.

அனைத்து மக்களையும் இதில் பங்குபற்றுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (50-100)

## மண்டைதீவு பேதுரு ஆலய வளாகத்தில் அருட்தந்தை 'ஜிம்பிறவுண் அறிவகம்'

கொழும்புத்துறை, மே20

காணாமற்போன அருட்தந்தை ஜிம்பிறவுண் அடிகளார் நினைவாக மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய வளாகத்தில் 'ஜிம்பிறவுண் அறிவகம்' திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவுப் பகுதி மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் இயேசு சபை அகதிப்பணி நிறுவனமும், கரித்தாஸ் நிறுவனமும் இணைந்து அமைத்துள்ள இந்த நிலையத்தை காணாமற்போன ஜிம்பிறவுண் அடிகளாரின் பெற்றோரான திருச்செல்வம் தம்பதியர் திறந்து வைத்தனர்.

ஜிம்பிறவுண் அறிவகத் திறப்பு விழாவில் இயேசுசபை அகதிப்பணி நிறுவனப் பணிப்பாளர் ர.ஜோயல் அடிகளார், எட்வின் அடிகளார் மற்றும் மண்டைதீவு கடற்படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அல்லைப்பிட்டிப் பகுதியில் 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவச் சென்றவேளை ஜிம்பிறவுண் அடிகளாரும் அவரது உதவியாளரும் காணாமல்போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.(50-135)




### நாவலர் வீதி புனரமைப்பு

கொழும்புத்துறை,மே 20

மக்கள் போக்குவரத்துக்குச் சிரமமாக குண்டும் குழியுமாகக் காணப்பட்ட நாவலர் வீதி புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

குழிகளுக்கு தார்க்கலவை மற்றும் கற்கள் போடப்பட்டு தார் ஊற்றி செப்பனிடப்படுகிறது. இவ்வீதியூடான பயணங்களை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். ( 50-135)

### வன்னி சிமெந்துக் கற்களை விரும்பி வாங்கும் யாழ்.மக்கள்

நாவற்குழி,மே 20

வன்னிப் பகுதியில் ஆற்று மணலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சிமெந்துக் கற்கள் வாகனங்கள் மூலம் யாழ்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களும் கட்டட ஒப்பந்தக்காரர்களும் மணலைப் பெறுவதில் ஏற்படுகின்ற சிரமங்களைக் கருத்தில்கொண்டு இந்தக் கற்களை கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் நான்கு அங்குல கல் ஒன்றின் உற்பதிச் செலவு 50 ரூபாவாக உள்ளதாகவும், ஆனால் வன்னியிலிருந்து கொண்டுவரப்படும் இதேயளவான கல் ஒன்று 35ரூபா தொடக்கம் 40 ரூபா வரை தொகைக்கேற்ப விற்பனை செய்யப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இந்தக் கற்களைத் தருவிப்பதற்கு தரகர்களின் உதவியும் நாடப்படுகின்றது. இந்தக் கற்களைக் கொள்வனவு செய்வது இலாபகரமானது எனத் தெரிவிக்கும் கட்டட ஒப்பந்தக்காரர்கள் வன்னியிலிருந்து மணலை எடுத்துவருவதற்கு அனுமதிப் பத்திர முறையை ஏற்படுத்த வேண்டுமெனத் தெரிவிக்கின்றனர். (க-121)

## குடும்பநல உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஜப்பானின் 'ஜோய் செப்' நிறுவனம் உதவிகளை

### அதன் திட்டமுகாமையாளர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 20

யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை துறைசார்ந்தவர்களிடம் கேட்டறிந்துள்ளதாகவும், அவற்றிற்கு தீர்வைப் பெற்றுத்தரும் வகையில் ஜப்பானிலுள்ள தமது நிறுவனத் தலைமை அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் 'ஜோய் செப்' நிறுவனத்தின் திட்டமுகாமையாளர் மயூமி கற்சுவி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பதினொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் சேவையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு சைக்கிள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் பண்ணை சுகாதார கிராமத்தில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே மயூமி கற்சுபி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

முதற் தடவையாக இலங்கைக்கு வந்திருக்கும் நான் தற்போது யாழ்ப்பாணத்தில் குடும்பநல உத்தியோகத்தர்களைச் சந்திக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெறுமதியாகவே நினைக்கின்றேன். உங்கள் மக்களுக்கு சேவை செய்வதற்கென சைக்கிள்களை வழங்குகிறோம்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் துறை சார் பிரதிநிதிகள் ஊடாகக் குடும்பநல உத்தி யோகத்தர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள் வதனை அறியமுடிந்தது. விரைவில் அவற்றுக்கு தீர்வுகாண உரிய நடவடிக்கை எடுப்பேன் - என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட இலங்கை குடும்பத் திட்டமிடல் அமைப்பின் தலைவி திருமதி பத்ம குமாரதுங்க உரைநிகழ்த்தும் போது, முப்பது வருடங்களுக்குப் பின்னர் மீளவும் நாம் இலங்கையின் வடக்குப் பகுதி மக்களைச் சந்திக்கின்றோம். மீளவும் எமது நிறுவனத்தின் கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவிச் செயற்படவிருக்கின்றோம். இடம்பெயர்ந்த நிலையில் உள்ள மக்களுக்கு குடும்ப நலப்பிரிவின் சேவைகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதனை அறிந்து கொள்ளவே நாம் இங்கு வந்திருக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் எப்படி நாம் சிறப்பான சேவையை வழங்கி வருகிறோமோ அதுபோல் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும் வழங்க நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

வைத்திய நிபுணர்கள், சுகாதாரத் துறையினர் எனப்பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வின்போது ஜப்பான் நாட்டுத் தயாரிப்பான 47 சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (50-14)

## வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று கடற்றொழில் விருத்தி செய்யப்படும்

### சாவற்கட்டில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,மே 20

வெளிநாடுகளின் உதவிகளையும் பெற்று யாழ்.குடாநாட்டில் கடற்றொழில் மேலும் விருத்தி செய்யப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சாவல்கட்டு மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவ்ானந்தாவுக்கு வழங்கிய வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மக்களோடு மக்களாக நின்று மக்களுக்காகப் பணி செய்வதையே நாம் எமது முதன்மை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

இந்தக் கிராமத்திலும் கடற்தொழிலாளர்களினது எதிர்கால வளமான வாழ்வுக்காக நாம் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

அந்த வகையில் மக்கள் வங்கியூடாக கடன் வழங்கி தொழிற்றுறைகளை மேம்படுத்தவும், அதன் மூலம் வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவும் முடியும்.

அத்துடன், பல வெளிநாட்டு தொழில்சார் பிரமுகர்களுடன் கடல் உணவு வர்த்தகம் உட்பட்ட தொழில்துறைகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எனவே சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி கடற்தொழிலை அபிவிருத்தி செய்வதுடன் சமூகத்தை நல்வழிப்படுத்துவதோடு ஏனைய சமூகப் பணிகளையும் செய்யவேண்டுமென்பதே எனது விருப்பம் என்றார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இரராசா நேசரத்தினம் (கிளி)

திதி: அட்டமி



மலர்வு 02 - 02 - 1938

உதிர்வு 10 - 06 - 2008

நாளை (21.05.2010) வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் அனைவரையும் மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசடி,
தொண்டைமானாறு.

மனைவி: வசந்தா

# கிராமிய மதிப்பீட்டு நடவடிக்கை அரியாலையில் நாளை

நல்லூர், மே 20

மக்கள் பங்கேற்கும் முறையிலான கிராமிய மதிப்பீட்டு நடவடிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை சரஸ்வதி வித்தியால யத்தில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஜே-89, ஜே-90 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்க ளைத் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(50-6-111)


## காணி விற்பனைக்கு

நல்லூரணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் 7 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (சைவப்பிரகாச வித்தியாசாலை அருகில்)

தொடர்பு: ந.இராஜேஸ்வரி
பிள்ளையார் வீதி, வடலியடைப்பு.

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கவும் பதவி உயர்வு பெற்றவர்கள் ஓய்வுபெற்றவர்களைக் கௌரவிக்கவும் ஞாபகக் கேடயங்களை பல்வேறு வடிவங்களில் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்...

S.S.யசோதரன் ஆட்ஸ்
381 ப.கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம். தொ.பே: 0217903020


# சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையின் வருடாந்த வைகாசிப்பெருவிழா-2010



**இடம்:**
சந்நிதியான் ஆச்சிரமம்

**காலம்:**
நாளை (21.05.2010) வெள்ளிக்கிழமை

**நேரம்:**
முற்பகல் 10 மணி

**வாழ்த்துரை:**
"ஞானபண்டித சேவா சுரபி"
வைத்திய கலாநிதி சி.கதிரைவேற்பிள்ளை

**சிறப்பு நிகழ்வு:**
கவியரங்கம் "ஒரு திருமுருகன் வந்தான்"

**தலைமை:**
திரு.ஐ.சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகம்)
(இளைப்பாறிய ஆசிரியர்)

**பங்குபற்றுவோர்:**
த.அஜந்தகுமார், வேல் நந்தகுமார்
சு.க.சிந்துதாசன், சி.அ.தில்லைராசன்

**குறிப்பு:** ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமுதாயப் பணிகளின் வகையில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மேற்படி நிகழ்வுகள் யாவும் இடம் பெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி/567738)

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

பேரவையினர்,
சந்நிதியான் ஆச்சிரமம்.


# இன்று முதல் வெளிவருகின்றது




தரம் - 5, 4 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான சிறப்பு வழிகாட்டி

## புலமைச் சுடர்

வியாழன் தோறும்

10 ரூபா விலையில்

இலங்கையில் உள்ள பிரபல -முன்னணி ஆசிரியர்களின் கற்பித்தல் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

*உங்கள் அபிமான சுடர் ஒளி - கல்விச்சுடர் தயாரித்து வெளியிடும்*

## தரம் 5,4 மாணவர்களுக்கான முன்னோடிக் கையேடு

**முழுமையான மாதிரி வினாத்தாள் தரம் 05**
**அடிப்படை மாதிரி வினாத்தாள் தரம் 04**
**பாடரீதியான அடிப்படை விளக்க வினாத்தொகுப்பு**
**இலகுவழிக் கற்றல் குறிப்புக்கள் இன்னும் பல விடயங்களுடன்**

அனைத்துப் பிரபல ஆசிரியர்களினதும் பங்களிப்புடன் ஒருவார கால ஆக்கங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட ஒரேயொரு முன்னோடி கற்றல் கையேடு - எதிர்வரும் ஒகஸ்ட்டில் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஏற்ற தரம் மிக்க வேறுபட்ட ஆசிரியர்களின் 10 மாதிரி வினாத்தாள்களைத் தாங்கி வெளிவருகின்றது

**உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள இன்றே அருகில் உள்ள உதயன் பத்திரிகை விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்யுங்கள்.**

**தொகையாகப் பெற்றுக்கொள்ள விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் 021-5677222, 071-4273035 எனும் தொலைபேசி இலக்கங்களில் எமது விநியோகப் பிரிவுடன் தொடர்புகொள்ளவும்.**

உடனடித் தொடர்புகளுக்கு:
85, ஜயந்த மல்லிமாராச்சி
மாவத்தை, கொழும்பு-14.
011-5738855
071-6182182 (ஆசிரியர்)
யாழ்.விநியோகப் பிரிவு
021-5677222


# வத்தளைப் பகுதியில் கடலில் மூழ்கிய மாணவர்கள் இதுவரை மீட்கப்படவில்லை

கொழும்பு, மே 20

வத்தளை பிரிதீபுர கடலில் குளிக்கச் சென்றபோது கடலலையால் அள்ளப் பட்டுச் சென்ற மலையக மாணவர்கள் இருவரின் நிலைமை குறித்து அறிந்து கொள்ள முடியாத நிலையில் அவர்களின் பெற்றோர் அலைக்கழிந்துகொண்டிருக் கின்றார்கள்.

பொகவந்தலாவை சீனாக்கலை பூசாரி டிவிசனைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவ ரின் மகன் சபேஸ்குமார் மற்றும் அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிராஜ் நிரோஜன் ஆகியோரே இவ்வாறு கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டவர்களாவர்.

கடந்த 9ஆம் திகதி வத்தளைப் பிரதே சத்திலுள்ள கடலில் குளிப்பதற்காக நிரோஜனும் சபேஸ்குமாரும் சென்ற போது, இராமலிங்கமும் இன்னுமொரு வரும் அவர்களுடன் சென்றுள்ளனர்.

அவர்கள் இருவரும் குளித்துக் கொண் டிருந்தபோது திடீரென வந்த அலையொன்று இருவரையும் கடலுக்குள் இழுத்துச் சென் றதைக் கண்ட இராமலிங்கம் கூக்குரலிட் டுள்ளார். அயலவர்களின் உதவியை நாடிய போ தும், இருவரையும் மீட்க முடியவில்லை. உடனடியாக இராமலிங்கம் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குச்சென்று இவ் விடயம் தொடர்பாக முறைப்பாடு செய் தார்.

விவரமறிந்த கடற்படையினரும் மூன்று நாள்களாகத் தொடர்ந்து அவர்க ளைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால், நேற்று முன்தினம் வரை அவர்கள் மீட்கப்படவில்லை. (சி)

# புராண படனப் போட்டி


யாழ்ப்பாணம், மே 20

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தின் பொன் விழாவையொட்டி பாட சாலை மாணவர்களிடையே நடத்தப்பட வுள்ள புராண படனப் போட்டிகள் எதிர் வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியா லயத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர் கள் காலை 9 மணியளவில் உரிய ஆயத் தங்களுடன் தவறாது கலந்துகொள்ளு மாறு சைவப்புலவர் சங்கத்தின் செயலா ளர் கந்த சத்தியதாசன் கேட்டுள்ளார்.

(50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று முன்தினம் இரவு வீசிய 'லைலா' புயலினால் குடாநாட்டில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டன. குருநகர் பகுதியில் பெரிய ஆலமரத்தின் கிளை ஒன்று இந்தப் புயலினால் முறிந்து வீழ்ந்துள்ளதையும், வீடொன்றின் கூரை ஓடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரன், உமா)

# கொழும்பில் பாதிக்கப்பட்ட மக்களை திரும்பியும் பார்க்காத அமைச்சர்கள்!

## நாடாளுமன்றில் ரவி கருணநாயக்க வெம்பி சீற்றம்

கொழும்பு, மே 20

தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக கொழும்பு மத்தியில் மாத்திரம் 1,300 வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன என்றும் அந்த வீடுகளுக்குச் சென்று அமைச்சர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் எவரையும் பார்வையிடவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான ரவி கருணநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

வரித்திருத்தச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது பெய்துவரும் அடை மழை காரணமாக கொழும்பு மாவட்டம் நீரில் மூழ்கியுள்ளது. வீதிகளில் நீர் வழிந்தோடுகின்றது. கோட்டை, நுகேகொடை மற்றும் ராஜகிரிய போன்ற இடங்களில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மத்தியில் 2ஆயிரத்து 800 வீடுகள் உள்ளன. அவற்றுள் ஆயிரத்து 300வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. ஆனால், நிறைவேற்று அதிகாரத்தையும், அதிக அமைச்சர்களையும் வைத்துள்ள இந்த அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவித உதவிகளையும் செய்யவில்லை.

அமைச்சர்கள் எவரும் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று பார்க்கவில்லை. அம் மக்களுக்கு ஒரு சாப்பாட்டுப் பார்சலைக் கூட வழங்கக்கூடிய நிலையில் இந்த அரசு இல்லை.

தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் உணவின்றித் துன்பப்படுகின்றனர். அவர்கள் அரசின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இதுபோக அரச ஊழியர்களின் சம்பள உயர்வு இன்னும் இல்லை. வரவு - செலவுத் திட்டத்திற்கு என்ன நடந்தது என்றே தெரியாது. வாழ்க்கைச் செலவினம் 28வீதத்தால் அதிகரித்துள்ளது.

மின் கட்டணம் 80வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைவடைந்துள்ள போதிலும் அதன் விலை இங்கு குறைக்கப்படவில்லை. காஸ், பால் மா விலைகள் உள்ளிட்ட அனைத்தினதும் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது தேர்தல் காலங்களில் அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணானது.

இவ்வாறானதொரு பொருளாதார நிலைமையைத் தக்கவைத்துக்கொண்டு ஒரு போதும் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது. உள்ளூர் உற்பத்தி குறைந்து இறக்குமதி அதிகரித்துள்ளது. இது பொருளாதார வளர்ச்சிக்கு எந்த வகையிலும் உதவாது. - என்றார். (சி)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி வழங்கல்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மாட்டின் வீதியிலும், யாழ்.அடைக்கல அன்னை தேவாலய வளாகத்திலும் விலங்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (50-201)

# உடனே நிவாரணம் வழங்க ஜனாதிபதி மஹிந்த பணிப்பு!

கொழும்பு, மே 20

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் சீரற்ற காலநிலை காரணமாகப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் பொருட்டு ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய மூன்று மாவட்டங்களினதும் செயலாளர்களுக்குத் தலா பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு வகைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு தாழ்நிலப் பகுதிகளில் வடிகான்கள் அமைப்பதற்கென மூன்று மாவட்டச் செயலாளர்களுக்கும் தலா ஒன்பது லட்சம் ரூபா மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது எனவும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ( சி)

### சாவகச்சேரியில் 'சீல்' வைத்து மூடப்பட்ட

# இரு மர அரிவு நிலையங்களை மீண்டும் திறக்க நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம், மே 20

சாவகச்சேரி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி நடத்தப்பட்டதால் 'சீல்' வைக்கப்பட்ட இரண்டு மர அரிவு நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த நிலையங்களை நடத்தியவர்களால் உரிய அனுமதிப் பத்திரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து இரு மர அரிவு நிலையங்களுக்கும் வைக்கப்பட்ட 'சீல்' களை உடைத்து அவை இயங்க அனுமதிக்குமாறு சாவகச்சேரி நீதிவான், நீதிமன்றப் பதிவாளரைப் பணித்தார்.

இதேவேளை மற்றொரு மர அரிவு நிலையம் சீல் உடைக்கப்பட்டு சுகார பரிசோதகர் பார்வையிட்ட பின்னர் மீண்டும் 'சீல்' வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் மாதம் பொலிஸார் நடத்திய திடீர் பரிசோதனையின் போது எதுவித அனுமதிப் பத்திரமும் இல்லாத நிலையில் மர அரிவு நிலையங்கள் நடத்தியோர் மீது வழக்குத் தாக்கல் செய்த போது இந்த நிலையங்கள் ' சீல்' வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

# வெற்றிக் கொண்டாட்டங்களின்போது ஜெனரல் சரத் பொன்சேகா சிறையில்!

## ரணிலின் கேள்விகளால் நாடாளுமன்றில் அமளி துமளி

கொழும்பு, மே 19

''அரசு யுத்த வெற்றியைக் கொண்டாடும் இந்தவேளையில எமது நாட்டுக்காகப் போராடிய இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்?'' - இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய இத்தகைய கேள்விகளால் நாடளுமன்றத்தில் நேற்று முன்தினம் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

''அரசின் வரிவிதிப்புகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு என்பன அரசு பெற்றுள்ள கடனை அடைப்பதற்காகவே. அத்துடன் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் ஆகியும் மக்கள் இதுவரை கோழிக்கூண்டுக்குள் அடைக்கப்பட்டு அகதிகளாகவே இருக்கிறார்கள். இவ்வேளையில் அரசின் யுத்த வெற்றி தேவைதானா? இந்த நேரத்தில் யுத்தத்தின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்த ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்திருப்பது நியாயமானதா?'' - என்று அவர் கேள்வி எழுப்பினார்.

# விமானப் பயணிகளை ஏற்றி இறக்க கட்டுநாயக்காவில் படகுச்சேவை!

கொழும்பு, மே 20

கட்டுநாயக்கா - மினுவாங்கொட வீதியில் வெள்ளநீர் தேங்கியுள்ளமையால் விமான நிலையம் செல்லும் பயணிகளை ஏற்றி இறக்குவதற்காக அங்கு படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கென கடற்படையினர் 5 படகுகளைத் தாங்கள் சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் அத்துல செனரத் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு - நீர்கொழும்பு வீதியில் அமைந்துள்ள தண்டு கம் ஓயா பாலத்தினருகே ஒரு அடிக்கும் மேலாக வெள்ளநீர் பாய்ந்து செல்வதால் வாகனப் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இந்த நெருக்கடி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு விமானப் பயணிகள் குறைந்தது நான்கு மணித்தியாலங்களுக்கு முன்னரே விமான நிலையத்துக்கு வந்துசேர்வதன் மூலம் தமது பயணத் தாமதங்களைத் தவிர்க்க முடியுமென விமான நிலைய அதிகாரிகள் கேட்டுள்ளனர். (சி)

# பொன்சேகா இல்லாத வெற்றிக்கொண்டாட்டமா? அதை மழைகூட விரும்பவில்லை என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, மே 20

இந்நாட்டு மக்களின் சாபம் தான் யுத்த வெற்றிக் கொண்டாட்டத்தை ஒத்திப்போடுவதற்குக் காரணம் என்று ஜே.வி.பி. எம்.பியான சுனில் ஹந்துன்நெத்தி நேற்று நாடாளுமன்றில் கூறினார்.இந்தக் கொண்டாட்டத்தை மழை கூட விரும்பவில்லை என்றும் அவர் சொன்னார்.

நேற்றைய வரித்திருத்தச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யுத்த வெற்றிக்குக் காரணமான யுத்த வீரரை சிறையில் அடைத்து தமிழ் மக்களை அகதிகளாக்கிக் கொண்டு, யுத்த வெற்றியைக் கொண்டாட அரசு எடுத்த முயற்சி இடையில் நிறுத்தப்பட்டுள்ளது.


சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தமையையிட்டு முழு உலகமும் அதிர்ச்சியடைந்தது. அதேபோல் இயற்கையும் அதிர்ச்சியடைந்தது.

அந்த வீரன் இல்லாத நிலையில் யுத்த வெற்றி கொண்டாடப்படுவதை இயற்கை கூட விரும்பவில்லை.

இந்நாட்டு மக்களின் சாபமே கொண்டாட்ட நிகழ்வு ஒத்திப் போடப்படுவதற்குக் காரணம்.


தமிழர்களை அகதிகளாக்கிக்கொண்டு எப்படி எம்மால் இந்த யுத்த வெற்றிக் கொண்டாட்டத்தை நடத்தமுடியும்? யுத்த வெற்றிக்குக் காரணமான சரத் பொன்சேகா இச்சந்தர்ப்பத்தில் விடுதலை செய்யப்பட வேண்டும். - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானபாஸ்கரோதய சங்கம் - சனசமூக நிலையம்



வலி.கிழக்கில் இருபாலை பழையவீதி, 3ஆம் கட்டை குறுக்கு வீதியைச் சந்திக்கும் முச்சந்தியில் வீதியோரமாக மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது ஞானபாஸ்கரோதய சங்கம்- சனசமூக நிலையம். ஓங்கி உயர்ந்த பெருமரங்களின் நிழலில் அமைந்துள்ள இந்த விசாலமான கட்டடத்தில் ஞான பாஸ்கரோதய சங்கம் - சனசமூக நிலையம் செயற்பட்டு இதன் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் ஊரவர்களுக்கும் பல்வேறு விதத்திலும் உதவுகின்றது. இதில் 423 பேர் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாக உள்ளனர். 1919ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஞானபாஸ்கரோதய சங்கத்துடன் இணைந்த நிலையில் ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம் 1948 இல் பதிவு செய்யப்பட்டது. ஞானபாஸ்கரோதய இளைஞர் விவசாயச் சங்கம் - 1954ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. அத்துடன் ஞானபாஸ்கரோதய விளையாட்டுக்கழகம், ஞானபாஸ்கரோதய மங்கையர்கழகம், ஞானபாஸ்கரோதய பாலர் முன்பள்ளி என்பவற்றை எல்லாம் உள்ளடக்கி உயர்ந்த நிறுவனமாகத் திகழும் இந்த அமைப்பு வலி.கிழக்கில் உள்ள சிறந்த பொது அமைப்புகளில் ஒன்றாகும்.




வலி.கிழக்கில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 113 சனசமூக நிலையங்களில் 57 சனசமூக நிலையங்கள் பாலர் பாடசாலையையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதோடு பாலர் முன்பள்ளிகளில் முன்னணியில் உள்ளவற்றில் ஞானபாஸ்கரோதய பாலர் முன்பள்ளியும் ஒன்று.கிராமங்கள் பிரதேசங்களின் அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு பல்வேறு விதத்திலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்தவகையில் வலி.கிழக்கில் உள்ள சனசமூக நிலையங்களின் பங்கும் பணியும் காத்திரமான வகையில் உணரப்பட்டுள்ளது.

தற்பொழுது முன்னெடுக்கப்படவுள்ள உட்கட்டுமான வேலைத்திட்டத்தில் (நெல்லீப்) கிராமங்களின் அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மயான அபிவிருத்தி மற்றும் மக்கள் சார்புடைய அபிவிருத்தி வேலைகளிலும் பிரதேச ரீதியாக முன்மொழிவுகள், ஆலோசனைகள் சனசமூக நிலையங்கள் ஊடாகப் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும்போது

(தொடரும்)

# வாதரவத்தைக் கிராமம்











(சென்றவாரத் தொடர்ச்சி)

உடல் உழைப்பையும் தன்னம்பிக்கையையும் மூலதனமாகக் கொண்டு முன்னேறிவரும் கிராமங்களில் வாதரவத்தைக் கிராமத்தை முதன்மையாகக் கொள்ளலாம்.

கல்வியால் முன்னேற வேண்டும் என்ற உயிர்த்துடிப்புடன் முயன்று கற்றுவரும் மாணவர்கள் தமது கிராமத்தில் உள்ள விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நம்பிக்கை வைத்து கல்வி கற்றுவருகின்றனர். தரம் 1 முதல் தரம் 11 வரை ஊருக்கு வெளியே சென்று கற்கின்றனர்என குறிப்பிடத்தக்க தொகையினர் இல்லை. இந்தவகையில் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பெறுபேறுகளும் உயர் நிலையில் வைத்து மதிப்பீடு செய்யப்படுகின்றன. கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இந்தப்பாடசாலை விளையாட்டு, உள்ளிட்ட சகல நிகழ்வுகளிலும் தனது தனித்துவத்தை பேணிவருகின்றது. அண்மைக்கால போர்ச்சூழலால் குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்பட்ட போதிலும் மீண்டும் அது தனது நிலையை கல்வி அடைவு மட்டத்திலும் காப்பாற்றிக் கொள்ளும் என பாடசாலைச் சமூகம் உறுதிகொண்டுள்ளது.

அரசாங்க உத்தியோகத்தரின் எண்ணிக்கையும் ஏனையகிராமங்களுடன் ஒப்பிடும்போது இங்கே உயர் நிலையிலேயே உள்ளது. ஒருகாலப்பகுதியில் ''குட்டி இங்கிலாந்து'' என அழைக்கப்பட்ட இந்தக் கிராமம் கடந்த 30 வருட காலச் சூழலில் பெரும் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அசைக்க முடியாத உடல் உறுதியுடன் கூடிய இந்தப் பிரதேச மக்கள் செய்யும் தொழிலை மறைக்காமல் வெளிப்படையாகக் கூறுவதன் மூலம் அவர்களில் காணப்படும் தொழிலின் மகத்துவத்தை உணர முடிகின்றது. ''கூலித் தொழிலாளர்'' என்ற வகையில் பெருந்தெருக்கள், வீதிகளைச் செப்பனிடுவதில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் மேன்மையும் தொழில்நுட்பச் சிறப்பும் வெளிஇடங்களில் எல்லாம் உணரப்பட்டுள்ளது.

சாதாரணமாக இரண்டு பேர் சேர்ந்து தூக்க முடியாத கல்லுச் சுமையை ஒருவர் தூக்கித் தோளில் வைத்துச் சுமந்து வீதிகள் அமைக்கும் பணியிலும் வேறு பணியிலும் காட்டிக்கொள்ளும் திறமை வியந்து கொள்ளத்தக்கது. வாதரவத்தைக் கிராமத்தில் பிள்ளையார், நாச்சிமார், அம்மன், காளிகோயில், வைரவர் கோயில் என்றவகையில் 10 கோயில்கள் வரையில் அமைந்துள்ளன. இவற்றில் பல கோயில்கள் பரம்பரைப் பூசகரினாலும் ஒன்று இரண்டு கோயில்கள் வைதீக முறைப்படியும் பூசை வழிபாடு நடைபெறுகின்றது.

இந்த ஆலயங்களில் தினசரி பூசை வழிபாடு நடைபெறும் அதே வேளையில் வைகாசி மாதத்தில் ஊரின் மேற்கு திசையில் உள்ள வைரவர் கோயிலில் ஆரம்பிக்கும் வழிவெட்டுப் பொங்கல் வழிபாடு வாரத்துக்கு ஒரு கோயிலாக கொண்டு செல்லப்பட்டு இறுதியாக கிழக்குத்திசையில் உள்ள வைரவர் கோயிலில் முடிவடையும் ஊரில் உள்ள துஷ்ட தேவதைகளை ஊரில் இருந்து அப்புறப்படுத்துவது என்ற வகையில் ஆண்டுதோறும் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண கூத்து மரபில் வாதரவத்தைக் கிராமத்துக்கெனத் தனித்துவமான ''பப்பரவராயன்'' ஆடற்கூத்து குறிப்பிடத்தக்கது. இது மரபு வழியாக அதற்கே உரிய அண்ணாவிமாரால் பராமரிக்கப்பட்டு வந்தது. திறந்தவெளி அரங்கில் இரவு முழுவதும் ''பப்பரவராயன்'' கூத்து நடைபெறும். ஊர் முழுவதும் திரண்டிருந்து பார்த்து மகிழ்வர். இதனை அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் சென்று பார்த்து மகிழ்வர். அத்துடன் அந்தக் காலத்து வண்டில்பயணத்தில் வன்னிக்குச் செல்பவர்களும் வண்டில் மாடுகளுடன் இளைப்பாறும் வேளையில் இதனைப் பார்த்து ரசிப்பது உண்டு.

இந்தவகையில் பார்த்து மகிழ்ந்தவர்கள் இந்த நாடகக் கலைஞர்களை அழைத்துச்சென்று தங்களது கிராமங்களிலும் காட்சிப்படுத்துவது உண்டு. இது கடந்த 30 வருடத்து முந்திய நிலைப்பாடு. தற்பொழுது இந்த ஆடற்கூத்துக் கலை வடிவத்தைக் காண முடியாது.

இந்தக் கிராமத்தில் ஐந்து குளங்கள் உள்ளன. இவற்றில் நீரைத் தேக்கி மழைகாலத்தில் பாதுகாத்த போதிலும் கோடைகாலத்தில் இவை முற்றாக வற்றி வரண்டு போவதும் உண்டு.

(தொடரும்)

தொகுப்பு : ஞானஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்தேன். வீணாகக் கஷ்டப்பட்டு எனது பணம் முழுவதையும் இழந்தேன்."

சத்தூர். வயது 28
வெளிநாட்டில் தடுத்து வைக்கப்பட்டு
இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்.



ஒழுங்கற்ற முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்காக சத்தூர் தனது வாழ்நாள் சேமிப்புக்கள் அனைத்தையும் செலவிட்டதுடன் கடனும் வாங்கினார். துரதிஷ்டவசமாக ஆட்கடத்தல்காரர்கள் வழங்கிய உறுதிமொழி நிறைவேறவில்லை. மற்றொரு நாட்டில் தடுத்து நிறுத்தப்பட்ட சத்தூர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். தற்போழுது, சத்தூர் எல்லாவற்றையும் இழந்துள்ளார். தன்னையும், தனது குடும்பத்தையும் பராமரிக்க முடியாதுள்ளது. முறையற்ற விதத்தில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அனர்த்தங்களை விளக்கும் கதைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எண்ணிலடங்கா இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலிக்கடாக்களாகின்றனர். படகு மூலம் முறையற்ற விதத்தில் பயணம் செய்பவர்கள் பட்டினியையும் துன்பங்களையும் எதிர்கொண்டு, தமது குடும்பம் உட்பட அனைத்தையும் இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். நீங்கள் எதனை இழக்கப் போகின்றீர்கள்?

**இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதை அவுஸ்திரேலியா இடைநிறுத்தியுள்ளது.**

உங்கள் பணத்தை பயனற்ற பயணத்திற்கு வீணாக்க வேண்டாம்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் சேமநலச் செய்தி.

ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Yahoo வுடன் கை குலுக்கியது Microsoft

## பத்தாண்டு கால ஒப்பந்தம் கைச்சாத்து : கூகிளைக் கவிழ்க்கத் திட்டம்?

*Microsoft* மற்றும் *Yahoo* ஆகிய இரண்டு பிரபல நிறுவனங்களும் தமக்கிடையே ஒரு பத்தாண்டு கால ஒப்பந்தத்தினைப் போட்டுப் பல மாதங்களாக நீடித்து வந்த இழுபறி நிலையை முடிவுக்குக் கொண்டுவந்திருக்கின்றன.

தேடல் இயந்திரத் தொழில்நுட்பத்திலும் அதனைச் சார்ந்த விளம்பர வர்த்தகத்திலும் *Google* கொண்டிருக்கும் முதலிடத்தை அசைத்துப் பார்ப்பதற்காகவே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்குமோ என்ற ஒரு எண்ணம் இணைய உலகில் அனைவருக்கும் எழுந்துள்ளது.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின் படி *Microsoft* நிறுவனத்தின் *Bing* தேடல் இய்ந்திரத்தினை தன் தளத்தில் *Yahoo* பயன்படுத்திக் கொள்ளும்.

அத்துடன் விளம்பர இட விற்பனையை உலகளவில் மேற்கொள்ளும் உரிமையை *Yahoo* மட்டுமே பெறுகின்றது.

*Yahoo* நிறுவனம், இந்த ஒப்பந்தம் பற்றிப் பேசிய போது, அதன் பயனாளர்கள் மற்றும். இணைய வர்த்தகச் சந்தை ஆகிய அனைத்திற்கும் பல பயன்களை இந்த ஒப்பந்தம் தரும் என்று *Yahoo* நிறுவனத் தலைவர் அறிவித்துள்ளார்.

அதே போலவே *Microsoft* நிறுவனத் தலைவர் இது குறித்துக் கருத்து தெரிவிக்கையில் இரு நிறுவனங்களும் வெற்றி அடையும் ஒரு இனிய ஒப்பந்தம் இது என்று குறிப்பிட்டார்.

இவ்வொப்பந்தத்தின் மூலம் *Microsoft* நிறுவனம் *Yahoo* நிறுவனத்தின் தேடல் இயந்திரத் தொழில்நுட்பத்தினைப் பத்து ஆண்டுகளுக்குப் பயன்படுத்தும்

**கே.ஜெயமாலா,**
**வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.**

வகையில் தனி உரிமையினைப் பெறுகிறது. அத்துடன், தன் தளங்களில் இயங்கிவரும் தேடல் இயந்திரத்தொழில் நுட்பத்துடன் *Yahoo* நிறுவனத்தின் தேடல் இயந்திரத் தொழில்நுட்பத்தினை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும்.

18 மாதங்களுக்கு முன்பு தான் *Yahoo* வை எடுத்துக் கொள்ள *Microsoft* தன் முதல் அஸ்திரத்தை வீசியது. அதற்காக 2008 மாசி மாதத்தின் முதல் நாளன்று 4,460 கோடி டொலருக்கு *Yahoo* வை விலை பேசியது *Microsoft*.

இது *Yahoo* வைப் பெரிய அளவில் உலுக்கிவிட்டது.

ஆரம்பத்தில் *Yahoo* நிறுவனத்தின் முகாமை இதனை மறுத்து விட்டது.

இருப்பினும் திரைமறைவில் இந்த இரு நிறுவனங்களும் தொடர்ந்து உறவாடிக் கொண்டு தான் இருந்தன.

எல்லாம் எதற்காக?

இணையத் தொழில்நுட்பத்தில் மாபெரும் சக்தியாக உருவெடுத்து, வளர்ந்து வரும் *Google* நிறுவனத்தை அதன் இடத்திலிருந்து இறக்கத்தான் இந்த ஏற்பாடுகள்.

*Microsoft* இடமிருந்த பண பலத்தின் முன்னால் எவராலும் ஈடு கொடுக்க முடியாமற் போய் விட,

*Microsoft* மற்றும் *Yahoo* ஆகிய இரண்டு பிரபல நிறுவனங்களுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருக்கின்றது.

**இந்த ஒப்பந்தத்தின் மூலம் இணைய மற்றும் தேடல் இயந்திரத் துறையில் என்றுமே முன்னணியில் நிற்க வேண்டும் என்ற கொள்கையுடன், கூகிளை முந்துவதற்காக மைக்ரோசொப்ட் போட்ட திட்டத்திற்கு யாகூவும் உடந்தையாகி விட்டது என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது.**

இதன் மூலம் *Microsoft* தனது ஏக போக உரிமையினை வலுப்படுத்தியுள்ளது. தற்போது வந்திருக்கும் இந்த ஒப்பந்த அறிவிப்பு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இதுவரை தனி ஒரு *Search Engine* நிறுவனமாக இயங்கி வந்த *Yahoo* தனக்கிருந்த தனி அடையாளத்தினை இந்த ஒப்பந்தம் மூலம் இழந்திருக்கிறது.

இந்த ஒப்பந்தம் இரண்டு நிறுவனங்களுக்குமே ஒரு புதிய பாதையைக் காட்டியுள்ளன. ஒவ்வொரு மாதமும் தன் தளத்தில் வந்து தேடும் 30 கோடி வாடிக்கையாளர்களுக்குத் தொடர்ந்து சேவை அளித்துத் தக்கவைக்க வேண்டிய நிலையில் *Yahoo* உள்ளது.

அதே வேளை -

*Microsoft* நிறுவனத்தின் விளம்பரங்களையும் விற்பனை செய்திடும் உரிமை *Yahoo* விற்குப் பெரிய அளவில் கைகொடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கைகோர்ப்பு தேடல் இயந்திரத்துறையில் தனித்துவத்துடன் இருக்கும் *Google* நிறுவனத்துக்கு "ஆப்பாக" இருக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஆனாலும் கூகிளை யாராலும் அசைக்க முடியாது என நம்பப்படுகிறது.

# கணனியின் வேகத்தை அதிகரிக்கச் சில ஆலோசனைகள்..........



முதன் முதலாகக் கணனியை வாங்கிய போது அதில் இருந்த வேகம் இப்போது இல்லையா? அடிக்கடி "மக்கர்" பண்ணுகிறதா?

இதோ சில வழிமுறைகள். பின்பற்றிப்பாருங்கள் ஓரளவுக்கு உங்கள் கணனியை வேகப்படுத்தலாம்.

01. கணனி முழுவதுமாக Boot ஆகுவதற்கு முன்பாக எந்த ஒரு Application ஐயும் திறக்க முயற்சிக்காதீர்கள்.
2. Digital Camera வில் எடுத்த புகைப் படங்களை நேரடியாக wallpaper ஆகப் போட வேண்டாம். ஏனெனில் அதிக கொள்ளளவுள்ள படங்களை wallpaper ஆக்கிவிடும் பொழுது அதிகப்படியான Memoryஐ எடுத்துக் கொள்கின்றது.
3. ஒவ்வொரு Application ஐ நீங்கள் Close பண்ணிய பின்பும் Desktop ஐ Refresh செய்து கொள்ளுங்கள். (Mouse right Click - Refresh / F5)
4. Desktopல் நிறைய Shortcut களை உருவாக்கி வைக்காதீர்கள். அதிக கொள்ளளவு கொண்ட Files/Foldersகளை வைத்திருக்க வேண்டாம். ஒவ்வொரு shortcut ம் 500bytes Memoryஐ .எடுத்துக் கொள்கிறது.
5. அடிக்கடி Recycle Bin ஐ Empty ஆக்கிவிடுங்கள்.
6. Temporary internet files ஐ அடிக்கடி கிரமமாக அழிக் கத் தவறாதீர்கள்.
7. மாதம் ஒருமுறை உங்கள் Hard Diskன் Partition னை Defragment செய்யவும். இது உங்கள் Filesகளை சீரமைத்து Speed ஆக இயங்க வழி வகுக்கும்.
8. AutoCAD, 3D Studio MAX, Corel Draw, Photoshop போன்ற செயலிகளை நிறுவும் போது, உங்கள் HardDiskல், Operating System நிறுவப்படாத Partition இல் பதிந்து கொள்ளுங்கள்.
9. எந்த ஒரு Software ஐ நிறுவும் பொழுதும் Windows Startup இல் வராதவாறும், Task bar Tray icon வசதியையும் பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள்.
10. உங்கள் கணனியைத் தூசு, துகள்கள் படியாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் கணனியில் வேலை செய்யும் பொழுது Processor Heat ஆகிக்கொண்டிருக்கும் Processor , மற்றும் HeatSink-இல் தூசுகள் படிந்து படிந்து, Fanன் வேகம் குறைந்து போவதால், Processorன் வெப்பம் அதிகரிப்பதால், கணனியின் வேகம் குறையலாம். எனவே தூசு விடயத்தில் மிகக் கவனமாக இருங்கள்

# Autorun Virus வராமல் தடுப்பதற்கு Panda USB Vaccine


தற்போது கணனிப் பாவனையாளர்கள் பலருக்கும் உள்ள ஒரு புதுத் தலையிடியாக *Autorun.inf* தொற்று.

*USB* சாதனத்தை அல்லது *CD* ஐ பயன்படுத்தத் தொடங்கும் போது கேட்டுக் கேள்வியின்றித் தானாகவே கணனிக்குக் கேடு விளைவிக்கும் கட்டளையை இயக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் ஒரு *inf* கோப்புத்தான் இந்த *autorun.inf*

தொற்று இருக்கும் கணனியில் எமது *USB* சாதனத்தைப் பயன்படுத்தினால் கணனியில் இருந்து எமது பிளாஷ் ட்ரைவிற்கும் இந்த *autorun.inf* தானாகவே ஏறிக்கொள்கிறது, கணனிக்கும் பிளாஷ் ட்ரைவிலிருந்து தானாகவே தொற்றிக் கொள்கிறது.

இன்றைய நிலையில் மிக வேகமாகப் பரவிவரும் ஒரு வைரஸ்களில் இதுவுமொன்று.

இதனைத் தடுப்பதற்கென்று தற்போது *autorun.inf* ஐக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே Panda Anti virus நிறுவனத்தினால் Panda USB Vaccine என்ற புதியதொரு செயலி வெளியிட்பட்ருக்கின்றது.





இதனைப் பயன்படுத்தி *USB* சாதனத்திலிருந்தும், கணனியில் இருந்தும் *autorun.inf* தொற்றினை அழிக்கக் கூடியதாக இருப்பதோடு, தொற்று ஏற்பட்டிருந்தாலும் எளிதாக நீக்கி விட முடிகிறது. அத்துடன் முற்கூட்டியே தொற்று ஏற்படாதவாறு காப்பிட முடிகிறது.

இதனை *http://research.pandasecurity.com/Panda-USB-and-AutoRun-Vaccine/* என்ற முகவரியிலிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கள் சொல்லும் உண்மைகள்



நமது உடல் பாகங்களில் நமது முகத்திற்கு அடுத்தபடியாக இருப்பது கைகள். இவை என்ன செய்து கொண்டிருக்கிறது என்று நாம் உணர்கிறோம். ஆனால், கால்கள் என்ன செய்கிறது என்பதை நாம் உணர மறந்து விடுகிறோம். நம் உடலின் பாகம் மூளையை விட்டு எவ்வளவு தள்ளி இருக்கிறதோ, அந்த அளவிற்கு நாம் அவற்றின் செயல்களைப் பற்றி அறியாமல் இருந்து விடுகிறோம். சிலர் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள்.

அதற்காக சோகமான நேரங்களில் கூட, வேண்டா வெறுப்புடன் மகிழ்ச்சியாக இருப்பதைப் போல முகத்தை மாற்றி வைப்பார்கள். ஆனால், அப்படிப்பட்ட நேரங்களில் அவர்களின் கால்கள் அதைக் காட்டிக் கொடுத்துவிடும். கால்கள் தொடர்ந்து தாளமிட்டுக் கொண்டு அந்த இடத்திலிருந்து ஓடுவதற்கு தயாராக உள்ள மனோபாவத்தைக் காட்டிக்கொடுத்துவிடும். முகத்தை மட்டும் நடிக்கப் பழக்கியவர்கள், கால்கள் என்ன செய்கிறது என்பதை கவனிப்பதில்லை. இளமையாக, ஆரோக்கியமாக நடப்பவர்கள் வேகமாக நடக்கிறார்கள். இதனால் அவர்களது கைகள் முன்னும், பின்னும் அசைகின்றன. தாங்கள் இளமையானவர்கள், துடிப்பானவர்கள் என்பதைக் காட்டவே இப்படி நடக்கிறார்கள். ராணுவ வீரர்கள், அரசியல்வாதிகள், தலைவர்கள் தங்களது செயல்திறனின் வேகத்தைக் காட்ட இவ்வாறு நடக்கிறார்கள்.

பால் எல்க்மேன் என்ற உளவியல் அறிஞர் ஒருவர் பொய் பேசும்போது ஒருவரது கால்கள் எவ்வாறு காட்டிக் கொடுக்கின்றன என்பது பற்றி ஆராய்ச்சி செய்தார். இதற்காக சில நிர்வாகிகளை அழைத்து அவர்களைப் பொய் பேச வைத்தார். அவர்கள் பொய் சொல்லும்போது, பாதங்களை உணர்வின்றி வேகமாக அசைத்தனர். இன்னும் பலர் முகபாவங்களை பொய்யாக மாற்றி, கை அசைவுகளையும் கட்டுப்படுத்தி நடித்தனர். ஆனால், அவர்கள் அனைவருமே தங்கள் பாதங்கள் என்ன செய்கின்றன என்பதை அறியாமல் இருந்தனர். பொய் பேசுபவர்களின் முழுஉடலையும் பார்த்தோமானால், அவர் பொய் சொல்வதைக் கண்டுபிடித்து விடலாம். ஒரு இடத்தில் தங்கலாமா அல்லது வேண்டாமா என்று எந்த நோக்கத்தையும் வெளிப்படுத்தாமல் நடுநிலையான மனநிலையை வெளிப்படுத்தும் இந்த நிலையில், சம்பந்தப்பட்டவருக்கு எந்த நோக்கமும் இல்லை என்பதை தெரியப்படுத்துகிறது. ஆண்-பெண் சந்திப்புகளில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக இந்த நிலையில் நிற்பார்கள். மேலதிகாரிகள் முன்னால் இளம் அதிகாரிகளும், ஆசிரியர்கள் முன்னால் மாணவர்களும் இவ்வாறு நிற்பார்கள்.

சிலர் ஆங்கில எழுத்தான 'வி' வடிவில் கால்களை விரித்து நிற்பார்கள். இவர்கள் தரையில் கால்களை வலுவாக ஊன்றி தாங்கள் எண்ணத்திலிருந்து எப்போதும் விலகிச் செல்வதில்லை என்பதை வெளிப்படுத்துவர். ஆண்மையை வெளிப்படுத்திக் காட்டுவதால், விளையாட்டு வீரர்களும், திரைப்படத்தில் கதாநாயகர்களும் இதுபோன்ற நிலைகளில் நிற்பதைக் காணலாம். ஒருவர் உடனடியாக என்ன செய்யப்போகிறார் என்பதை இது வெளிப்படுத்துகிறது. நாம் எந்தத் திசையில் செல்லப் போகிறோம் என்பதை முன்னிருக்கும் காலின் திசைதான் காட்டுகிறது. இது நம் மனம் எந்தப் பக்கம் செல்ல விரும்புகிறது என்பதைக் காட்டுகிறது.

இளவல்கள் வட்டம் YOUTH

**நா.றஜிதா, குடமியன்.**

## மழை



அன்பென்ற மழையிலே
ஆயிரம் வருடம்
நனைய நினைத்தேன்
துன்பம் என்ற மழைதான்
தினம் தினம் கொட்டியது.

தூறல்கள் என்றாலும்
சாரல்கள் என்றாலும்
தாங்கி இருப்பேன்
புயலில் அல்லவா
சிக்கிவிட்டேன்
அதனால் தானோ.....
மூழ்கி விட்டேன்.

க.தர்சினி,
உடையார்வளவு,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

## கையடக்கத் தொலைபேசிப் பாதுகாப்பில் சைமாண்டெக் நிறுவனம்

கணனிகளை வைரஸ்களில் இருந்து பாதுகாக்கும் தகவல்களைத் தயாரித்து வழங்கும் சைமாண்டெக் நிறுவனம், கையடக்கத்தொலைபேசியில் பாதுகாப்பிற்கெனவும் தீர்வுகளை வழங்கவும் தீவிரமாக இறங்குகிறது.மொபைல் தகவல் தொடர்பு சாதனங்கள் வேகமாகப் பரவி வருதலால், அவற்றின் வோர்ம் ,வைரஸ்,ஸ்பைவோ தகவல்களை அனுப்பிக் கொடுக்கும் வேலையில் பலர் இறங்கி யுள்ளனர்.குறிப்பாக கையடக்கத் தொலைபேசி மூலம் அவற்றைப் பயன்படுத்துபவர்கள். இதனால் வைரஸ் போன்ற பாதிப்புக்களைத் தரும் தகவல்களை எளிதாக வடிவமைத்து, இந்த கையடக்கத் தொலைபேசி சாதனங்களுக்கு அனுப்பப் பலரால் முடிகிறது. இவற்றிலிருந்து இச்சாதனங்களைப் பாதுகாக்கும் புதிய தொகுப்புக்களைத் தயாரித்து வழங்குவதில் முனைப்புடன் இயக்க இருப்பதாக சைமாண்டெக் நிறுவனம் அறிவித்துள்ளது.



பகலவன்,
உடுவில்.

## சிந்திக்கச் சில துளிகள்

1.பக்திக்கும் மரியாதைக்கும் உரிய இடம் கோயில் மட்டுமல்ல நாம் பணிபுரியும் இடமும்தான்.
2.குடும்பத்தில் கணவனுக்கு ஒத்துழைக்காத மனைவியும் நிறுவனத்தில் முகாமையுடன் ஒத்துழைக்காத ஊழியனும் சேர்ந்திருப்பதில் அர்த்தமில்லை.
3.இல்லையென்று ஒருபோதும் சொல்லாதே என்னால் இயலாது என்று ஒரு நாளும் எண்ணாதே.
4.தொழில் எத்தனை கீழ்த்தரமாயினும் அவமானம் இல்லை சோம்பலே அதன் அவமானம்.
5.நெஞ்சம் ஆலயமாவதும் அற்ப பொருளாவதும் எம் எண்ணத்தைப் பொறுத்தது.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

## கேள்விக்கு என்ன பதில்?-73

ஒலிம்பிக் குழுவின் தலைமையகம் எங்கமைந்துள்ளது?
(சரியான விடையை 27.05.2010 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

கேள்விக்கென்ன பதில்?- 71இன் சரியான விடை டென்மார்க்.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங் கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கேள்விக்கென்ன பதில்?- 71 இல் பரிசு பெறுவோர்

1. உ.பானுஜா, 2011-கலைப்பிரிவு, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
2. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
3. ஸ்ரீ.சாரதா, கண்ணகையம்மன் கோயிலடி, வட்டுக்கோட்டை.

## இந்த வாரம் வரலாற்றில்

**மே -14**



உலகையே அச்சுறுத்தி வந்த பெரியம்மை நோய்க்கான தடுப்பு மருந்து 1796 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி முதல் முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

**மே -15**

போர் முனைகளில் அதிகம் பயன் படுத்தப்படும் இயந்திரத் துப்பாக்கிக்கான முதலாவது காப்புரிமை சட்ட வல்லுனர் ஒருவரால் 1718 ஆம் ஆண்டு மே 15 திகதி பெறப்பட்டது.



**மே -16**



பிரான்ஸின் சக்கர வர்த்தியாக மாவீரர் நெப்போலியன் 1804 ஆம் ஆண்டு மே16 ஆம் திகதி பிரகடனப் படுத்தப்பட்டார்.

**மே -17**

ரொடீஷியாவில் உள்ள உலகப் புகழ் பெற்ற அணையான 'கரிபா' அணை 1960 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி திறந்து வைக்கப் பட்டது.



**மே -18**



ஆங்கில தேசத்து தத்துவ ஞானியான பேட்ரம் றசல் என்பவர் 1872 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி பிறந்தார்.

**மே -19**

1997 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வீசிய கடும்புயலால் பங்காளதேஷ் நாட்டில் ஆயிரக் கணக்கானோர் மரணித்தனர்.



**மே - 20**



ஈராக் நாடு 2 பில்லியன் ஸ்ரேலிங்பவுண்ஸ் பெறுமதியான பெற்றோலை விற்பனை செய்ய அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் ஈராக்கும் ஐநாவும் 1996 ஆம் ஆண்டு இதே நாளில் கையெழுத் திட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.06.1991

* கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பவம் குறித்து விசாரணை செய்ய கிழக்கு மாகாணத்துக்குச் சென்ற ஜயலத் தலைமையிலான ஜனாதிபதி விசாரணைக்குழுவும் பிரதமரும் சம்பவம் நடந்த இடத்துக்குச் செல்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுப்பு.

* இராணுவத்தினர் மீதான கட்டுப்பாட்டை ஜனாதிபதி பிரேமதாஸ இழந்துவிட்டார் என்பதிலேயே கொக்கட்டிச்சோலைக்குச் சென்ற விசாரணைக் குழுவை படையினர் தடுத்த சம்பவம் நிரூபிக்கின்றது என விடுதலைப் புலிகள் தரப்பு விமர்சிப்பு.

17.06.1991

* பேச்சுவார்த்தை குறித்த எமது நிலைப்பாட்டை அரசுக்குத் தெரிவித்து விட்டோம். பிரச்சினைக்குத் தீர்வு காணும் விருப்பம் அரசுக்கு இருந்தால் அரசு எம்மைத் தேடிவரட்டும் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

* மன்னார் - வவுனியா மாவட்டக் காடுகளில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

18.06.1991

* நடந்து முடிந்த தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராகப் பதவியேற்க இருக்கும் செல்வி ஜெயலலிதா, தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்பட்டு பலவந்தமாக நாடு கடத்தப்படுவர் என பேட்டியொன்றில் தெரிவிப்பு.

* வவுனியா - மன்னார் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் கடும் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிப்பு.

19.06.1991

* கொக்கட்டிச் சோலையில் இராணுவம் நடத்திய படுகொலையில் 222க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு வட்டாரங்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவிப்பு.

* வவுனியாப் பகுதியில் கடந்த சில தினங்களாக இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்று வரும் சண்டையில் 29 அரச படையினர் கொல்லப்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

20.06.1991

* பிரெஞ்சு வைத்தியக் குழுத் தொண்டர்கள் சென்ற வாகனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விசாரணை செய்ய அரசு நியமித்த தனிநபர் விசாரணைக் குழு விசாரணைகள் ஒரு கண்துடைப்பு என பிரெஞ்சு வைத்தியக் குழு விமர்சனம் தெரிவிப்பு.

21.06.1991

* வெலி ஓயா பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் நேற்று 19 படையினர் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு.

* இந்தியாவின் புதிய பிரதமராக பி.வி.நரசிம்மராவ் இன்று பதவியேற்பதாக அறிவிப்பு.

* வவுனியாவில் விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட ஹெலிக்கொப்டரின் சிதைவுகள் யாழ்ப்பாணத்தில் பொது மக்களின் பார்வைக்காக காட்சிப் படுத்தப்படுவதாகத் தெரிவிப்பு.

22.06.1991

* கொழும்பிலுள்ள இலங்கை கூட்டுப்படைத் தலைமையகம் மீது நேற்று இடம்பெற்ற, தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 35 இராணுவத்தினர் உட்பட 80 பேர் பலி.

* வடக்கு, கிழக்கிலிருந்து யுத்தம் இப்போது கொழும்புக்கு வந்துவிட்டது என கொழும்பில் பிரபல பத்திரிகையாளர் ஒருவர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

23.06.1991

* கொழும்பில் தற்கொலைப்படைத் தாக்குதல் தொடரலாம் என அரசாங்கம் அஞ்சுவதாகத் தெரிவிப்பு.

* கொழும்பில் இந்தியத் தூதரகம் அமைந்துள்ள வீதி போக்குவரத்துப் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு.

24.06.1991

* தேசியப் பிரச்சினையாகிவிட்ட வட கிழக்குப் பிரச்சினையை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்ப்பதற்கு அரசு தயாராகவுள்ளது. ஆனால் அச்சுறுத்தல், பயங்கரவாதச் செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் அரசை அடிபணிய வைக்க முடியாது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

* கொக்கட்டிச் சோலையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு பழிவாங்கும் செயலாகவே கொழும்பில் கடந்த வாரம் இராணுவத் தலைமையகத்தின் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக் கூடும் என கொழும்புப் பத்திரிகைகள் ஊகம் தெரிவிப்பு.

25.06.1991

* வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கக் கூடிய விதத்திலான சமஷ்டி அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வர இணக்கம் தெரிவிக்கும் நிலைக்கு சுதந்திரக் கட்சி வந்துள்ளதாக நெதர்லந்து வானொலியின் அரசியல் விமர்சனம் நிகழ்ச்சியில் தெரிவிப்பு.

26.06.1991

* கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆயுதப் படையினர் பலர் கொல்லப்பட்டதையடுத்து வடக்கு, கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

* இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா மேலதிகமாக எதுவும் செய்யாமலேயே - நேரடியாகச் சம்பந்தப்படாமலேயே - தமிழீழம் உருவாகிவிடக்கூடும் என இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் ஏ.பி.வெங்கடேஸ்வரன் தெரிவிப்பு.

27.06.1991

* இலங்கை உட்பட 7 நாடுகளிலிருந்து ஜேர்மனியில் அடைக்கலம் கோரி தஞ்சமடைந்துள்ள சுமார் 1இலட்சம் பேர் அடுத்தவாரம் முதல் நிர்ப்பந்தமாக ஜேர்மனியிலிருந்து வெளியேற்றப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

* எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கொழும்பில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த சார்க் உச்சி மகாநாடு தற்போதைய பதற்றமான சூழ்நிலை காரணமாக வேறு நாடொன்றுக்கு மாற்றப்படுமா என சந்தேகம் தெரிவிப்பு.

28.06.1991

* இலங்கை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரது படுகொலைச் சம்பவங்கள் இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொஸாட்டின் கைவரிசை இருப்பதாக இந்தியாவின் விசேட புலனாய்வுக் குழு தெரிவிப்பு.

* தமிழ் நாட்டில் அமெரிக்காவுக்கு மிக நெருங்கிய நண்பர்களாக யார் இருக்கிறார்கள் என்பதை கண்டு பிடித்து அவர்களை விசாரித்தால் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக சில உண்மைத் தகவல்கள் கிட்டக் கூடும் என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவிப்பு.

29.06.1991

* விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்பாடு செய்து அதற்கு மத்தியஸ்தராகச் செயற்பட நோர்வே அரசு விருப்பம் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

* அம்பாறை மாவட்டம், லகுகல என்ற இடத்தில் இனந்தெரியாதோர் நடத்திய திடீர் தாக்குதலில் 14 பஸ் பயணிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு,

30.06.1991

* குண்டுவெடிப்புச் சம்பவங்களை பாதுகாப்புப் படையினரால் மட்டும் தடுத்து நிறுத்தி விட முடியாது. மக்களும் விழிப்புடன் செயற்படுதல் அவசியமாகும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவிப்பு

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மல்லாகத்தில் பொதுமக்கள் வரவேற்பு

வலி.வடக்கு,மே20

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் ஆலய முன்றிலில் கடந்த திங்கட்கிழமை வரவேற்பு விழா இடம்பெற்றது.

அமைச்சர் மல்லாகம் நீதிமன்ற வீதியில் இருந்து காங்கேசன்துறை வீதி ஊடாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். வீதியின் இரு புறங்களிலும் இருந்த மக்கள் மலர்மாலைகளை அணிவித்தும் பொன்னாடைகள் போர்த்தியும் அமைச்சரை வரவேற்றனர்.

மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் ஆலய முன்றிலில் மு.நாகேந்திரசர்மா தலைமையில் வரவேற்புக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் செ.கதிர்காமநாதன், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய பிரதம குரு ஸ்ரீ சு.சண்முகநாதக் குருக்கள், யாழ். மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, தெல்லிப்பழை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் கா.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் ஆகியோர் உரையாற்றினார்கள். (50-86)

# உதவிப் பணம் பெறும் அட்டைகள் மீளாய்வு

நவாலி,மே 20

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இளவாலை, முள்ளானை கிராம சேவையாளர் பிரிவுகளில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்று வருபவர்களின் பணம் பெறும் அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமை மீளாய்வு செய்யப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்களை முற்பகல் 10 மணிக்கு தமது கிராம சேவையாளர் அலுவலகங்களில் சமூகமளிக்குமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (50-100)

# மன்னாரில் சோளகக் காற்று

மன்னார்,மே20

மன்னாரில் பல மாத வெப்பம் தற்போது நீங்கியுள்ளது. தற்போது தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று (சோளகம்) வீச ஆரம்பித்துள்ளது. இதனால் மன்னார் மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இங்கு என்றுமில்லாதவாறு இவ்வாண்டு பெரும் வரட்சி நிலவியது. குளங்கள், குட்டைகள், ஓடைகள் அனைத்தும் வற்றி வரண்டு போயின. மக்கள் தாங்கமுடியாத வெப்பத்தில் முணுமுணுத்தபடி நடமாடித் திரிந்தனர்.

தற்போது இந்த நிலை மாற்றமடைந்துள்ளது. இங்கு சோளகக் காற்று வீசுவதுடன் சில நேரங்களில் சூறைக் காற்றாகவும் மாறிப் புழுதியை அள்ளி வீசுகின்றது. (50-80)

# ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,மே20

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி. சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பிவைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**மாதகல் சென்.ஜோசவ் மகாவித்தியாலயம்**

சுப்பிரமணியம் பானுவர்த்தனி -5ஏ4சி, சிவாஜி யாழினி - 5ஏ2சி2எஸ், ஜெயராஜ் நிரோஜினி 4ஏ2பி2சிஎஸ், சிவனேசன் கஜனி 4ஏ3சிஎஸ், ரங்கராஜ் நிந்துஷா 3ஏபி2சி3எஸ், அருமைத்துரை அன்ரன் தர்சன் 3ஏ2பி2சிஎஸ், கோபாலசுந்தரம் சிந்துஜா 3ஏபி3சிஎஸ், தவேந்திரன் துஜீபா - 2ஏபி3சி2எஸ், அசோக்குமார் பிரதீபா - ஏபி4சி3எஸ், இராமச்சந்திரன் மதுசாலினி - ஏபிசி5எஸ், அமலதாஸ் மேரி கொன்சிகா - ஏபி3சி3எஸ், பாலகிருஷ்ணன் தர்சன் - ஏ4சி3எஸ், சுவாம்பிள்ளை செலஸ்ரீன் யக்சன் - ஏ3பிசி3எஸ், அருச்சுனன் ராகுலன் - 2பி2சி4எஸ், கிறிஸ்துராசா லெபோன் சுதர்சன் 2பி2சி4எஸ்

**கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**

ஜெயராசா மாருதி - 9ஏ, சுப்பிரமணியம் மொர்ஜினி - 6ஏ2பிசி, முருகானந்தம் ரகுராம் 4ஏ4பிஎஸ், சச்சிதானந்தம் தர்சினி 3ஏ3பி2சிஎஸ்.

# அவுஸ்திரேலியாவில் மற்றும் ஒரு அகதிகள் படகு கண்டுபிடிப்பு

அவுஸ்திரேலியா, அஸ்மோ பவளப் பாறை பகுதியில் கடந்த 16ஆம் திகதி 43 சட்டவிரோத குடியேறிகளுடன் சென்ற படகு ஒன்று ஆஸ்திரேலிய சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்தப் படகில் உள்ளவர்களை அடையாளம் காணும் பொருட்டு படகில் உள்ளோர் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சென்றவர்களில் இலங்கையர்களும் இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சட்டவிரோதமான முறையில் கடந்த 2009 ஆம் வருடம் அவுஸ்திரேலியாவுக்கு சென்றவர்களின் எண்ணிக்கை 2,873 ஆகும்

எனினும் இந்த வருடத்தின் 4 மாத காலப் பகுதிக்குள் 2,792 பேர் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாகப் படகுகளில் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அம்பாந்தோட்டைக்குப் பால்; தலைநகர் கொழும்புக்கு கூழ்!

கொழும்பு, மே 20

நாட்டில் தொடரும் மழையால் மக்கள் படுகின்ற அவலங்கள் பற்றி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் எம்.பியான சுனில் ஹந்துன்நெத்தி, கொம்பனித்தெருவில் மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டமை குறித்தும் பேசினார். அப்போது அபிவிருத்தி என்ற பெயரில் கொழும்பு நகரில் வீடுகளை இடித்து மக்களை அரசு நடுத்தெருவில் விட்டுள்ளது என்று அவர் கூறினார்.

தலைநகர் கொழும்பை விட ஜனாதிபதியின் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கே சகல அபிவிருத்திகளும் செய்யப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டிய அவர், "அம்பாந்தோட்டைக்கு பாலும், கொழும்புக்கு கூழும் ஊற்றப்படுகிறது" என்று உவமை கூறினார். அவர் இதுபற்றி மேலும் கூறியவை வருமாறு:-

கொம்பனித்தெருவில் அமைந்திருந்த வீடுகளைக் கூட அரசு இடித்து அகற்றி விட்டது. அந்த மக்கள் இப்போது வீதியில் நிற்கின்றனர். இந்த மழையால் அந்த மக்களும் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இப்படித்தானா இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியம்மிக்க நாடாக மாற்றுவது? வீடுகளை உடைப்பதற்கு முன் புதிய வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு வீடுகளை உடைத்து ஒரு போதும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

கொழும்பு நகரம் இப்போது புறக் கணிக்கப்பட்டு அம்பாந்தோட்டைக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. அம்பாந்தோட்டைக்குப் பாலும், கொழும்புக்கு கூழும் வழங்கப்படுகிறது - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**



பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கலாம். சில வேலைகளை செய்வதா வேண்டாமா என குழப்பம் அடைவீர்கள். பிள்ளைகளின் தவறுகளை சுட்டிக் காட்டி அவர்களிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். பல நாட்களாக பார்க்காத உறவினர் ஒருவரை பார்க்கலாம். தவறு ஒன்றை நினைத்து வருந்துவீர்கள்

**இடபம்**



ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். அடுத்த சில நாட்களுக்குப் பின் நடைபெற உள்ள காரியத்திற்காக இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். பதவி உயர்வை எதிர்பார்ப்பவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பணவரவு உண்டு

**மிதுனம்**



உறவினர்களுக்காக, நண்பர்களுக்காக சில செலவுகளை செய்வீர்கள். நீங்கள் செய்த வேலை ஒன்றில் மற்றவர்கள் குறை கண்டு பிடித்து விமர்சிக்கலாம். நினைத்த காரியங்கள் நிறைவேற வேண்டும் என தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். சக ஊழியர் ஒருவர் தங்களின் பிரச்சினைகளை உங்களிடம் சொல்லலாம்

**கடகம்**



மனதில் புதிய திட்டம் ஒன்றைப் போட்டு நிறைவேற்ற முற்படுவீர்கள். சகோதர, சகோதரிகள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். அரசு தொடர்பான காரியங்களில் ஏற்பட்ட தேக்க நிலைமை மாறும். வீண் பழிகள் விலகி பாராட்டுகளைப் பெறுவீர்கள். ஆதாயகரமான நாள்.

**சிங்கம்**



யாரையும் விமர்சிக்க வேண்டாம் அல்லது கடும் வார்த்தைகளால் பேச வேண்டாம். நீண்ட நாட்களாக உங்களுடன் இருந்த ஒருவரை பிரியலாம். நண்பர்கள் சிலரின் உபசரிப்பால் மனம் மகிழ்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சில வேலைகளை செய்ய மறந்து மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

**கன்னி**



எந்த விடயத்திலும் தடுமாற்றம் இல்லாமல் புத்திசாலித்தனமாக செயற்படுவீர்கள். நண்பர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம். பெண்கள் கடும் வேலைப் பளுவை எதிர்கொள்ளலாம். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை மறுக்காமல் வாங்கிக் கொடுப்பீர்கள். நல்ல செய்தி கேட்கலாம்.

**துலாம்**



வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். இதுவரை வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்**



வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் சிலரிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். இரண்டு நாட்களாக வராமல் இருந்த பணவரவு ஒன்றைப் பெறலாம். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம்.

**தனுசு**



வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும் நாள். உடன் பிறப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். நண்பர் அல்லது பெரிய மனிதர் ஒருவரை சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். தொழில் ரீதியாக நீங்கள் ஆதாயம் பெற சிலர் முட்டுக்கட்டை போடலாம். புதியவர்களை நம்ப வேண்டாம்.

**மகரம்**



சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புக்களை ஒப்படைக்கலாம். உறவினர்களால் ஆதாயம், உதவி பெறலாம். மற்றவர்கள் பெருமையாக, பெரிதாக நினைக்க வேண்டும் என்பதற்காக செலவுகளைச் செய்வீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

**கும்பம்**



தொழில் ரீதியாக சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். இளைய உடன் பிறப்புக்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். பெண்கள் கணவர் மற்றும் குடும்பத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். வரவேண்டிய பணவரவு ஒன்றை கேட்டு வாங்குவீர்கள்

**மீனம்**



கடன் கொடுத்த ஒருவரிடம் அந்தப் பணத்தை திருப்பிக் கேட்பீர்கள். சிலர் உங்களை கேலி, கிண்டல் பேசி வெறுப்பேற்றலாம். பெண்கள் கணவருடன் வாக்குவாதத்தில் ஈடுபடலாம். சில விடயங்களில் முடிவு எடுக்க முடியாமல் தவிக்கலாம். நீண்ட நாட்களாக செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு செல்லும் சூழல் உருவாகும்.

## வெற்றிக் கொண்டாட்டங்களின்போது ஜெனரல் சரத் பொன்சேகா சிறையில்!

### ரணிலின் கேள்விகளால் நாடாளுமன்றில் அமளி துமளி

கொழும்பு, மே 20

"அரசு யுத்த வெற்றியைக் கொண்டாடும் இந்தவேளையில எமது நாட்டுக்காகப் போராடிய இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்?" - இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிர மசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய இத்தகைய கேள்விகளால் நாடாளுமன்றத்தில் நேற்றுப் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

"அரசின் வரிவிதிப்புகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு என்பன அரசு பெற்றுள்ளகடனைஅடைப்பதற்காகவே. அத்துடன் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் ஆகியும் மக்கள் இதுவரை கோழிக் கூண்டுக்குள் அடைக்கப்பட்டு அகதிகளாகவே இருக்கிறார்கள். இவ்வேளையில் அரசின் யுத்த வெற்றி தேவைதானா? இந்த நேரத்தில் யுத்தத்தின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்த ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்திருப்பது நியாயமானதா?" - என்று அவர் கேள்வி எழுப்பினார்.

**Siva Brothers**

கொக்கோலா குளிர்பானப் பிரியர்களே நீங்கள் வாங்கும் ஒவ்வொரு போத்தல் மூடிகளிலும் 50/-, 100/-, 200/-, 500/-, 1000/- Reload உண்டு. அத்துடன் குளிர்பானம் இலவசம் என இருக்கும் மூடிகளுக்கு இலவசமாகச் சோடா வழங்கப்படும். ஆகவே கொக்கோலா கொம்பனி குளிர்பான வாடிக்கையாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**Distributor சிவா பிறதர்ஸ்**

205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0212225688

**MBBS/MD**

**Lugansk State Medical University**

**UKRAINE - EAST EUROPE**

Recognized by **SRI LANKA MEDICAL COUNCIL**

**With A/Ls** 6 years

Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரேலியா, மாத்தளை, மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.

**www.lugmedi.com**

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194

**Scholars Information Center (SIC)**

இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**பத்திரிகைத்துறையில் ஆர்வம் உள்ளோருக்கான இலவசப் பயிற்சிப் பட்டறை**



* நீங்களும் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?
* ஊடகத்துறை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதா?

உங்களுக்கான ஐந்து நாள் இலவச பயிற்சிப் பட்டறைக்கு இன்றே விண்ணப்பியுங்கள்!

காலம்-ஜூன் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை.

**விடயங்கள்:**

* செய்தி அறிதல்
* செய்தி மூலங்கள்
* புலனாய்வுச் செய்தியிடல்
* செய்தித் தலைப்புகள்
* கட்டுரை எழுதுதல்
* செய்திக் கட்டுரைகள்
* பக்க வடிவமைப்பு
* இணையத்தளச் செய்திகள்
* ஊடகத்துறையில் தொழில்நுட்பம்
* பத்திரிகைத்துறையின் சவால்கள்
* பத்திரிகையாளர்களின் பொறுப்புகளும் கடமைகளும்

பயிற்சிப்பட்டறை முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

அனுமதிக்கு சுய விவரங்களை தொடர்புக்கான தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பவேண்டிய முகவரி:
(விண்ணப்பங்களை mediatechnic@gmail.comஎன்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்).

'பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாச்சிக்குடாவில் தமிழரின் காணிகளை அபகரிக்கச் சிலர் திட்டமிட்ட சதி முயற்சி

## நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன எச்சரிக்கை

அம்பாறை, மே 20

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேச சபைக்குட்பட்ட வாச்சிக்குடா கிராமத்தில் தமிழர் காணிகளை அபகரிக்கத் திட்டமிட்டு ஒருசாரார் செயற்படுகின்றனர் எனத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட எம்.பி. சமூகநேயன் பொ.பியசேன தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

அண்மைக்காலமாக அப்பகுதியில் மண்போட்டு நிரப்பி வருகிறார்கள். இதனை ஆலையடிவேம்பு பிரதேச செயலகமோ, பிரதேச சபையோ ஏறெடுத்தும் பார்க்காதது கவலைக்குரியது.

வாச்சிக்குடா கிராம அபிவிருத்திச் சங்கம் என்னிடம் முறைப்பாட்டுக் கடிதத்தைக் கையளித்து, காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்துமாறு கேட்டுக்கொண்டது.

வாச்சிக்குடாக் கிராமம் காலம் காலமாக தமிழ் மக்கள் வாழ்ந்துவரும் பிரதேசமாகும். அங்குள்ள காணிகளுக்குச் சட்டரீதியற்ற முறையில் பணத்துக்காக 'பெர்மிட்' வழங்குவதாகக் குறைகூறப்படுகிறது.

வாச்சிக்குடாக் காணிகள் உடனடியாக காப்பாற்றப்படவேண்டும். மக்கள் போராட்டம் தொடங்கும் முன்னர் அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும்.

வாச்சிக்குடாப் பிரதேச தமிழ்மக்கள், தமது காணிகளில் வெளியார் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சமூகங்கள் இணைந்து நிம்மதியாக வாழ்கின்ற இவ்வேளையில், இக்காணி அபகரிப்பு முயற்சி மற்றுமொரு இன வன்முறைக்கு வித்திடும் செயலாக, சதித்திட்டமாகக் கருதவேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் வாச்சிக்குடா தமிழ்மக்கள் அனுபவித்த துயரங்களை நானறிவேன். இனிமேல் அந்நிலைமை வர அனுமதிக்க மாட்டேன்.

எனது கட்சித் தலைமைப்பீடத்துடம் தொடர்பு கொண்டேன். தொடர்பு கிடைக்கவில்லை. எனினும், இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

இதேவேளை, ஆலையடிவேம்பிலுள்ள கண்டல்குழி எனும் குளப்பிரதேசத்தை மண்போட்டு நிரப்பும் சதி வேலையும் நடைபெற்று வருகிறது. ஆலையடிவேம்பு மயானத்துக்கு முன்னாலுள்ள தமிழர் காணியாகிய கண்டல்குழி குளப்பிரதேசமும் அபகரிப்புக்குள்ளாக சதித்திட்டம் இடம்பெறுகிறது.

உரிய அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு இனமுறுகலைத் தவிர்க்கவேண்டும்.- என்றார். (ளி)

# கிழக்கு அரச உத்தியோகத்தர் விவரம் கணனிமயப்படுத்தல்!

திருகோணமலை, மே 20

கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தின் கீழுள்ள அரச உத்தியோகத்தர்களின் விவரங்கள் கணனிமயப்படுத்தப்படவுள்ளன.

கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களின் முழுமையான விவரங்களை கணனிமயப்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாக அலுவலகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு , அம்பாறை ஆகிய மூன்று மாவட் டங்களிலும் இப்பணி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (ளி)

# 'சீடா'நிறுவனத்தில் நிதிமோசடி; அதன் செயற்பாடுகளை நிறுத்துக!

## களுவாஞ்சிகுடி பிரதேச செயலரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, மே 20

களுவாஞ்சிகுடி 'சீடா' நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பாக உரிய கணக்காய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட உதவி செயலாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை தொடர்ச்சியாக 'சீடா' நிறுவன தலைவர் உதாசீனம் செய்ததினால் தங்களின் தலைமையில் கூட்டமொன்றை கூட்டவேண்டிய தேவை ஏற்பட்டதாக 'சீடா'நிறுவன செயலாளரால் கையொப்பமிடப்பட்டு,பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவசர கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பெரும்பாலான உறுப்பினர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த போதும், கூட்டம் நடத்தப்படவில்லை. இச்செயற்பாடானது பெரும் ஏமாற்றத்தை எமக்கு அளித்தது.

மேற்படி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு 'சீடா' நிறுவன செயற்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறோம்.

இக்கடிதத்தின் பிரதிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மற்றும் உதவி மாவட்ட செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ளி)




# பாலமுனை பொது நூலகத்துக்கு நுலகர் ஒருவரை நியமிக்குக!

## அட்டாளைச்சேனை தவிசாளரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, மே. 20

பாலமுனை பொது நூலகத்திற்கு நூலகர் ஒருவரை நியமிக்குமாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் எம். ஏ. அன்சிலிடம் பாலமுனை இளைஞர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இளைஞர் ஒன்றியத்தின் கோரிக்கையில் மேலும் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு:-

அட்டாளைச்சேனை பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற பாலமுனை பொது நூலகத்தில் தகுதியுள்ள நூலகர் ஒருவர் இல்லாமல் ஒரு தொழிலாளியும் தற்காலிக ஊழியர் ஒருவருமே கடமை புரிகின்றனர்.

இதனால் நூலகத்திற்கு வருகின்ற வாசகர்கள் பொதுமக்கள் பல்வேறு சிக்கல்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.

கல்வியறிவுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்ற நூலகங்கள் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும்.

ஆனால், பாலமுனை பொது நூலகத்தில் நூலகத்துடன் தொடர்பில்லாத ஊழியர்கள் கடமைபுரிவது கவலைக்குரிய விடயமாகும். பாலமுனை போன்ற பின்தங்கிய கிராமங்களில் முன்னேற்றத்திற்கு பெரும்பங்கு வகிக்கும் பொது நூலகத்தின் குறைபாடுகளை நிவர்த்திக்க இக்கிராமத்தில் பிறந்தவர் என்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்க நீங்கள் முன்வர வேண்டும்.

இதே நேரம், பாலமுனை பொது நூலகத்திற்கு நியமிக்கப்பட்ட நூலக உதவியாளர் ஒருவர், தனது கடமையைப் பொறுப்பேற்க முடியாமல் இழுத்தடிப்பதாக அறிகின்றோம். இந்த விடயத்தில் தனிப்பட்ட ஒருவரின் நலனை கவனத்தில் கொள்ளாது பாலமுனை மக்களின் நலனை கவனத்தில் கொண்டு குறிப்பிட்ட நூலக உதவியாளரை உடனடியாக தமது கடமையை பொறுப்பேற்கச் செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம் எனவும் அந்தக் கோரிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ளி)

# சிறுவர் துஷ்பிரயோகத்தில் அம்பாறை முதலிடம்!

## மனித அபிவிருத்தி தாபனம் கணிப்பு

அம்பாறை, மே 20

''சிறுவர் துஷ்பிரயோகத்தில் அம்பாறை மாவட்டம் முதலிடமாகத் திகழ்கிறது. இந்த ஆண்டில் மட்டும் 17 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 10 பாலியல் ரீதியானவையாகும்''.

-இவ்வாறு மனித அபிவிருத்தி தாபனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பீ. ஸ்ரீகாந் காரைதீவில் அதிபர்,ஆசிரியர் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கல்முனை மற்றும் சம்மாந்துறை வலய அதிபர், ஆசிரியர்களுக்கான பரீட்சை முன்னோடி கூட்டமொன்று காரைதீவு தலைமையகத்தில் கடந்த சனியன்று இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''எமது நிறுவனம் மனித அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு மலையகம் முதல் கிழக்கு வரை தனது பணிகளை விஸ்தரித்து சேவையாற்றி வருகின்றது.

குறிப்பாக மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுடன் கைகோர்த்து பல செயற்றிட்டங்களை செய்து வருகிறது.சர்வதேச ரீதியிலும் மனித உரிமைகள் விடயத்தில் வலுவான வலைப்பின்னலுடன் எமது தாபனம் இயங்கி வருகிறது.

இலங்கையில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல், துஷ்பிரயோகங்கள் குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பாரிய ஆய்வொன்றை செய்து வருகின்றது. அதே வேளை, அதனைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம்.

ஆணைக்குழுவோடு இணைந்து மாணவர், ஆசிரியர்,கல்வி அதிகாரிகள் ஏனைய அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் மனித உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்தி வருகிறோம்.

தேவையில்லாமல் நாம் மூக்கை நுழைப்பதில்லை. தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தாவிடின் இத்தவறுகள் சமுதாயத்தில் மேலும் அதிகரிக்கும். இவ்வாண்டு ஜனவரி முதல் மேமாதம் வரையிலான காலப்பகுதியில் மட்டும் இலங்கையில் 17 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறுவர் பாலியல் இவை பதிவு செய்யப்படாமலும் பல இருக்கலாம்.

சிறுவர் பாலியலில் பதிவு செய்யப்பட்ட 17 சம்பவங்களில் 10 சம்பவங்கள் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் இக்காலப் பகுதியில் 16 சிசுக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 8 சம்பவங்கள் அம்பாறை மாவட்டத்தில் சம்பவித்துள்ளன.

சிறுவர் கடத்தல் சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் 28 இடம்பெற்றுள்ளன. அவற்றில் அதிகூடிய சம்பவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இதைவிட சமூக கட்டொழுங்கு, குடும்பமானம், சிறுமிகளின் எதிர்காலம் போன்ற பல்வேறு காரணங்களால் பல பாலியல் சம்பவங்கள், துஷ் பிரயோகங்கள் பதியப்படுவதில்லை. அவை பல மாவட்டங்களிலும் தினமும் இடம்பெறத் தான் செய்கின்றன - என்றார். (ளி)

# உள்ளூராட்சிமன்றப் பிரிவுகளின் அபிவிருத்திக்கு உலக வங்கியின் உதவியுடன் விசேட திட்டம்

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கியின் உதவியுடன் விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

'நெல்சிப்' எனப்படும் இந்தத் திட்டத்தின் மூலமாக இம்மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளிலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

இவை இந்த வருடம் தொடக்கம் 5 வருட காலப் பகுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளன.இந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றப் பிரிவுக்கும் தலா ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

கிராம மட்டத்தில் மக்களினால் அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் அமுல்படுத்தப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தை மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளில் துரித கதியில் அமுல்படுத்துவது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டமொன்று கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.சத்தியானந்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உள்ளூராட்சி உதவியாளர்களும், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ளி)

# ஆலையடிவேம்பு பிரதேசத்தில் குழாய் நீர் வேலைத்திட்டம்

அம்பாறை, மே 20

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் எல்லைப்பிரதேசத்தில் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் வேலைத்திட்டம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் ஆரம்பிக்கப்பட்டு வீதிக் கரைகளில் குழாய் பதிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப்பிரதேசத்தில் 66 கிலோ மீற்றர் நீளமான குழாய்கள் உள்வீதிகளில் பதிக்கும் வேலைகள் நடை பெற்று கொண்டு வருகின்றன.

இந்த வருட இறுதிக்குள் ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள மக்களுக்கு குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்க முடியுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவிக் கிறார்.பொதுவாக அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிசபைகளின் பிரதேசத் தில் உள்ள மக்கள் சுத்தமான குடிதண்ணீர் பெறக்கூடிய ஒரு நிலைமை கிழக்கு அபி விருத்தித்திட்டத்தின் மூலம் கிடைத்துள்ளது. மாவட்டத்திலுள்ள பல உள்ளூராட்சி சபைகளின் பிரதேசங்களுக்கு ஏற்கனவே குழாய் மூலம் குடிதண்ணீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ளி)

# அம்பாறை பிரதேசத்தில் கடும் வெப்பம்

ஆலையடிவேம்பு, மே 20


அம்பாறைப் பிரதேசத்தில் வழக்கத்துக்கு மாறாக ஏப்பரல் மாதம் முதல் தொடர்ச்சியாக கடும் வெப்பநிலை நீடித்துக் கொண்டுவருகிறது.இதனால் குழந்தைகளும், முதியவர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தினசரி வைத்திய சிகிச்சைகள் பெற்றுகொண்டு வருகின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தவெப்பநிலை இருந்தபோதிலும், நுளம்புகளின் பெருக்கமும், டெங்கு நோயால் பாதிக்கப்படுவோரின் தொகையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வயல் நிலங்களில் நீர் இல்லாது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வெப்பம் தணிந்து மழை வேண்டி பரவலாக வழிபாட்டுத்தலங்களில் பிரார்த்தனைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. கால்நடைகளும்,காட்டு வனவிலங்குகளும் இந்த வெப்பமான காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளன. தினமும் கால்நடைகள் பரவலாக இறந்து கிடப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வாழ்வாதார உதவித் திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலைய வாழ்வாதார உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: நந்தன்)*

## மாணவர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே 20

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ உயர்தரத்தில் தரம் 13 இல் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களின் பரீட்சை விடைத்தாள்களில் மாணவர்கள் விடும் தவறுகள் பிரதம பரீட்சை மேற்பார்வையாளர்களால் சுட்டிக் காட்டப்படவுள்ளன. மேற்படி செயலமர்வை பிரபல விரிவுரையாளர்கள் நடத்தவுள்ளதால் தரம் 13 மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் கேட்டுள்ளது. (50-201)


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

18.05.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2242

வெற்றி எழுத்து: C
வெற்றி எண்கள்: 8 1 4 9 9 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 8 | 1 | 4 | 9 | 9 | 0 | ரூபா.12,230,763/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 1 | 4 | 9 | 9 | 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 1 | 4 | 9 | 9 | 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 07 |
| 3 பரிசுகள் | | | | 4 | 9 | 9 | 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 88 |
| 4 பரிசுகள் | | | | | 9 | 9 | 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 931 |
| 5 பரிசுகள் | | | | | | 9 | 0 | ரூபா. 100/= | பரிசுகள் 9162 |
| 6 பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 91403 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 1 | 4 | 9 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 08 |
| 8 பரிசுகள் | | 8 | 1 | 4 | 9 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 89 |
| 9 பரிசுகள் | | 8 | 1 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 946 |
| 10 பரிசுகள் | | 8 | 1 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 9134 |
| 11 பரிசுகள் | C | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 36482 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 8,705,200.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 12,902,819.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1191 நீலம்

18-05-2010

துலாம் 09 23 27 40

ஜக்பொட் பரிசு ரூபா. 3,791,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 156,831 | 20/- | 3,136,620/- |
| 2 இலக்கங்கள் | 14,463 | 40/- | 578,520/- |
| 1 இல. + லக்கினம் | 14,307 | 60/- | 858,420/- |
| 2 இல. + லக்கினம் | 1,262 | 200/- | 252,400/- |
| 3 இலக்கங்கள் | 395 | 1000/- | 395,000/- |
| 3 இல. + லக்கினம் | 35 | 10,000/- | 350,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,791,950/- | - |
| மொத்தம் | | | 5,970,960/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 187,300 | | 6,470,960/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,493,300/-

அலிந்திய வாசனாவ - லக்கி செவன் வெற்றியாளர்
ஜீ.லலித் உபரத்ன : களனி
எஸ்.எம்.மொஹமட் நலீர் : அக்குறணை

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

2010 மே 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பு திற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கண்டி | 401254891-2-17 |
| காலி | 401256025-8-49 |
| மட்டக்களப்பு | 401247904-2-47 |
| கண்டி | 401258949-8-06 |
| பொலன்னறுவை | 401255711-0-22 |


## இறைவன் எங்கும் நிறைந்தவர்

அத்வைதம் எங்கும் நிறைந்த இறைவன் ஒருவரே என்பதை நீங்கள் உணர்ந்து விட்டால் அதன் பின் அவருக்கு ஓர் உருவம் இருந்தாக வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது. எங்கும் நிறைந்த அவர் இல்லாத இடம் ஏதாவது இருக்க முடியுமா? இந்த உலகம் முழுவதும் இறைவனது மாளிகையானால் அதில் நுழைவதற்குரிய வாசலை எங்கே போய்த் தேடுவீர்கள்? தனியாக ஒரு வீதியும், ஒரு வீடும் இருந்தால் அந்தத் தெருவுக்குள் நுழைவதற்குரிய வாயிலும் இருந்தாக வேண்டும்.ஆனால் உண்மையில் அதற்குத் தெருவே இல்லையே. எங்கும் நிறைந்த இறைவன் எல்லா இடத்திலும் இருக்கும் போது தனியாக ஓரிடம் எப்படி இருக்க முடியும். அப்படி இல்லாத போது அவரை எங்கே போய்த் தேடிக் கண்டுபிடிக்கப் போகிறீர்கள்? அவர் இருப்பதற்கென்று தனியாக ஓரிடம் கிடையவே கிடையாது. அவர் எங்கும் எல்லாக் காலத்திலும் இருப்பவர் என்பதை நீங்கள் உணர்ந்து விட்டால் அதன் பின் பல்வேறு இடங்களிலும் காணப்படும் பிரதிபலிப்புக்களுக்குரிய ஒரு தோற்றப் பொருள் உண்மையாக தெய்வீக அனுபவம் அல்ல என்பதும் நீங்களே, ஆத்மாவே, அந்த ஒன்றே, எங்கும் எல்லாப் பொருள்களிலும் அதனுடைய முழு அளவில் நிரம்பியிருக்கிறது என்பதும் உங்களுடைய உண்மையான தெய்வீக அனுபூதியாக இருக்கும். எல்லாவற்றிலும்,எல்லா நேரத்திலும் (இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க) நிறைந்த இந்தத் தெய்வீகக் கோட்பாடே அத்வைதம் என அழைக்கப்படுகிறது.

வழிபாடு ஒன்றையே உடல் பெருங்கோயில், இறைவனே உள்ளிருப்பவர், உனது உடலே கோயில், உள்ளிருக்கும் ஜீவனே இறைவன். உன்னை நேசித்துக் கொள்வதைப் போல பிறரையும் நேசித்துக் கொள்ள வேண்டும். அதுவும் கோயில், இதுவும் கோயில். அங்கும் ஜீவன் இங்கும் ஜீவன். ஜீவன் ஒன்றே. (அங்கும் இறைவன் இங்கும் இறைவன்) இறைவன் ஒன்றே கோயில்கள் தான் பலவாகும்.

ஒரே மனிதன். மகன் அவனை அப்பா என்று அழைக்கிறான். மருமகன் மாமா என்று அழைக்கின்றான். சகோதரன் அண்ணா என்று அழைக்கின்றான்.ஒரே மனிதன் பல பெயர்களால் அழைக்கப்படுகிறான். பல பெயர்களில் அவனது தொடர்பை அனுபவிக்கிறார்கள். அனுபவங்கள் பலவாகும். அவற்றின் மூலம் ஒன்றே.ஒரே மனிதன், ஒருவனே அண்ணா, தந்தை, மாமா அனை வரும். மக்கள் இறைவனை அல்லா, ஜீசஸ், ஜாரா துஸ்டிரா, ராமர், கிருஷ்ணர், புத்தர் என்று பல விதமாகப் போற்றித் துதிக்கின்றனர். இவையெல்லாம் நமது உடல், உணர்வு சம்பந்தப்பட்ட உணர்வுகளே. உண்மையில் கடவுள் ஒருவரே. நாம் எத்தகைய வேறுபாடும் காட்டலாகாது. புத்தரை விரும்பினால் இறைவனை புத்தரின் வடிவில் வழிபடு. ஈசுவரனை விரும்பினால் இறைவனை ஈசுரவனின் வடிவில் வழிபடு. அல்லாவை விரும்பினால் அல்லாவாக வழிபடு. ஜீசஸை விரும்பினால் ஜீசஸ்ஸாக வழிபடு. எந்தப் பெயரில் வழிபட்டாலும் வழிபடு வது ஒன்றையே என்று அறி. இலட்சியம் ஒன்றே. இறைவன் ஒருவரே. தெய்வத்துவத்தைப் பற்றி எந்த வேறுபாடும் கொள்ளலாகாது.



சாயி சிந்தனை

## ஐடியல் அக்கடமியில் சனியன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மே20

யாழ்ப்பாணம், காரைநகர் ஆகிய இரு இடங்களில் இயங்கும் ஐடியல் அக்கடமிகளின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.நீராவியடியில் உள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி நிறுவனத்தின் இயக்குநர் வி. என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியற்றுறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி.வேல்நம்பி, யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நா.வன்னியசிங்கம், கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் தி.சோமசேகரம், காரைநகர் கலாநிதி தியாகராசா மகாவித்தியாலய அதிபர் திருமதி யு.சிறிஸ்கந்த ராஜா, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திருமதி க.லிங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் பெற்றோர்களா? ஆசிரியர்களா? என்ற தலைப்பில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் ஆசிரியர்கள் பங்கேற்கும் பட்டிமன்றமும் சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (50-9)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 ★ 01 ★ 1977



இறப்பு 30 ★ 05 ★ 2009

திருமதி சுதர்சினி குகனேஸ்வரன்
(S.D.O. உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மருதங்கேணி)

எம் அன்புச் செல்வமே!
மாறாதம்மா உன் பேச்சும் உன் சிரிப்பும்
ஆறாதம்மா எம் உள்ளம்
மறு பிறப்பொன்று எடுத்திடம்மா!
மறு படியும் வந்திடம்மா எம் உறவில்
தவிக்கும் உன் தனுவுக்குக் கூட
ஒரு தரிசனம் கொடுத்திடம்மா....

உன் பிரிவால் தவிக்கும்
அன்புக் கணவர்,
மகன் - பரணீதரன், அப்பா,
அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

T.P: 0779589690
E.Mail.: ravi 7948@ yahoo.Com.

(96612)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க.வித்தியாலயத்தில் அண்மையில் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியமலர் ஜோசவ் தலைமையில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்தந்தை ஏ.லோறன்ஸ் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யுனிசெவ் நிறுவனத்தின் அவசர கல்வித்திட்ட நிபுணர் சஜாட் இஸ்மாயில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# துரையப்பா விளையாட்டு மைதானமா? களியாட்ட அரங்கமா? பொதுமக்களும் விளையாட்டு அமைப்புக்களும் கேள்வி

யாழ்ப்பாணம்,மே 20

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானமா? களியாட்ட அரங்கா? என யாழ். குடாநாட்டு மக்கள் வினா எழுப்புகின்றார்கள்.

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் எந்தவொரு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவில்லையெனவும் பொதுமக்களும் விளையாட்டு அமைப்புகளும் கவலை தெரிவிக்கின்றன.

காலத்திற்கு காலம் இந்த மைதானத்தில் பாடசாலைகளின்போட்டிகள் உட்பட கழகங்களும் போட்டிகளை நடத்த முனைவதும் பின்னர் களியாட்டங்கள் நடத்துவதற்காக போட்டிகளுக்கான இடம் இரத்துச் செய்வதும் போன்ற நிகழ்வுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

400 மீற்றர் ஓட்டப்பாதையை உரிய விதி முறைகளுக்கு அமைவாக அமைக்கக் கூடிய ஒரு மைதானம் துரையப்பா விளையாட்டுமைதானம் மட்டுமே என்பதும் சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

அடுத்த வாரம் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் தடகளப் போட்டியாவது துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமா எனப் பலரும் எதிர்பார்க்கின்றார்கள். (6-86)

## கரப்பந்தாட்டப் போட்டியில் முத்துக்குமாரசுவாமி ம.வி முதலிடம்

யாழ்ப்பாணம்,மே 20

நடைபெற்று வரும் மாவட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகளில் கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலயம் கரப்பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் (ஆண்கள்) முதலிடத்தையும் 15 வயதுப் பிரிவில் (ஆண்கள்) மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. (6)

# சண்டிலிப்பாய் இந்துவின் நான்கு அணிகள் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு!

யாழ்ப்பாணம்,மே 20

யாழ்.மாவட்ட மட்டப் பெருவிளையாட்டுக்களில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நான்கு அணிகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாயுள்ளன.

அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்டப் பெருவிளையாட்டுக்களில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 10 அணிகள் போட்டிகளில் பங்குபற்றின.

இதில் 15 வயது, 17 வயது ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த வலைப்பந்தாட்ட அணிகளும் - 15 வயது ஆண்களுக்கான கரப்பந்தாட்ட அணியும் 15 வயது பெண்களுக்கான கரப்பந்தாட்ட அணியும் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன.

வலிகாம வலயப் பாடசாலைகளில் அதிகூடிய விளையாட்டு அணிகள் மாவட்ட மட்டத்தில் பங்குபற்றிய பாடசாலையாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இம்முறை மிளிர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6-9)

## பாடசாலைகளுக்கு இடையேயான மாவட்ட மெய்வன்மைப் போட்டி

வலி.வடக்கு,மே20

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவக கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் அணிகள் இப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன. (6-86)



சண்டிலிப்பாய் கோட்டம், வலிகாமம் வலயத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் 11 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை மாணவன் அ.யொனியோய் அதிபர் ஆ. நோபேட் உதயகுமாருடன்.....

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### கரப்பந்தாட்டப் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,மே 20

கரப்பந்தாட்டப் பயிற்றுநர்கள், வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமையும், 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையானது யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணியின் வேண்டுகோளின் பேரில் இலங்கைக் கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் வளவியலாளர்களினால் நடத்தப்படுகின்றது.

இந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பு 'கி.மனோகரன், இல 186/26, புருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரியில் சங்கத்தின் செயலாளருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-6)

# தென்மராட்சிப் பிரதேசத்தின் உதைபந்தாட்டம்; கிண்ணம் கைப்பற்றியது மட்டுவில் வளர்மதி வி.க.!

யாழ்ப்பாணம்,மே 20

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உதைபந்தாட்டச் சம்பியனானது மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சான்றோர் விளையாட்டுக்கழகம் மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நாவற்குழி சான்றோர் விளையாட்டுக் கழகத்தை 4:2 எனும் கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இந்தச் சுற்றுப் போட்டியில் தென்மராட்சிப் பிரதேசத்தின் 16 அணிகள் களமிறங்கியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (6- 207)

# மீசாலை சீமா வி.க. கிரிக்கெட் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 20

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் கிரிக் கெட் அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மீசாலை சீமா விளையாட்டுக்கழக கிரிக்கெட் அணி சம்பியனானது.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் வி.க. கிரிக்கெட் அணியைத் தோற்கடித்து சம்பியனாகியது.

சுற்றுப் போட்டியில் 28 அணிகள் பங்கு பற்றியதால் மட்டுவில் மோகனதாஸ் வி.க.மைதானம், மட்டுவில் வளர்மதி வி.க மைதானம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்பட்டன. (6-207)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடமாகாண மாவட்டங்களின் அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆரம்பித்து வைப்பதையும் போட்டியில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோயிஸ்டுகளுடன் பேச்சுக்குத் தயார்!

## வன்முறையைக் கைவிடுவதாக அறிவித்தால்



புதுடில்லி,மே.20

குறைந்தபட்சம் 72 மணிநேரம் வன்முறையை கைவிடுவதாக அறிவித்தால், மாவோயிஸ்டுகளுடன் பேச்சு நடத்த தயார் என்று, மத்திய உள்துறை மந்திரி ப. சிதம்பரம் அறிவித்தார். சத்தீஷ்கார், ஜார்கண்ட் உள்ளிட்ட 5 மாநிலங்களில் மாவோ யிஸ்டு தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

வன்முறையை கைவிட்டு சமரச பேச்சுக்கு வரும்படி, மத்திய அரசு சார்பில் அழைப்பு விடப்பட்டும், மாவோயிஸ்டுகள் அதை ஏற்க மறுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில், சத்தீஷ்கார் மாநிலம், தாண்டேவாடா மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை பயணிகள் பஸ்ஸை மாவோயிஸ்டுகள் தகர்த்ததில் 50 பேர் பலியானார்கள்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, மத்திய உள்துறை மந்திரி ப.சிதம்பரம், சி.என்.என்.-ஐ.பி.என். டி.வி. நிகழ்ச்சிக்கு பேட்டி அளித்தார். அப்போது, சமரச பேச்சுக்களை நடத்த முன்வரும்படி மாவோயிஸ்டு தீவிரவாதிகளுக்கு அவர் மீண்டும் அழைப்பு விடுத்தார்.

குறைந்தபட்சம் 72 மணி நேரத்துக்காவது முழுமையாக வன்முறை செயல்களில் ஈடுபடமாட்டோம் என்று மாவோயிஸ்டுகள் உறுதியளித்தால் அவர்களுடன் பேச்சுகளை நடத்த தயார் என்றும், சம்பந்தப்பட்ட மாநில முதல்-மந்திரிகளும் இந்த பேச்சுகளில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வதாகவும் பேட்டியின்போது அவர் தெரிவித்தார்.

அப்படி வன்முறையை கைவிடுவதாக அவர்கள் உறுதி அளித்தால், அந்த கால கட்டத்தில் பாதுகாப்பு படையினரும் மாவோயிஸ்டுகளுக்கு எதிராக எத்தகைய தாக்குதல் நடவடிக்கையையும் மேற்கொள்ள மாட்டார்கள் என்று ப.சிதம்பரம் தெரிவித்தார். அதே நேரத்தில், இது போன்ற பேச்சுகளுக்கான அழைப்பை அவர்கள் முக்கியமாகக் கருதாமல் போலி நாடகமாடி வருகிறார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்து தீவிரவாதிகள் பல்வேறு குண்டு வெடிப்புகளில் தொடர்புடைய இந்து தீவிரவாதிகள் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த ப.சிதம்பரம்,

''இந்து தீவிரவாதிகள் என்று கூறாதீர்கள். தீவிரவாதிகள் என்றால், அவர்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் தீவிரவாதிகள்தான் - என்றார்.

அதே நேரத்தில், ஆஜ்மீர் மற்றும் மெக்கா மசூதி குண்டு வெடிப்பில் இந்த பிரிவை சேர்ந்தவர்களுக்கு தொடர்பு இருப்பதற்கு ஆதாரம் இருப்பதாக கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# 'லைலா' புயலின் எதிரொலி; தமிழ்நாட்டில் பலத்த மழை!

வங்கக்கடலில் உருவான 'லைலா' புயல் சென்னைக்கு அருகே மையம் கொண்டுள்ளது. இதனால், வடதமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றுடன் பலத்த மழை பெய்யும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும், கடந்த சில நாட்களாக 'அக்னி நட்சத்திர' வெயில் சுட்டெரித்து வந்தது. இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை சென்னையிலிருந்து 1000 கிலோமீற்றர் தொலைவில் வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானது. கடந்த செய்வாய்க்கிழமை காலை அது புயலாக வலுவடைந்து, சென்னையில் இருந்து 700 கிலோ மீற்றர் தென்கிழக்கே மையம் கொண்டு இருந்தது. இந்த புயலுக்கு 'லைலா' என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

'லைலா' புயல் குறித்து, சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வெளியிட்ட சிறப்பு அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு:-

''லைலா'' புயல், சென்னையிலிருந்து கிழக்கு-தென்கிழக்கே 400 கிலோ மீற்றர் தூரத்திலும், விசாகப்பட்டினத்துக்கு தென் கிழக்கே 600 கிலோ மீற்றர் தூரத்திலும் மையம் கொண்டு இருந்தது. இதன் விளைவாக 18ஆம் திகதி கடந்த செவ்வாய்க் கிழமை மாலை அல்லது இரவு முதல் வடக்கு தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திரா கடலோர மாவட்டங்களில் பரவலாக ஆந்திர கடலோர மாவட்டங்களில் மணிக்கு 65 முதல் 75 கிலோ மீற்றர் வேகத்திலும், புதுச்சேரி மற்றும் வடதமிழ்நாடு கடலோர மாவட்டங்களில் 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்திலும் காற்று வீசும், கடலில் சீற்றம் அதிகரித்து அலைகள் அதிக உயரத்துக்கு எழும்பும், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறது. நேற்று (புதன்கிழமை) காலை வரை, தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்றுடன் பரவலாக பலத்த மழை பெய்யக்கூடும். நேற்று அதிகாலையில், ஆந்



திர மாநிலம் ஓங்கோல்-விசாகப்பட்டினம் இடையே புயல் கரையை கடக்கும்.''

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த சில நாட்களாக கோடை வெயில் கொளுத்திய நிலையில், நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. இதனால் வெப்பம் சற்று தணிந்தது. மாலையில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்தது.

லைலா புயல் காரணமாக, தஞ்சை, நாகை மாவட்டங்களில் நேற்று முன்தினம் இரவில் மழை பெய்தது. திருச்சி மற்றும் புறநகர் பகுதிகளிலும் கடந்த திங்கட்கிழமை இரவில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் பல மரங்கள் வேரோடு சாய்ந்தன. 40இற்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் சாய்ந்ததால், மின்சாரம் துண்டிக்கப்பட்டு நகரின் பல பகுதிகள் இருளில் மூழ்கின.

புதுச்சேரி மற்றும் வடகடலோர மாவட்டங்களிலும் கடந்தசெவ்வாய்க்கிழமை மாலை மழை பெய்தது.

'லைலா' புயல் காரணமாக, ஆந்திர கடலோர மாவட்டங்களில் பலத்த மழையுடன் 65 முதல் 75 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று விசாகப்பட்டினம் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

இதனால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக விசாகப்பட்டினத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, அதிகாரிகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இந்தியச் செய்திகள்

# நித்யானந்தவின் வழக்கு ஒத்திவைப்பு!

பெங்களூர்,மே 20



பாலியல் வழக்கில் நித்யானந்தாவின் பிணை மனு மீதான விசாரணையை மே 26ஆம் திகதிக்கு. ஒத்திவைத்து கர்நாடக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

நடிகை ரஞ்சிதாவுடன் நெருக்கமாக இருப்பதுபோன்ற வீடியோ காட்சிகள் தனியார் தொலைக்காட்சி சேனல்களில் கடந்த மார்ச் மாதம் ஒளிபரப்பப்பட்டமையை அடுத்து நித்யானந்தா மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இமாச்சலப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட அவரிடம் சிஐடி பொலிஸார் விசாரணை நடத்திய பிறகு அவர் மே 26ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் ராம்நகர் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் பிணை கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விடுமுறை கால நீதிபதி கெம்பண்ணா முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மனு மீதான விசாரணையை நீதிபதி மே 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# மாவோயிஸ்டுகளின் கடையடைப்பால் 5 மாநிலங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

புதுடில்லி,மே20

பீகார், சத்தீஷ்கார் உள்பட 5 மாநிலங்களில், மாவோயிஸ்டு தீவிரவாதிகளின் 2 நாள் பந்த் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டிராக்டர் எரிக்கப்பட்டது. பந்த் காரணமாக பல ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. துப்பாக்கி ஏந்திய பொலிஸார் 24 மணி நேரமும் ரோந்து சுற்றிவருகிறார்கள்.

சத்தீஷ்கார் மாநிலம் தாண்டேவாடா பகுதியில், கடந்த திங்கட்கிழமை தனியார் பஸ்ஸை கண்ணி வெடி வைத்து சிதைத்த மாவோயிஸ்டுகளின் செயலால், பொலிஸார் உள்பட 40 பேர் உடல் சிதறி இறந்தனர். இந்த நிலையில், சிறையில் உள்ள மாவோயிஸ்டு தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும். தங்கள் மீது பொலிஸார் நடத்தும் தாக்குதலை நிறுத்தவேண்டும் என்பது உள்பட 4 கோரிக்கைகளை வற்புறுத்தி, 2 நாள் கடையடைப்பு நடத்தப்போவதாக, மாவோயிஸ்டுகள் அறிவித்து இருந்தனர்.

இதன்படி, பீகார், சத்தீஷ்கார், ஜார்கண்ட், மேற்கு வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் பந்த் நேற்றுமுன்தினம் காலை தொடங்கியது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. முழு அடைப்பையொட்டி பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ரயில்கள் ரத்து பீகார், ஜார்கண்ட் மாநிலங்களை உள்ளடக்கிய கிழக்கு மத்திய ரெயில்வே, 8 ரயில்களை ரத்துச் செய்திருக்கிறது. பீகார் மாநிலம் பாட்னா-பர்கானா பாசஞ்சர் ரயில், கர்வா-சிங்கரேலி ரயிலும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. சக்திபுஞ்ச் எக்ஸ்பிரஸ், ராஞ்சி எக்ஸ்பிரஸ் உள்பட 6 ரயில்கள் மாற்றுப் பாதையில் விடப்பட்டன.

மேலும், ரயில்களை குறைந்த வேகத்தில் தான் ஓட்டவேண்டும் என்று, ரயில் சாரதிகளுக்கு, கிழக்கு மத்திய ரயில்வே அறிவுரை வழங்கி இருக்கிறது. ராஜஸ்தானி எக்ஸ்பிரஸ் ரயில்கள் 75 கிலோமீற்றர் வேகத்துக்கு மேல் செல்லக் கூடாது உத்தரவிடப்பட்டு உள்ளது.

கடந்த மார்ச் மாதம் மாவோயிஸ்டுகள் பந்த் நடத்தியபோது, கயா அருகே ரயிலின் 8 பெட்டிகளை மாவோயிஸ்டுகள் கவிழ்த்து விட்டனர். அந்த இடத்தில் பொலிஸ் ரோந்து பலப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கு இடம் ஏற்பட்டால், ரயில்கள் வரும் முன் அந்த பாதையில், சோதனை ஓட்டமாக ஓர் என்ஜினை மட்டும் ஓட்டிப்பார்க்கலாம் என்றும் ரயில்வே துறை தனது ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கிருக்கிறது.

தண்டவாளத்தில் கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் கருவியுடன், ரயில்வே பொலிஸார் ரோந்து சென்று வருகிறார்கள்.

# கடலோரக் காவல் படையில் அதிநவீன யுத்தக் கப்பல்!

சென்னை,மே20

சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்படும், கிழக்கு கடலோர காவல் படையில், வரவான, 'விஸ்வஸ்த்' எனும் அதிநவீன போர்க் கப்பல் சேர்க்கப்பட்டுள்ளது.

'விஸ்வஸ்த்' போர்க் கப்பல், கோவா கப்பல் கட்டும் தளத்தில் உருவாக்கப்பட்டது. கப்பலை இயக்க நவீன இயந்திரங்கள், அதிநவீன தகவல் தொடர்பு சாதனங்கள் உட்பட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. புயல் மற்றும் இரவிலும், எதிரிகளை கண்காணிக்க, 'இன்ப்ரா ரெட்' தொழிநுட்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

இக்கப்பல், ஒரு ஹெலிகாப்டர், ஐந்து மோட்டார் படகுகளை கையாளும் திறன் பெற்றது. 'விஸ்வஸ்த்' 90 மீற்றர் நீளமும், 2,400 டொன் எடையும் கொண்டது. இக்கப்பலை 26, 'நொட்ஸ்' வேகத்தில் இயக்கும் வகையில், 9,100 கிலோ வோட் திறன் கொண்ட இரு டீசல் என்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் சீரான வேகத்தில் 4,500, 'நோட்டிகல் மைல்' தொலைவு வரை செலவும், தொடர்ந்து, 17 நாட்கள் கடலிலேயே இருக்கும் தன்மை பெற்றது. ஆபத்தான சூழ்நிலைகளை சமாளிக்க, நவீன போர்க்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. 'விஸ்வஸ்த்' போர்க் கப்பல், இன்று காலை 7 மணிக்கு சென்னை துறைமுகத்திற்கு வரவுள்ளது. துறைமுகத்தி நடக்கும் நிகழ்ச்சியில் தலை[illegible] 'விஸ்வஸ்த்' கப்பலை [illegible] காவல் படைக்கு ஒப்படைக்கிறார்.

# தேசிய கீதத்துக்கு அவமரியாதை: சானியா மீதான வழக்கு தள்ளிவைப்பு



முசாபர் நகர், மே.20

உத்தரபிரதேச மாநிலம் முசாபர் நகரில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தேசிய பெண்கள் டென்னிஸ் போட்டி நடந்தது. இதன் தொடக்க விழாவில் கலந்துகொண்ட இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, தேசிய கீதத்துக்கு அவமரியாதை செய்தார் என, முசாபர் நகர் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. சட்டத் தரணி [illegible] காரணமாக எந்த சட்டதரணி களும் நீதிமன்றத்திற்கு வரவில்லை. எனவே இந்த வழக்கை நீதிபதி விகாஸ் கோயல், அடுத்த மாதம் 25ஆம் திகதிக்கு தள்ளிவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பரபரப்பு

# வீரர்கள் மீதான விசாரணை விவரம் தொலைக் காட்சியில் ஒளிபரப்பு!

லாகூர்,மே20

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரில் பாகிஸ்தான் அணி மோசமான தோல்வியைச் சந்தித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பெரும் சர்ச்சை கிளம்பியது.

இது தொடர்பாக அந்நாட்டக் கிரிக்கெட் சபை சார்பாக அமைக்கப்பட்ட குழு, விசாரணைகளை நடத்தி சில வீரர்களுக்கு ஓர் ஆண்டுத் தடையும், 2 வீரர்களுக்குக் காலவரையற்ற தடையும் விதித்தது.

வீரர்கள் ஒற்றுமை இல்லாமல் செயற்பட்டதே அணியின் மோசமான தோல்விக்கு முக்கிய காரணம் என்று விசாரணை அறிக்கை முடிவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் விசாரணை அறிக்கையில் அந்த சுற்றுப்பயணத்துக்கான பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர்களான இன்திஹாப் ஆலம், அகிப் ஜாவித் ஆகியோர் அளித்த வாக்கு மூலங்கள் பாகிஸ்தான் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொலைக்காட்சியில் வெளியான விவரங்கள் வருமாறு:-

சொய்ப் மாலிக் எதிர்மறையானவர். மோசமான எண்ணம் கொண்டவர். நியூஸிலாந்துச் சுற்றுப்பயணத்தின்போது அவரை நாட்டுக்குத் திருப்பி அனுப்பலாம் என்று நினைத்தோம். ஆனால், அணித்தலைவர் முகமது யூசுப்பின் வற்புறுத்தலால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் விக்கெட் காப்பாளராக இருந்த கம்ரன் அக்மல் 4 பிடியெடுப்புக்களைத் தவறவிட்டார். அதோடு ஒரு 'ரன்-அவுட்' வாய்ப்பையும் நழுவவிட்டார். அவர் 'ரன்-அவுட்'டைத் தவறவிட்டதை 100 வீதம் கிரிக்கெட் சூதாட்டம் என்று சொல்லவில்லை. அதேநேரத்தில் இதில் வலுவான சூதாட்டச் சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது.

இது குறித்து எனக்கு நன்கு தெரியும். நானே 1998ஆம் ஆண்டில் இதனால் பாதிக்கப்பட்டேன். தக்க ஆவணங்களைச் சமர்ப்பித்தமையால் நான் தப்பினேன்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 'ருவென்ரி-20' போட்டியில் ராணா நவித்தின் ஆட்டம் சந்தேகம் அளித்தது. யூனிஸ்கான் சிறப்பாகச் செயற்படும் வீரர்களை ஊக்குவிக்கவில்லை.

இன்ஸமாம் வீட்டில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட சில வீரர்கள், யூனிஸ்கான் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் பார்த்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தனர் என சொய்ப் மாலிக் எங்களிடம் தெரிவித்தார். கம்ரன் அக்மல் ஆட்டத்தின் போக்கை நிர்ணயிப்பவர். ஆனால், அவர் முக்கிய கட்டத்தில் ஆட்டமிழந்த விதம் மோசமாக இருந்தது. அவரை ஆட்டத் தரத்தைக் காக்கும்படி கூறினேன்.

இவ்வாறு பயிற்சியாளர்கள் இருவரும் தங்கள் கருத்தைப் பதிவு செய்துள்ளனர்.

## "இது ஆபிரிக்காவின் நேர[ம்]"



"இது ஆபிரிக்[கா]வின் நேரம்" என[்ற] உலகக் கிண்ண 'தீம்' பாடலை பிரப[ல] கொலம்பிய பொ[ப்] பாடகி ஷகீரா இயற்றியுள்ளார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் 11ஆம் திகதி ஜோகனஸ்பார்க் சாக்கர் சிட்டி மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிக்காக "இது ஆப்பிரிக்காவின் நேரம்" என்ற புதிய தீம் பாடல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீம் பாடலை பிரபல கொலம்பிய பொப் நட்சத்திரம் ஷகிரா இயற்றியுள்ளார்.

இந்தப் பாடலுக்கு தென்னாபிரிக்க இசைக்குழுவான ப்ரெஸ்லிகிரவுண்ட் இசையமைத்துள்ளது.

உலகக் கிண்ண ஆரம்ப விழா நிகழ்ச்சியின்போது ஷகீரா இந்தப் பாடலை மேடையில் பாடவுள்ளார். அதேபோல இறுதி நாள் நிகழ்விலும் இந்தப் பாடல் இடம் பெறஉள்ளது.




# 2ஆவது நோட்டீஸுக்குப் பதிலளிக்க மோடிக்கு கால அவகாசம் நீடிப்பு

மும்பை,மே 20

லலித் மோடிக்கு அனுப்பப்பட்டிருந்த இரண்டாவது நோட்டீஸுக்குப் பதிலளிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். அமைப்பின் தலைவராக இருந்து பதவியிறக்கம் செய்யப்பட்ட லலித்மோடிக்கு, இந்தியக் கிரிக்கெட் சபை அனுப்பிய முதலாவது நோட்டீஸுக்குச் சமீபத்தில் பதிலளித்திருந்தார்.

இதற்கிடையில், இங்கிலாந்தில் ஐ.பி.எல்.போட்டி ஒன்றை நடத்த முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக லலித் மோடிக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸுக்கு நாளைய தினத்திற்குள் (21ஆம் திகதி) பதிலளிக்கவேண்டும் என்று கெடு விதிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று லலித் மோடி விடுத்த வேண்டுகோளை ஏற்ற இந்தியக் கிரிக்கெட் சபை எதிர்வரும் 31ஆம் திகதி வரை கால நீட்டிப்பு செய்துள்ளது.

முன்னர் வழங்கிய விளக்கக் குறிப்புகள் 12 ஆயிரம் பக்கங்களில் வழங்கியிருந்தார். இந்நிலையில், இந்த இரண்டாவது நோட்டீஸுக்கு எத்தனை பக்கங்களில் பதிலளிக்கப் போகின்றார் என்பது குறித்து இப்போதே எதிர்பார்ப்புக் கிளம்பியுள்ளது.

# தெ.ஆபிரிக்க வீரர்களை பயிற்சியாளர் திட்டினார்



ஜோகன்னஸ்பார்க், மே 20

உலகக் கிண்ண 'ருவென்ரி-20' தொடரில் தோல்வியடைந்தமையால், தென்னாபிரிக்க வீரர்களை பயிற்சியாளர் வோன் ஜில் கடுமையாகத் திட்டியுள்ளார். எனினும், இதன் காரணமாக அணியில் பிளவு எதுவும் ஏற்படவில்லை என ஆல்பி மோர்கல் தெரிவித்துள்ளார்.

1998இல் டாக்காவில் நடந்த வில்ஸ் சர்வதேசக் கிண்ணம் முதல் இன்று வரையிலும் தென்னாரிக்க அணி, எந்த ஒரு சர்வதேசத் தொடரின் இறுதிச் சுற்றுக்கும் முன்னேறியது இல்லை.

2003இல் சொந்த மண்ணில் நடந்த உலகக் கிண்ணத் (50 ஓவர்கள்) தொடரிலும் முதல் சுற்றுடன் வெளியேறியது. தற்போது மூன்றாவது 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரிலும் மோசமாக தோல்வியடையந்தது.

இதனால், அணியின் பயிற்சியாளரான வோன் ஜில், வீரர்களைக் கடுமையான திட்டியுள்ளார். இதனால், அணியில் பிளவு ஏற்பட்டுள்ளது எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், இதனை ஆல்பி மார்கல் மறுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

''இம்முறையும் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டமை எமக்குப் பெரும் ஏமாற்றமாகிவிட்டது. எல்லோரும் எங்களைக் கேலி செய்கிறார்கள். ஏனெனில் எங்களை நம்பியுள்ள ரசிகர்களை நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்று கிறோம்.

சர்வதேச தொடரை வென்று 12 ஆண்டுகளாகிவிட்டது. இந்த நெருக்கடி தொடர்வதால், ஸ்மித் தலைமையிலும் சாதிக்க முடியவில்லை. அதாவது இன்னும் எங்களுக்கான நேரம் வரவில்லை என நினைக்கிறேன்.

''தோல்வியால் சோகத்தில் இருந்த எங்கள் ஒவ்வொருவரையும், பயிற்சியாளர் வோன் ஜில், கடுமையான வார்த்தைகளால் திட்டினார். இதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். ஏனெனில் எதிர்காலத்திலும் இதுபோன்ற நிலை ஏற்படக்கூடாது.

அணித்தலைவர் ஸ்மித் சிறப்பாகச் செயல்படுகிறார். எனினும், அணிக்கு புதிய ரத்தத்தைப் பாய்ச்சும் வகையில் சில கடினமான முடிவுகளை அவர் எடுக்கவேண்டும்.'' - என்றார்.

# ஏ.சி.மிலான் அணியை விற்பதற்கு இத்தாலியப் பிரதமர் சில்வியோ முடிவு

ஏ.சி.மிலான் உதைபந்தாட்ட அணியை விற்பதற்கு, அந்த அணியின் உரிமையாளரும் இத்தாலி பிரதமருமான சில்வியோ புருலுஸ்கானி முடிவுசெய்துள்ளார்.

இத்தாலிப் பிரதமரும் தொழிலதிபருமான சில்வியோ புருலுஸ்கானிக்குச் சொந்தமான புகழ்பெற்ற உதைபந்தாட்ட அணியான ஏ.சி.மிலான் தற்போது விற்பனைக்குத் தயாராக உள்ளது என இத்தாலி வாரப் பத்திரிகையான 'ஏ' செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த அணியை விற்பது குறித்துத் தாம் கனத்த மனதுடன் முடிவு எடுத்துள்ளார் எனத் தனது சக அரசியல்வாதிகளிடம் புருலுஸ்கானி தெரிவித்துள்ளார் எனவும் அந்தப் பத்திரிக்கை கூறியுள்ளது.

1986ஆம் ஆண்டு புருலுஸ்கானி, ஏ.சி. மிலான் அணியை வாங்கினார். சுமார் 24 ஆண்டு காலம் ஏ.சி.மிலான் புரு லுஸ்கானி வசம் இருந்தது.

இந்தக் காலப்பகுதியில் 5 தடவைகள் 'சம்பியன்ஸ் லீக்' உதைபந்தாட்டத் தொடரில் பட்டம் வென்றதும் குறிப்பிடத்தக்கது.

அனேகமாக ஏ.சி.மிலான் அணி, ரஷ்யாவின் தொழிலதிபர் ஒருவருக்கு விற்கப்படவுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இங்கிலாந்தின் பிரபல அணியான செல்சி, ரஷ்யாவின் தொழி லதிபரான ரோமன் அப்ரோம்விச்சுக்குச் சொந்தமானது என்பதும் குறிப்பிடத் தக்கது.



# காலை உடைத்தவர் மன்னிப்புக் கோரினார்



ஜேர்மன் அணித்தலைவர் மைக்கல் பல்லாக்கின் கணுக்காலைக் குறிவைத்துத் தாக்கிய கெவின் பிரின்ஸ் போடங்க் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுள்ளார்.

ஜேர்மன் அணித்தலைவர் மைக்கல் பல்லாக்கின் கால் உடையக் காரணமாக இருந்தவர் கானா வீரர் கெவின் பிரின்ஸ் போடங்க்.

கடந்த சனிக்கிழமையன்று 'எவ்.ஏ.' கிண்ண உதைபந்தாட்ட இறுதியாட்டத்தின் போது செல்சி வீரரான மைக்கல் பல்லாக்கிடமிருந்து போர்ட்ஸ்மவுத் வீரர் கெவின் பிரின்ஸ் போடங்க் பந்தைக் கைப்பற்ற முயற்சித்தார். அப்போது மைக்கல் பல்லாக்கின் கணுக்கால் உடைந்து போனது.

இதன் காரணமாக அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத் தொடரியில் ஜேர்மன் அணித்தலைவரான மைக்கல் பல்லாக் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பல்லாக்கின் காலை உடைத்த கெவின் பிரின்ஸ், அவரிடம் பகிரங்க மன்னிப்பு கேட்டுள்ளார்.

''நான் செய்தது முட்டாள்த்தனமானது. ஏற்கனவே பல்லாக்கி டம் இரு முறை மன்னிப்புக் கேட்டுவிட்டேன். தற்போது மூன்றா வது முறையாகவும் பகிரங்க மன்னிப்பு கேட்கிறேன்'' என்று அவர் உருக்கமாகக் கூறியுள்ளார்.

கெவின் பிரின்ஸ் போ்டங்க் ஜேர்மனியில் பிறந்து வளர்ந்தவர். இவரது தந்தை போடங்க், கானா நாட்டை சேர்ந்தவர். தாய் பெர்லின் நகரைச் சேர்ந்தவர். கெவின் பிரின்சின் சகோதரர் ஜெரோம் போடங்க் இந்த உலகக் கிண்ணப் போட்டியின் போது ஜேர்மன் அணிக்காக விளையாடவுள்ளார். அதேவேளையில் கெவின் பிரின்ஸ் கானா நாட்டுக்காக விளையாடவுள்ளார் என்பது தெரிந்ததே.

# கிளார்க்குக்கு பொண்டிங் ஆதரவு!

சிட்னி, மே 20

''கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஆஸ்திரேலிய 'ருவென்ரி-20' அணியின் தலைவராக இருக்கும் மைக்கல் கிளார்க், சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். எதிர்காலத்திலும் அவர் சாதிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.''

- இவ்வாறு கிளார்க்குக்கு ஆதரவாகக் கருத்துக் கூறியுள்ளார் பொண்டிங்.

மூன்றாவது 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில், ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்தது. இதையடுத்து இத்தொடர் முழுவதும் துடுப்பாட்டத்தில் சொதப்பியமையால், கிளார்க்கின் அணித்தலைவர் பதவிக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளின் தலைவர் பொண்டிங் கூறியுள்ளவை வருமாறு:-

கிளார்க்கின் செயற்பாடு குறித்து இப்போது விமர்சனம் எழுந்துள்ளது. பல ஒருநாள் போட்டிகளில் அவருடன் இணைந்து விளையாடியுள்ளேன். ஆனால், 'ருவென்ரி-20' போட்டிகளில் நான் விளையாடவில்லை. இருப்பினும், இதில் அணித்தலை வராகச் செயற்படும் கிளார்க், கடந்த ஒன்றரை ஆண்டுகளாகச் சிறப்பாகவே செயற்பட்டு வருகிறார். எதிர்காலத்தில் அவர், ஆஸ்திரேலியக் கிரிக்கெட்டுக்குப் பல வெற்றிகளைத் தேடித்தருவார்.

இதனிடையே வரும் ஒக்டோபரில் ஒரு நாள் போட்டித் தொடரில் பங்கேற்க, இந்தியா செல்லு ஆஸ்திரேலிய அணியை, சில டெஸ்ட் போட்டிகளிலும் பங்கேற்குமாறு இந்தியக் கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டது. இது வரவேற்கத்தக்கது. ஏனெனில் இது, இங்கிலாந்துக்கு எதிராக நவம்பரில் ஆரம்பமாகவுள்ள ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கு, நல்ல பயிற்சியாக இருக்கும். இந்தியத் தொடரின் அட்டவணை மாற்றத்துக்காகக் காத்திருக்கிறோம்.

- இவ்வாறு பொண்டிங் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் பாங்கொக்; ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவர்கள் சரண்!

பாங்கொக்,மே20

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் அரசுக்கு எதிராக இரு மாதங்களுக்கு மேலாக ஆர்ப்பாட்டம் நடத்திவந்த செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவர்கள் நேற்று புதன்கிழமை நண்பகல் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இதையடுத்து, தலைநகர் முழுவதும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டது என இராணுவம் பிரகடனம் செய்தது.

இதற்கு முன்னர் பாங்கொக்கின் கீழ்ப் புறநகரம் நேற்று புதன்கிழமை காலை யுத்தகளமாக மாறியது. செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களால் போடப்பட்டிருந்த மூங்கில் தடுப்புகள், நிர்மாணிக்கப்பட்டிருந்த முகாம்கள் ஆகியவை அதிரடியாகப் பாய்ந்த படையினரால் நிர்மூலமாக்கப்பட்டன. ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், படையினரை நோக்கி எறிகுண்டுகளை வீசினார்கள்.

இதையடுத்து, படையினர் வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்தனர். இதற்குப் பின்னர் மூண்ட மோதலில் இரு ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டார்கள். இத்தாலிய ஊடகப் படப்பிடிப்பாளரொருவர் பலியானார். இருவெளிநாட்டு ஊடகவியலாளர்களும், 15 தாய்லாந்து வாசிகளும் காயமடைந்தார்கள்.

தலைநகரின் ஒரு பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை இராணுவம் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனினும், நண்பகல் செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களின் ஏழு உச்சமட்டத தலைவர்கள் தாமாகவே முன்வந்து சரணடைந்தார்கள்.



''எங்களுடைய ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்படுவதை எங்களால் பார்க்கவோ, பொறுக்கவோ முடியாது. அதனால், நாங்கள் இரத்தக் களரி அவ லங்களைத் தவிர்க்கும் பொருட்டும், தடுக்கும் பொருட்டும் சரணாகதி அடைகிறோம்'' என அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

கைதுசெய்யப்பட்டதும் முக்கிய தலைவரான நட்டாவுட் சய்குவா, ஆதரவாளர்களை நோக்கி பேசும்போது, ''சகோதரர்களே, சகோதரிகளே, நீங்கள் அவலத்துக்குள் வீழ்வதை என்னால் பார்க்க முடியாது. இவ்விடத்தை நோக்கிவந்த உங்களை நான் வரவேற்றேன். எனினும், இடர்பாட்டில் நீங்கள் சிக்கி அவதிப்படக் கூடாது'' என்றார்.

''அமைதியாக வீடு செல்லுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன், எனினும், எங்களுடைய இதயங்கள் எப்போதும் உங்களுடனேயே இருக்கும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்கிறோம். தயவு கூர்ந்து வீடுகளுக்குத் திரும்புங்கள்'' என்றும் அவர் உருக்கமான வேண்டுகோளொன்றையும் விடுத்தார்.

''தலைநகரில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பொலிஸாரும், இராணுவச் சிப்பாய்களும் தற்போது தங்கள் அதிரடி நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளார்கள்'' என இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சான் சேர்ன் கவிகாமனர்ட் தெரிவித்தார்.

அதேவேளை, வட கிழக்கு மாகாணமான உடன்தானியில் செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச அலுவலங்களுக்குத் தீ மூட்டி ஆர்ப்பரித்தார்கள் என தகவல்கள் வெளியாகின. இதையடுத்து, கலவரத்தைக் கட்டுப்படுத்த இராணுவத் தலையீட்டை உடன் தனி ஆளுநர் கோரியிருந்தார்.

பாங்கொக் நகரில் சுமார் 5,000 இற்கு மேலான போராட்டக்காரர்கள் சாலைகளில் அமர்ந்து அரசுக்கு எதிராக எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர். சிலநேரங்களில் இவர்கள் கடைகளை எரித்து வன்முறையில் ஈடுபட்டதால் மக்கள் அச்சமின்றி நடமாடத் தயங்கினர்.

பிரதமர் அபிசித் வெஜஜிவா தலைமையிலான அரசு, பதவி விலகாதவரை தாங்கள் பாங்கொக்கைவிட்டு வெளியேறப் போவதில்லை என்பதில் போராட்டக்காரர்கள் உறுதியாக இருந்துவந்தனர்.

எப்படியும் போராட்டக்காரர்களை நகரில் இருந்து விரட்டியடிக்கவேண்டும் என்பதில் அபிசித் வெஜஜிவா தலைமையிலான அரசு உறுதியாகவிருந்தது. இதையடுத்தே அதிரடி இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## அழிவின் விளிம்பில்...



ருமேனியாவின் கருங்கடல் பகுதியில் உள்ள ''மமையா' கடற்கரை பகுதியின் அழகிய தோற்றத்தைப் பறைசாற்றும் இந்த படம் 2001 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. அடுத்த 20 ஆண்டுகளில் இந்த கடற்பகுதி முற்றிலுமாக அழிந்து போகும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். கடந்த 45 ஆண்டுகளில் 5,440 ஏக்கர் நிலப் பகுதி கடலில் மூழ்கியுள்ளது. 173 ஏக்கர் பரப்பில் புதிய மணல் பரப்பு உருவாகியுள்ளது என்று கடல் ஆராய்ச்சி நிபுணர் சிமோன் நிகோலெவ் தெரிவித்துள்ளார்.

# ஆப்கான் பஹ்ராம் விமானப் படைத் தளம் மீது தலிபான் தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல்

காபூல்,மே 20

ஆப்கானிஸ்தானிலுள்ள பிரதான பஹ்ராம் விமானப் படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்திய தலிபான் தீவிரவாதிகள் மீது, இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். நேட்டோ படையைச் சேர்ந்த ஐந்து சிப்பாய்கள் காயமடைந்தார்கள் என நேட்டோ தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானிலுள்ள மிகப் பெரிய இராணுவத் தளங்களில் பஹ்ராமும் ஒன்று. இதில் பெரும்பாலும் அமெரிக்கத் துருப்புகளே நிலைகொண்டுள்ளன. பஹ்ராம் விமானத்தளம் மீது தாக்குதலை மேற்கொண்ட தலிபான் தீவிரவாதிகளுக்கும், படையினருக்குமிடையே மூண்ட துப்பாக்கிச் சமர் நீடித்துக்கொண்டிருக்கிறது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலிபான்கள் நேட்டோ படைச் சிப்பாய்களைக் குறிவைத்து செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 20 பேர் பலியாயினர்.

உலக அரங்கில்

பலியானவர்கள் அனைவருமே பொதுமக்கள் என்று அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

காபூல் நகரில் நாடாளுமன்றம், வெளிநாட்டவரால் நடத்தப்படும் வைத்தியசாலை, இராணுவ பணியாளர் தேர்வு மையம், நீர்வள மற்றும் ஆற்றல் அமைச்சக அலுவலகம் ஆகியவை அமைந்துள்ள முக்கியமான பகுதியில் இந்தத் தாக்குதலை தலிபான்கள் நடத்தியுள்ளனர்.

இந்தப் பகுதியில் முக்கியமான அலுவலகங்கள் அமைந்துள்ளதால், இங்கு முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்வர். இதனால் எப்போதும் இந்தப் பகுதி தீவிர



பஃராம் விமானப் படைத் தளம்

பாதுகாப்பு எல்லைக்குள் இருக்கும். இந்த தீவிர பாதுகாப்பையும் மீறி வெடிகுண்டு நிரப்பிய காரை வெடிக்கச் செய்து தலிபான்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடக்கும்போது பயணிகள் பஸ் ஒன்று அந்த இடத்தில் வந்துள்ளது. வெடிகுண்டு வெடித்ததில் பஸ் தூக்கியெறிப்பட்டது. பலியானவர்களில் பெரும்பாலானோர் இந்த பஸ்ஸில் பயணித்தவர்கள் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் கொடூரமானது. இதில் 20இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என்று ஆப்கானிஸ்தான் இராணுவத்துறை தலைமை மருத்துவர் அகமதுஷியா தெரிவித்துள்ளார். ஆனால், இந்தத் தாக்குதலில் 12 பேர் பலியாகியுள்ளனர். 48 பேர் காயமடைந்துள்ளனர் என அரசு கூறியுள்ளது.

நேட்டோ சிப்பாய்களைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தக் கார்க்குண்டுத் தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். ''ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்துள்ள மேற்கத்திய படைகளுக்கு எதிராகவே இந்தத் தாக்குதலைத் தொடுத்தோம்'' என்று தலிபான் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹெத் கூறினார்.

# பிரிட்டிஷ் இராணி எலிசபெத் மறைவு என போலிச் செய்தி

## பி.பி.ஸி. வானொலி மன்னிப்புக் கோரியது

லண்டன்,மே 20



பிரிட்டிஷ் இராணி 2 ஆம் எலிசபெத் இறந்துவிட்டார் என லண்டன் வானொலியில் தவறாக அறிவித்தல் விடுக்கப்பட்டமைக்கு பி.பி.ஸி. வருத்தம் தெரிவித்துள்ளது. பிரிட்டிஷ் அரசு செய்தி நிறுவனமான பி.பி.ஸியின் சார்பில் டபிள்யூ.எம். என்ற வானொலி ஒலிபரப்பாகிறது. அதில் திங்கட்கிழமை மதியம் டேனி கெல்லி என்ற தொகுப்பாளர் பாடல்களை ஒலிபரப்பிக்கொண்டிருந்தார்.

பிரிட்டிஷ் இராணி எலிசபெத் மரணம் அடைந்துவிட்டார் என பி.பி.ஸி. வானொலி அறிவிப்பாளர் டொனி கெல்லி அறிவித்தார். அதற்கு முன்னர் அவர் தேசிய கீதத்தை ஒலிபரப்பினார். அது ஒலிபரப்பாகிக்கொண்டிருக்கும்போதே நேயர்களுக்கு முக்கியமான அறிவிப்பு என்று கூறி, இராணி எலிசபெத் இறந்துவிட்டார் என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பு பர்மிங்காம் நகரிலும், மேற்கு மிட்லாண்ட் பகுதியிலும் ஒலிபரப்பானது. இது மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. அவர் வேடிக்கையாக எதையோ சொல்ல முயன்று அது தொடர்பாக இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அது மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியது.

இராணி எலிசபெத் உயிருடன் இருக்கும்போதே அவர் இறந்துவிட்டார் என எப்படி அறிவிப்பு செய்யலாம் என்று பலரும் கண்டனம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து பி.பி.ஸி. வானொலி வருத்தம் தெரிவித்துக்கொண்டது. அந்த அறிவிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பி.பி.ஸி. அறிவித்தது.

# ஒபாமாவின் கென்யா அத்தை அமெரிக்காவில் தங்க அனுமதி

பாஸ்டன்,மே20

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தந்தை கென்யாவைச் சேர்ந்தவர். அவரது சகோதரியும் ஒபாமாவின் அத்தையுமான ஜெயிட்டுனி ஒனியாங்கோ சட்டத்துக்குப் புறம்பாக அமெரிக்காவில் குடியேறியவர் ஆவார்.

அவர் 2000 ஆம் ஆண்டு அமெரிக்காவில் குடியேறினார். அப்போது அவர் அரசியல் தஞ்சம் கேட்டு மனு செய்தார். ஆனால் அவரது கோரிக்கையை ஏற்க அரசு மறுத்துவிட்டது.

2004 ஆம் ஆண்டு அவருக்கு நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவைப் புறக்கணித்த ஜெயிட்டுனி, இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்நிலையில், அவருக்கு அமெரிக்காவில் தங்குவதற்கு அனுமதி அளித்து அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவு அவரது வழக்கை [illegible] னார்டு அலுவலகத்துக்கு வந்தது. இதை அரச சட்டத்தரணி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலினால் பாதிப்புற்ற மின் விநியோகம் இன்று முற்றாக வழமைக்குத் திரும்பும்

## நம்பிக்கை தெரிவிக்கிறார் மின்சார சபை அதிகாரி

யாழ்ப்பாணம்,மே20

நேற்று முன்தினம் இரவு வீசிய "லைலா" புயலினால் பாதிப்படைந்திருந்த மின்சார விநியோகம் இன்று வியாழக்கிழமை வழமைக்குத் திரும்பும் என இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'லைலா' புயலின் போது பனை, தென்னை மரங்கள் முறிந்து மின்சார விநியோகக் கம்பிகள் மீது வீழ்ந்ததினால் யாழ். குடாநாடு முழுவதும் பரவலாக மின் விநியோகம் தடைப்பட்டது.

இதனால் யாழ்.நகர், மானிப்பாய், மாகியப்பிட்டி, அளவெட்டி, உரும்பிராய், இணுவில், வடலியடைப்பு, காரைநகர், அராலி, சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

மின்சார சபையினர் உடனடியாக மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக நேற்றைய தினமே 80வீதமான பாதிப்புக்கள் சீர்செய்யப்பட்டு விட்டன. 20வீதமான பணிகள் இன்று வியாழக்கிழமை நிறைவு செய்யப்படும். அதனைத் தொடர்ந்து மின் விநியோகம் வழமைக்குத் திரும்பும்.

தாழ்ந்த மின்னழுத்தமுடைய மின்சார கம்பிகள் சீர்செய்யப்பட்டுள்ளன. உயர் அழுத்த மின்சார கம்பிகளையே சீர்செய்ய வேண்டியுள்ளது - என்றார். (50-14)

# மேல் நீதிமன்ற நீதிபதியாக பரமராஜா பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், மே20

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியாக சுப்பிரமணியம் பரமராஜா நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதுவரை மேல்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிவந்த இ.த. விக்னராஜா கடந்த 15ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றதையடுத்தே அவரது இடத்துக்கு எஸ். பரமராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 17ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தில் தமது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளார். இதற்கு முன்னர் இவர் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய உதயனின் 8ஆம் பக்கத்தில் முன்னாள் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா என்பதற்குப் பதிலாக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி என்று பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (50)

# பருத்தித்துறை - கொழும்பு பஸ் மீது நொச்சியாகமவில் வைத்து கல்வீச்சு

வடமராட்சி,மே20

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி இரவு நேரம் சென்றுகொண்டிருந்த பஸ் மீது நொச்சியாகமம் பகுதியில் வைத்து கற்கள் வீசப்பட்டதால் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி நொருங்கியது.

கடந்தவாரம் (14ஆம் திகதி இரவு) இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து குறிப்பிட்ட பஸ்ஸின் சாரதி நொச்சியாகமம் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

சம்பவ தினத்தன்று இரவு பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பருத்தித்துறைச்சாலை போக்குவரத்துச் சபை பஸ் சென்றுகொண்டிருந்த போது நொச்சியாகமப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் பஸ்ஸை நோக்கி கல் ஒன்றை வீசியதால் பஸ்ஸின் கண்ணாடிகள் நொருங்கின. எனினும் சாரதிக்கோ, பயணிகளுக்கோ எதுவித தாக்கமும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் குறித்து பஸ்ஸின் சாரதி நொச்சியாகமப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்த பின்னர் பஸ் கொழும்பு நோக்கிச் சென்றது.

சேதமடைந்த பஸ்ஸின் முன்பக்க கண்ணாடிக்குப் பதிலாக புதிய கண்ணாடி கொழும்பிலிருந்தே பொருத்தப்பட்டு அந்த பஸ் மீண்டும் சேவையில் ஈடுபடுகின்றது. (50-236)

# மயிலியதனைக் கடலில் நீந்தச் சென்றவர் மாயம்!

கெருடாவில்,மே20

கெருடாவில் மயிலியதனைக் கடலில் நீந்தச் சென்ற இளைஞர் ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் கெருடாவில் வடக்கு, மயிலியதனையைச் சேர்ந்த நிர்மலானந்தன் நிராஜ் (வயது24) என்பவரே காணாமல்போயுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது - நேற்று நண்பகல் நண்பர்களுடன் கடலுக்கு குளிக்கச் சென்ற பிரஸ்தாப இளைஞர் வீடு திரும்பவில்லை, இவருடன் கூடிச் சென்றவர்கள் வீடு திரும்பி இளைஞர் காணாமல்போன சம்பவத்தினை உறவினர்களுக்கு கூறியுள்ளனர்.

இதன்பின்பு படகுகளின் உதவியுடன் தேடுதலில் ஈடுபட்டிருந்தாகவும் எனினும் எதுவித பயனும் எட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-10-253)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை வருடாந்த வைகாசிப் பெருவிழா

வடமராட்சி,மே 20

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வாக நாளை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வருடாந்த வைகாசிப் பெருவிழா, ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலை மையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமாகும் நிகழ்வில் ஞானபண்டித சேவாசுரபி வைத்தியகலாநிதி சி.கதிரைவேற்பிள்ளை வாழ்த்துரை நிகழ்த்துவார்.

இளைப்பாறிய ஆசிரியர் பிரபல எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகலிங்கம் தலைமையில் "ஒரு திருமுருகன் வந்தான்" என்னும் தலைப்பில் கவியரங்கம் சிறப்பு நிகழ்வாக நடைபெறும். இக்கவியரங்கில் த. அஜந்தகுமார், வேல்நந்தகுமார், க.க.சிந்துதாசன், சி.அ.தில்லைராசன் ஆகிய கவிஞர்கள் பங்கேற்பார்கள்.

இவ்விழாவில் வைத்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவி ஒருவருக்குத் துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாக வழங்கப்படும். (50-236)

# ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் நடமாடும் சேவை 2ஆவது நாளாக இன்றும்

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம்,மே20

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவும் தொழில் திணைக்களமும் இணைந்து நடத்தும் இருநாள் நடமாடும் சேவை நேற்றுப் புதன்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமானது. இன்று வியாழக்கிழமையும் இந்தச் சேவை நடைபெறும்.

ஊழியர் சேமலாப நிதியைச் சகலரும் தாம் வசிக்கும் பிரதேசத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக இந்த நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

ஊழியர், சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கிவருவோர் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய நடமாடும் சேவையில் ஊழியர் சேமலாப நிதிபதில் அத்தியட்சகர் நாயகம் திருமதி எஸ்.சமரசிங்க, மேலதிக அத்தியட்சகர் வடிவேலு பாஸ்கரன் உள்ளிட்ட 10 உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பெரும் எண்ணிக்கையானோர் நேற்று இடம்பெற்ற முதல்நாள் சேவையில் கலந்துகொண்டு தமது சேமலாப நிதி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொண்டதாக யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் தெரிவித்தார். இந்த நடமாடும் சேவை இன்றும் தொடரும். (50-224)

# மினிபஸ்ஸில் பயணித்த பெண்ணின் தங்கச் சங்கிலி மாயமாய் மறைந்தது

யாழ்ப்பாணம்,மே20

மினிபஸ்ஸில் பயணம் செய்த இளம் பெண்ணின் தங்கச் சங்கிலி மாயமாய் மறைந்துள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பெண் ஊழியரின் தங்கச் சங்கிலியே மினிபஸ்ஸில் காணப்பட்ட சன நெரிசலில் காணாமல் போய்விட்டதாகத் தெரியவருகின்றது.

இணுவிலில் மினி பஸ்ஸில் ஏறிய அவர் அலுவலகம் சென்று பார்த்தபோது கழுத்தில் இருந்த சுமார் நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி காணாமல் போயுள்ளமை தெரியவந்தது.

மினிபஸ்ஸில் அதிகமான பயணிகளை ஏற்றுவதும், பின்னர் "பின்னால் போ பின்னால் போ" என பஸ் நடத்துநர்கள் பிரயாணிகளை மிரட்டியும், வேண்டத்தகாத சொற்களைக் கூறியும் மிகவும் நெரிசலான முறையில் ஏற்றுவதும் வழக்கமாகிவிட்டது.

உரிய நேரத்திற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் வராமையால் இத்தகைய துன்பங்களுக்கு பொது மக்கள் நாளாந்தம் உள்ளாகிவரும் நிலையைத் தொடர்ந்து பயணிகள் அங்கலாய்த்து வருகின்றனர். (50-68)

# மதுபான சாலைகள் 27,28இல் மூடப்படும்

யாழ்ப்பாணம்,மே20

வெசாக் தினத்தை முன்னிட்டு 27ஆம் திகதியும் மறுநாள் 28ஆம் திகதியும் நாடு முழுவதும் உள்ள மதுபான சாலைகள் மூடப்படவேண்டும் என மதுவரி ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ஒ-10)

# வெள்ள நிவாரணம் குறித்து சபையில் இன்று அறிக்கை

கொழும்பு,மே 20

தற்போது பெய்துவரும் அடை மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசு இன்று நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடும்.

அரசின் பிரதம கொறடாவும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன நாடாளுமன்றில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணியளவில்கூடியது. வாய்மூல விடைக்கான நேரத்தைத் தொடர்ந்து தற்போதைய அடை மழை நிலைமை தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் கேள்வி எழுப்பினார்.

அந்தக் கேள்விக்குப் பதிலளித்த அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன இந்த நிலைமை தொடர்பாக- பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பது தொடர்பாக - அரசு நாளை (இன்று) சபையில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று கூறினார். (சி)

# இலக்கிய சொற்பொழிவு

கொழும்பு,மே20

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் "இராமவதாரம்" என்ற தலைப்பில் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தவிருக்கின்றார். (ஒ)

# ஆலோசனையும் வழிகாட்டலும் சேவைக்கான ஆசிரியர்களுக்கு இன்று நியமனக் கடிதம்

அச்சுவேலி,மே20

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த 30 பாடசாலைகளில் "ஆலோசனையும் வழிகாட்டலும் சேவைக்கு" நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று வியாழன் பிற்பகல் 1மணிக்கு நடைபெறும்.

யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஆசிரியர் வளநிலையத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி.அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களைக் கையளிக்கின்றார்.

முதற்கட்டமாக யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த வண் ஏ.பி., வண்-சீ தரப் பரீட்சைகளுக்கு நியமிக்கப்பட்ட 30 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படு தாகவும் அதனைத் தொடர்ந்து ஏனைய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட விருப் பதாக வும் வடக்குமாகாண கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-11)

# குறிகாட்டுவானில் இளைப்பாறும் மண்டபம்

யாழ்ப்பாணம்,மே20

குறிகாட்டுவானில் தற்காலிக இளைப்பாறும் மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த இளைப்பாறும் மண்டபத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளைத் தீவகம் தெற்கு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

சுற்றுலாப்பயணிகளின் வசதி கருதி இந்த இளைப்பாறும் மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இந்த மண்டபத்தை அமைப்பதற்குக் ஒப்பந்தக்காரரிடம் இருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளன. (50-224)

# ஆறுகளில் நீரோட்டம் அதிகரிப்பு; ஆபத்தைத் தவிர்க்க அறிவுறுத்து!

கொழும்பு,மே 20

தற்போது தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள ஆறுகள், குளங்களில் நீராடுவதைத் தவிர்க்குமாறு இளைஞர்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

வெள்ளம் காரணமாகஆற்றின் நீரோட்டம் வேகமாக இருப்பதால் அதில் நீராடவோ, விளையாடவோ [illegible] வும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

எத்தகைய திறமையான நீச்சல்காரராக இருந்தாலும் வெள்ளம் ஏற்பட்டுள்ள காலத்தில் ஆறுகளிலும், குளங்களிலும் நீராடச் செல்வது ஆபத்தானது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள கிணறுகளையும், நீரூற்றுகளையும் சுத்தமாக [illegible] சுகாதார அமைச்சு பொதுமக்களைக் கேட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த செவ்வாய்க்கிழமை சனல் - 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய வீடியோக் காட்சியில் வெளியிடப்பட்ட புகைப்படங்களே இவை.
கைகள் கட்டப்பட்டு பதுங்கு குழி ஒன்றுக்குள் இருத்திவைக்கப்பட்டவர்களை இராணுவ வீரர் ஒருவர் எடுத்துக்கொண்ட புகைப்படமே இப்போது வெளியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.
(படங்கள்: இணையம்)

# துணுக்காய் கல்வி வலயத்தில் இயங்கும் இராணுவ முகாமை உடனே அகற்றுக

## நாடாளுமன்றில் வினோ எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மே 20

மாங்குளம் - துணுக்காய் கல்வி வலயக் கட்டடத்தில் இயங்கிவரும் இராணுவ முகாமை உடன் நீக்கி அங்கு கல்வி நடவடிக்கையை முன்னெடுக்க உதவுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. வினோநோதராதலிங்கம் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற கல்வி தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் மீள் குடியமர்த்தப்பட்ட இடங்களில் உள்ள பாடசாலைகளில் அமைப்பிட வசதிகள் எவையுமில்லை. மாணவர்கள் வெறுங்கால்களுடன் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். அவர்களுக்குச் சீருடைகள் கூட இல்லை.

அப்பாடசாலைகளில் குடிதண்ணீர் இல்லை. பாடசாலைக் கட்டடங்கள் யுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நஷ்டஈடு கோரி விண்ணப்பித்துக் காத்துக் கிடக்கின்றனர்.

யுத்தத்தால் கொல்லப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரின் மரணச் சான்றிதழ்களைப் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், கொல்லப்பட்ட ஆசிரியர்கள் 'அக்ரகார' காப்புறுதியைப் பெற முடியாத நிலையில் அந்த ஆசிரியர்களின் குடும்பங்கள் உள்ளன.

தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கான பரீட்சையில் தோற்றுவதற்கு யுத்தம் தடையாகவிருந்தது. அவர்கள் பல தடவை முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை.

வன்னியில் முன்பள்ளி ஆசிரியர்கள், ஆசிரிய சேவையில் உள்வாங்கப்படாமல் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றனர். வன்னியில் உயர்கல்வி நிறுவனங்கள் எவையுமில்லை.

மாங்குளத்தில் உள்ள துணுக்காய் கல்வி வலயக் கட்டடத்தில் இராணுவ முகாம் இயங்கிவருகின்றது. இந்த முகாம் நீக்கப்படவேண்டும்.

வன்னி மக்களின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக நாம் பல தடவைகள் நாடாளுமன்றில் கூறியிருக்கின்றோம். ஆனால், எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நான் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் கல்வி அமைச்சர் தீர்த்து வைக்கவேண்டும். வன்னி மாணவர்களின் கல்வி நடவடிக்கையைத் தடையின்றி முன்னெடுக்க கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

## தவணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் குறிப்பிட்ட பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் தவணைப் பரீட்சைகள் யாவும் அந்தந்தப் பாடசாலைகளிலேயே நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, தேர்ச்சி பெற்ற சிரேஷ்ட ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலை ரீதியாக வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தயாரிக்கப்படும் வினாத்தாள்கள் உரிய நியமங்களையும், பண்பு சார் தரத்தினையும் கொண்டிருப்பதை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கல்வியமைச்சு வலியுறுத்தியுள்ளது.

தவணைப் பரீட்சை வினாத்தாள் அச்சிடும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய செலவினங்களை மேற்கொள்வதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதி அல்லது பாடசாலை மேம்பாட்டு நிதியினைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (சி)

## போர்க் குற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனான 13 வயது டைய பாலச்சந்திரன் அவரது மெய்க்காப் பாளர்களுடன் இலங்கைப் படைகளிடம் சரணடைந்தபோது, அவரது தந்தை எங்கே என்று விசாரிக்கப்பட்ட பின்னர், சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் இந்த இராணுவ அதிகாரி கூறினார்.

இந்த விடயத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபையினதும், செயலாளர் நாயகத்தினதும் செயற்பாடுகள் நம்பிக்கையளிக்கக் கூடியவையாக அமையவில்லை என்று சாடியுள்ள 'சனல் - 4' இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

2009 ஓகஸ்டில் சீருடை அணிந்த இலங்கை இராணுவத்தினரால் தமிழர்கள் நெற்றிப் பொட்டில் சுட்டுக்கொல்லப்படுவதைக் காண்பிக்கும் வீடியோ ஆதாரங்கள் கிடைத்தன.

ஐக்கிய நாடுகள் சபை இது உண்மையானது என உறுதி செய்தது.

### அனைவரையும் கொலை செய்ய உத்தரவு!

மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவின் பேரிலேயே இவ்வாறான கொலைகள் இடம்பெற்றன என இலங்கை இராணுவத்தின் மூத்த தளபதியொருவரும், இராணுவச் சிப்பாயும் அப்போது எமக்குத் தெரிவித்தனர்.

''எமது தளபதி அனைவரையும் கொலை செய்யுமாறு உத்தரவிட்டார். நாங்கள் அனைவரையும் கொன்றோம்'' என முன்னரங்குகளில் பணிபுரியும் சிப்பாய் ஒருவர் தெரிவித்தார்.

''நிச்சயமாக அனைவரையும் தீர்த்துக் கட்டிவிடுமாறே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும்'' என இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரியொருவரும் தெரிவித்தார்.

### தீவிரப்போக்குடையோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்

''தீவிர போக்குடைய எவரையும் உயிருடன் வைத்திருக்க விரும்பினோம் என நான் கருதவில்லை. இதன் காரணமாக அவர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறான உத்தரவுகள் மேலிடத்திலிருந்தே வந்தன என்பது தெளிவான விடயம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றன எனக் குற்றஞ்சாட்டப்பட்ட போதிலும், இலங்கை அரசு இதுவரை சுயாதீன விசாரணையைத் தவிர்த்து வந்துள்ளது.

எனினும், யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றமைக்கான தடயங்கள் தொடர்ந்தும் கிடைக்கின்றன.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெற்ற வெற்றியின் முக்கியத்துவம் காரணமாக, கிளர்ச்சிகளை எதிர்கொள்ளும் ஏனைய நாடுகளும் இலங்கை அரசின் முன்மாதிரியைப் பின்பற்ற முயல்கின்றன. சர்வதேச சட்டத்தை இலங்கை அரசு மீறியது என சர்வதேச வழக்கறிஞர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் குற்றம்சாட்டுகின்றனர்.

இலங்கை அரசு மோதலில் ஈடுபட்டவர்களையும், ஈடுபடாதவர்களையும் பிரித்துப் பார்க்கத் தவறியதன் மூலமும், பொதுமக்களைக் கொலைசெய்தது மற்றும் அவர்களுக்குத் துயரங்களை ஏற்படுத்தியதன் காரணமாகவும் சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்தியது என ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் லண்டனில் இடம்பெற்ற நிகழ்வில் குறிப்பிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## லைலா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 'லைலா' புயல் காரணமாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் மழை பெய்து வருகிறது என்று இரு நாடுகளின் வானிலை அவதான நிலையங்களும் தெரிவிக்கின்றன. (சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான் கீ - மூனின் அரசியல் பிரதிநிதியான லியன் பாஸ்கோவை விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்க பான் கீ - மூன் திட்டமிட்டுள்ளார் எனவும், இலங்கை அரசு அனுமதி வழங்கியவுடன் பாஸ்கோவின் விஜயம் இடம்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் 'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிற்கும் பான் கீ மூனின் 'நிபுணர்கள் குழுவிற்கும்' இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன எனவும் சொயிஸ் சொங் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறான ஆணைக்குழுக்களையும் உருவாக்க முடியும் எனவும், அவை நிபுணர்கள் குழு நியமனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்தைப் போன்று ஜனாதிபதி ஆணைக் குழுவை நிறுவியமை வரவேற்கத்தக்கது எனவும் சொயிஸ் சொங் பாராட்டியுள்ளார்.

கடந்தகால நெருக்கடி நிலைமைகளை ஆராய்வதற்காக நல்லிணக்க ஆணைக் குழுவில் 8 பேரை கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்தமை தெரிந்ததே. (அ-சி)

## 'நாற்று' செய்திமடல் வெளியீடு இன்று

யாழ்.வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவின் 'நாற்று' செய்தி மடல் - 2 வெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக லயன். டாக்டர் வி.தியாகராசா கலந்துகொள்வார்.

'நாற்று'க்கான வெளியீட்டுரையினை வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் செல்வி ஜெயா தம்பையா நிகழ்த்துவார்.

கருத்துரையினை கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலன் நிகழ்த்துவார். (ஒ-10)

## வீடியோவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களுக்கு சிறிதளவு உயிரிழப்புகள் கூட ஏற்படக்கூடாது என இராணுவத்துக்கு கண்டிப்பான உத்தரவு வழங்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

### லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் சொன்னவை

சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்புவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்னர்தான் இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்திடம் கருத்துக் கேட்டது என்று துணைத்தூதர் அம்சா பி.பி.ஸி.தமிழோசைக்குத் தெரி வித்தார்.

இந்த ஒளிநாடாவை தங்களிடம் முன்னதாகவே பகிர்ந்துகொண்டிருந்தால் அதன் நம்பகத்தன்மையை சரிபார்த்துக் கருத்துக் கூறியிருக்கமுடியும். ஆனால், அப்படியான அவகாசம் தங்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் அம்சா சுட்டிக்காட்டினார்.

ஆனால் போர்க்காலத்தின் இறுதி நாள்களில் விடுதலைப் புலிகளால் பொதுமக்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து மக்களை விடுவிக்கவே அரசுப்படைகள் மனிதநேய நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் அம்சா கூறினார். எனினும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களையும் விசாரிப்பதற்கு ஜனாதிபதியால் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

வெளிவந்துவிட்டது
O/L-பனரச-2010
5-பாடங்கள்-55வினாத்தாள்கள் விடையுடன்
(சிங்கள மொழிபெயர்ப்பு)
O/L-ENGLISH Medium-Panarasa-2010
5-Subjects-55 -Question& Answer
தரம்-10மாணவர்களுக்கான பனரச-2010
5-பாடங்கள்-55வினாவிடை
Grade-10-Panarasa -2010
5-Subjects-55 -Question& Answer
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விலைக்கழிவு வழங்கப்படும்.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். சாவகச்சேரி.
222 9881 (c/567752) 227 0003

பகிரங்க ஏலவிற்பனை
யாழ்.பழைய பூங்கா வளாகத்தினுள் மாவட்டத்தொழிற் பயிற்சி நிலையக்கட்டடம் அமைய உள்ள இடத்தில் தடையாகவுள்ள பெறுமதி வாய்ந்த மலைவேம்பு, வாகை ஆகிய இரு மரங்கள் மே மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இந்த ஏலவிற்பனையில் மரங்களைப்பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வாரத்தினுள் மரங்களை அகற்றுதல் வேண்டும். மேற்படி மரங்களைப்பார்வையிட விரும்புபவர்கள் யாழ். மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். (ஏ)

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வகுப்பு
(மாலை நேர வகுப்பு 6.00-8.00)
ஆரம்பம் : 24-05-2010 திங்கள்
(பி. பகல். 6.00-8.00 வரை)
☆ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும். (திங், புதன், வெள்ளி, சனி)
☆ ஒரு பிரிவில் 40 மாணவர்கள் மட்டும்.
☆ அனுமதிகள் 23-05-2010க்கு முன் பதிவு செய்யவும்.
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

O/L Day Class
இலவசப் பிரிவு ஆரம்பம்
21-05-2010 வெள்ளி 8.00 மணி
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2012 வர்த்தகப் பிரிவு
கணக்கீடு பொருளியல் வணிகக்கல்வி
A.P. Pagieerathan NB.கஜீதரன் S.யசோ
(நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்)
NEC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.